மார்ச்
2014
ரூ. 25/-
இறக்கை : 3 இறகு : 3

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்



# புலம் நலிந்த களம்

**கட்டுரை** இரா.எட்வின், சாளை பஷீர், ஏகன், முகிலன், தஞ்சாவூர் வி.அ.இளவழகன், பே.சக்திவேல், ஜோ டி குரூஸ், ம.இலெ.தங்கப்பா, குணன், இன்குலாப்

**கவிதை** ஆறாவயல் பெரியய்யா, கோசின்ரா, பூர்ணா, ரா.அல்பின் லியோன், அபிமானி, பூஅ.இரவீந்திரன்

**சிறுகதை** நா.வி[illegible]நாதன், ராம் முரளி, தொட்ல தேவதானம் ராஜு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காக்கைச்
## சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

## அக்டோபர் 2011
## டிசம்பர் 2012

தொகுப்பு

1

அஞ்சலில் பெற விரும்புவோர் கூரியர் கட்டணம் ரூ. 50 சேர்த்து
கேட்போலை அல்லது பணவிடை மூலம் ரூ.300 அனுப்ப வேண்டும்

288, டாக்டர் நடேசன் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.
பேசி : 9841457503 email : kaakkaicirakinile@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கைச் சிறகினிலே

இறக்கை 3 இறகு 3

திருவள்ளுவராண்டு 2045
மாசி – பங்குனி மார்ச் 2014

வெளியிடுபவர்
ஆசிரியர்
வி. முத்தையா

ஆசிரியர் குழு
அழகிய பெரியவன்
இரா. எட்வின்
ச. முகில்நிலா

நெறியாளர்கள்
கி.பி. அரவிந்தன்
ஞானாலயா பா.கிருஷ்ணமூர்த்தி
செந்தலை ந.கவுதமன்
ஓவியர் வீர.சந்தானம்
டிராட்ஸ்கி மருது

புலம்பெயர் நாடுகளுக்கான தொடர்புக்கு :

கனடா :
வி. மகேந்திரன்
V. Mahenthiran
Mahenthiran_v@hotmail.com

ஐரோப்பா :
க. முகுந்தன்
K. Mukunthan
kmukunthan@gmail.com

# ஆனந்தக் கண்ணீரால் ஆராதனை செய்வோம்

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலை வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவருக்கும் விதிக்கப்பட்டிருந்த தூக்குத் தண்டனையை ரத்து செய்து, ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளதன் மூலம் இந்திய உச்சநீதிமன்றம், மூன்று செய்திகளை உலகிற்கு உரத்துச் சொல்லி இருக்கிறது.

ஒன்று: உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளில் ஒன்றான இந்தியத் திருநாட்டில், இன்னும் சட்டத்தின் ஆட்சிதான் நடைபெறுகிறது.

இரண்டு: அரசமைப்புச் சட்ட விதிகளின்படி ஆட்சியதிகாரத்தில் இருக்கும் அரசுகளும் அரசாங்கங்களும் உரிய காலத்தில் முடிவெடுக்கத் தவறினால், குடிமக்களின் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் நாட்டின் உச்சநீதி மன்றம் தலையிடலாம்.

மூன்று: ஆயுள் தண்டனை என்பது, தண்டனை பெற்றவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் சிறையிலேயே கழிக்க வேண்டும் என்பதுதான். ஆனால் ஆயுள் தண்டனை பெற்றவர்களின் தண்டனைக்கால நன்னடத்தைகளைக் கருத்தில் கொண்டு தொடர்புடைய அரசுகள், அரசமைப்புச் சட்டம் தங்களுக்கு வழங்கி இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி முன்கூட்டியே அவர்களை சிறையிலிருந்து விடுவிக்கப் பரிசீலிக்கலாம்.

சர்வதேசக் கவனம் குவிந்துள்ள இந்த வழக்கில், இந்திய உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி பி.சதாசிவம், நீதிபதிகள் ரஞ்சன் கோகாய், சிவகீர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வு அளித்துள்ள இந்தத் தீர்ப்பு, உலக நாடுகளின் உச்சநீதி மன்றங்களைத் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

ஆனாலும், இதனால் இரண்டுவிதமான ஆபத்துகள் இருக்கின்றன என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது. ஆள்பலமும் அதிகார பலமும் நிறைந்தவர்கள் எதிர்காலத்தில் இதையே முன்மாதிரியாகக் காட்டி இதுபோன்ற தண்டனைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளவும் வழக்கிற்குமேல் வழக்குத் தொடுத்து, வல்லடி வித்தைகளைக் காட்டி காலதாமதப்படுத்திக் கொள்ளவும் முடியும் என்பது ஒன்று; வசதி வாய்ப்போ சட்ட பின்புலமோ இல்லாதவர்களும் சாமான்யர்களும் கேள்வி கேட்பாரின்றி உடனுக்குடன் தண்டிக்கப்பட்டுவிடுவார்கள் என்பது மற்றொன்று.

'தூக்குத்தண்டனை இந்திய அரசமைப்புச் சட்டத்திலிருந்தே நீக்கப்பட வேண்டும்' என்ற குரல் நாடு முழுவதும் வலுத்து வருகின்ற நிலையில் இதுபோன்ற அச்சம் தேவையில்லை; சட்டத்தின் மாட்சியைக் காத்துவருகின்ற நீதிபரிபாலன அமைப்புகள் இதையும் கணக்கில் கொள்ளும் என்று உறுதி கொள்வோம். அதைப்போலவே, 'இதுதான் இந்த தேசத்தின் மாண்பு' என்பதை உரிய நோவுகளில் உரிய வழக்குகளில் உரிய தீர்ப்புகளின் வழியாக உலகிற்கு வெளிப்படுத்துகின்ற உச்சநீதிமன்றத்தை இந்தத் தருணத்தில் ஆனந்தக் கண்ணீரால் ஆராதிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

**இனி ஒவ்வொரு மாதமும் 1ஆம் தேதி உங்கள் கைகளில்**

ஒவ்வொரு மாதமும் 29 அல்லது 30 ஆம் தேதியில் 'காக்கைச் சிறகினிலே' அஞ்சல் செய்யப்படுகிறது. 5ஆம் தேதிக்குள் இதழ் கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய செல்பேசி எண்: 98414 57503.

**உறுப்பினர் கட்டணம்**

| | |
|---|---|
| தனி இதழ் விலை | ரூ. 25 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 275 |
| இரண்டு ஆண்டு | ரூ. 500 |
| ஐந்தாண்டுக் கட்டணம் | ரூ. 1250 |
| மாணவர் சந்தா | ரூ. 200 |

(மாணவர்கள். கல்வி நிறுவனத் தலைவர் அல்லது துறைத் தலைவர் சான்றிதழோடு விண்ணப்பிக்க வேண்டும்)

**வெளிநாட்டு உறுப்பினர் கட்டணம்**

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 4000 |

காசோலைகள், வங்கி வரைவோலைகள். அனைத்தும் KAAKKAI, (A/c No. 60111010005660, SYNDICATE BANK, Triplicane, Chennai - 5. IFSC: Synb0006011) என்ற பெயருக்கு சென்னையில் மாற்றத்தக்கதாக அனுப்ப வேண்டும். பணவிடை (மணியாடர்) மூலமும் சந்தா செலுத்தலாம்.

தொடர்பு முகவரி :
**காக்கை**
288, டாக்டர் நடேசன் சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை-600005.
செல்பேசி: 98414 57503
மின்னஞ்சல்: kaakkaicirakinile@gmail.com

இதழ் வடிவமைப்பு :
சா. ஐசக்

## சிறகுக்குள்ளே...















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிச்சமிருக்கிறது வழக்கு




கொந்தளிப்பின் விளிம்பில் நின்றவாறு பேசிக் கொண்டிருக்கிறார்கள் பல ஊடகத்தினரும் காங்கிரஸ்காரர்களும். மக்கள் கொதித்துப் போய் இருப்பதாகவும், எனவேதான் தாங்கள் மக்கள் மன்றத்தின்முன் இதுபற்றி விவாதிக்க விரும்புவதாகவும் உரக்கப் பேசுகிறார்கள். யாரையும் பேச விடாமல் பேசுகிறார்கள். அப்படியே யாருக்கேனும் பேசுவதற்கு சற்று வாய்ப்புக் கிடைத்து பேசினாலும் உடனே பெருங்குரலெடுத்து, தலைவர் ராஜீவைக் கொன்ற கொலையாளி களை விட்டு விடச் சொல்கிறீர்களே இது நியாயமா என்று கேட்கிறார்கள். இனி உங்களிடம் பேச என்ன இருக்கிறது? இது நியாயமா என்பதை நாங்கள் மக்கள் மன்றத்திடம் கேட்கிறோம் என்கிறார்கள்.

அவர்கள் அவசரமாகவோ ஆதாயத்திற் காகவோ யாரிடம் நியாயம் கேட்பதாக சொல்கிறார்களோ அந்த மக்கள் மன்றத்தின் ஒரு பிரதிநிதியாகத்தான் இதை எழுதுகிறேன். அந்த மக்கள் மன்றத்தின் ஒரு துளி என் பதைத்தான் நமக்கான பலமாக உணர்கிறோம்.

நாடும் மக்களும் கொதித்துப் போயிருக் கிறார்கள் என்று தொடர்ந்து அவர்களால் கூறப்படும் ஒரு விஷயத்தை தமிழ் மண்ணின் குறுக்கும் நெடுக்குமாய் பயணித்துப் பார்த்த வர்கள் என்ற வகையில் இந்தக் கூற்றில் குட்டி எறும்பொன்று உருட்டிப் போகும் அதனிரையின் ஆயிரத்தில் ஒரு பகுதிக்கேனும் உண்மை இல்லை என்பதை எடுத்த எடுப்பிலேயே சொல்லிவிட விரும்புகிறேன்.

நான் விடுதலைப் புலிகளின் ஆதரவாளன் அல்ல என்பதையும், அவர்களது பெரும்பான்மையான நிலை பாடுகளில் செயல்பாடுகளில் உடன்பாடில்லை என்பதை விட எதிர்நிலையிலேயே நிற்பவன் என்பதையும் பதிவின் இந்த நிலையிலேயே சொல்லிவிடுகிறேன்.

பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய மூவரும் விடுதலை செய்யப்படுவதனால் நாடோ மக்களோ கொந்தளித்துவிடவில்லை. மாறாக இந்த மூவரின் விடுதலை மக்களை மகிழ்வுறவே செய்திருக்கிறது. அதே நேரம் தங்களது மகத்தான தலைவனைக் கொன்றவர்களை விடுதலை செய்துவிட வேண்டும் என்கிற நிலையில் இவர் களது விடுதலையை மக்கள் பார்க்கவில்லை. மாறாக, தங்களது அன்பிற்குரிய தலைவனின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலையில் இந்த மூவருக்கும் சம்பந்தமில்லையோ என்கிற அய்யமும், தேவை இல்லாமல் சில அப்பாவிகளைத் தண்டித்திருக்கிறோமோ என்கிற அய்யமும் அவர்களை இந்த விடுதலையை ஒரு நிம்மதி பெருமூச்சோடு பார்க்க வைத்திருக்கிறது உண்மையான குற்றவாளிகளையும் அல்லது அந்தக் குற்றத்தோடு தொடர்புடையவர்களையும் படு சுதந்திரமாக உலாவ விட்டிருக்கிறோமோ என்கிற அய்யம் கலந்த ஒரு குற்ற உணர்வோடும், அதில் சிலர் நியாயவான்களைப் போல் ஊடக விவாதங்களில் பங்கேற்கிறார்களோ என்கிற அச்சமுமே அவர்களை வதைத்துக் கொண்டிருக்கிறது.

தமிழ் மக்களின் இரண்டு விருப்பங் களையும் இரண்டு பேருக்கான நன்றியையும் சொல்லிவிட வேண்டும்.

இந்த மூவரையும் தூக்குக் கயிறிலிருந்து காப்பாற்றிய உச்சநீதி மன்றத்தின் தலைமை நீதிபதியையும், அவர்களை சிறையிலிருந்து விடுவிப்பதாய் அறிவித்த மாண்பமை தமிழக முதல்வரையும் அவர்கள் மனதார நன்றி சொல்லி வாழ்த்துகிறார்கள்.

தங்களது தங்கத் தலைவனைக் கொன்றவர்களை ஒரு வெளிப்படையான விரைவான மறுவிசாரணையின் மூலம் கண்டறிந்து கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்றே மக்கள் மன்றம் விரும்புகிறது.

குற்றவாளிகளை நெறிப்படுத்துவதாகத்தான் தண்டனை இருக்க வேண்டுமேயன்றி மரணதண்டனை என்பது மற்றுமொரு கொலை என்பதால் மரண தண்டனையை முற்றாய் ஒழிக்க வேண்டும் என்பதிலும் தமிழ்த் திரள் உறுதியாயிருக்கிறது.

உண்மையான குற்றவாளிகளை தப்ப வைத்துவிட வேண்டும் என்பதில் இந்த வழக்கினை நடத்தியவர்கள் குறியாக இருந்து எப்படியோ இந்த வழக்கினை முடித்து யாரையோ தண்டிப்பதன் மூலம் கோப்பினை மூடிவிட வேண்டும் என்பதில் குறியாக இருந்தார்களோ என்ற அய்யம் தமிழ் மக்களுக்கு இருக்கிறது என்பதை சொல்லியே ஆக வேண்டும்.

பொதுவாகவே எந்த ஒரு வழக்கின் விசாரனையிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்ளவே யாரும் விரும்புவார்கள். 2ஜி அலைக்கற்றை வழக்காயினும், சொத்துக் குவிப்பு வழக்காயினும் வேறு எந்த ஊழல் வழக்காயினும் அதில் சம்பந்தப்பட்டவர்கள் அதிலிருந்து விலக்கு பெறுவதற்காகப் போராடிப் பார்ப்பதையும் முடியாத பட்சத்தில் நெஞ்சு வலியை கொள்முதல் செய்துகொண்டு மருத்துவ மனைகளில் போய் படுத்துக் கொள்வதையும் தான் பார்த்திருக்கிறோம். ஆனால் தனக்கு இந்த வழக்கிற்கு தேவையான மிக முக்கியமான சில விஷயங்கள் தெரியும் என்றும் ஆகவே தன்னை வெளிப்படையாகவும் நியாயமாகவும் விசாரிக்க வேண்டும் என்றும் ஏறத்தாழ இந்த வழக்கு தொடங்கிய நாளில் இருந்தே திருச்சி வேலுசாமி சொல்லி வருகிறார். இதே கோரிக்கையை ஊர் ஊராகப் போய் அவர் கத்திச் சொல்லிப் பார்க்கிறார். என்னை முற்றாய் விசாரியுங்கள் என்று சொல்பவரைப் பார்த்து ஏன் நழுவுகிறார்கள் என்ற அய்யம் தமிழ் மக்களிடம் இருக்கிறது.

இந்தத் தீர்ப்பும் மாண்பமை முதல்வரின் அறிக்கையும் கிடைத்தவுடன் இப்படித்தான் முகநூலில் எழுதினேன், மூவரின் விடுதலைக்காக மக்கள் தளத்தில், நீதி மன்றங்களில், சமூக ஊடகங்களில், சட்ட மன்றத்தில், பாராளு மன்றத்தில் உழைத்த அனைவரையும் நன்றியோடு நினைத்துக் கொள்கிறேன்.

எனக்கு இதில் சுத்தமாய் உடன்பாடு இல்லை. இன்னும் சொல்லப்போனால் இதை வன்மையாக கண்டிக்கிறேன். ஆனாலும் இதற்காக உயிரை மாய்த்துக் கொண்ட மகள் செங்கொடி உள்ளிட்ட அனைவரையும் நினைத்துக் கொள்கிறேன்.

ஆனால் இந்த நியாயமான போராட்டங் களை மதித்து இந்த அரசு எதுவும் செய்ய வில்லை என்பதையும் கருத்துக்களையோ, போராட்டத்தின் நியாயத்தையோ உணர் கிறவர்கள் என்றால் கூடங்குளம் போராட்டத்தின் நியாயம் உணரப் பட்டிருக்கும். எவ்வளவு அழுத்தமான, நியாயமான, செறிவான போராட்டம். 150 ஆண்டுகளில் இப்படி ஒரு நியாயமான செறிவான , வன்முறை துளியுமற்ற போராட்டத்தை பூமி பார்த்ததில்லை.

ஒரு நியாயமான மனிதனிடத்தில் இந்த வழக்கு போனதால் கிடைத்தது என்பதையும் நினைத்துப் பார்க்கிறேன்.

அதே நேரத்தில் இந்த மனிதனிடத்தில் இந்த வழக்கு போகும் நேரம் வரைக்கும் இத்தனைக் காலம் தூக்கிலிருந்து அவர்களைக் காப்பாற்றியது இத்தகைய போராட்டங்கள்தான் என்பதையும் நினைத்துக் கொள்கிறேன்.

இந்த நிமிடம் வரை அவர்களைத் தூக்குக் கயிற்றிலிருந்து காப்பாற்றியது இத்தகையப் போராட்டங்கள்தான். அதிலுங்குறிப்பாக சுதாங்கன், திருச்சி வேலுசாமி, வைகோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"

**இந்த நிமிடம் வரை அவர்களைத் தூக்குக் கயிற்றிலிருந்து காப்பாற்றியது இத்தகையப் போராட்டங்கள்தான். அதிலுங்குறிப்பாக சுதாங்கன், திருச்சி வேலுசாமி, வைகோ ஆகியோரின் பங்களிப்பை நான் இந்தப் புள்ளியில் நன்றியோடு நினைத்துக் கொள்கிறேன்.**

ஆகியோரின் பங்களிப்பை நான் இந்தப் புள்ளியில் நன்றியோடு நினைத்துக் கொள்கிறேன்.

ஏதோ இப்போதுதான் கருணை மனு நிராகரிக்கப்பட்டதாய் பெரும்பான்மையோர் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மை அதுவல்ல என்கிறது திருச்சி வேலுசாமி அவர்களின் நூலான ராஜீவ் படுகொலை தூக்குக் கயிற்றில் நிஜம். கே ஆர் நாராயணன் அவர்கள் இந்த மூவரது கருணை மனுவையும் நிராகரித்து அவர்களது தூக்கிற்கான தேதியும் அறிவிக்கப் பட்டுவிட்டது ஒருமுறை. தூக்கிலிடுவதற்கான ஆள்கூட தேர்வு செய்யப்பட்டு விட்டார். மருத்துவர் இந்த மூவரையும் சோதித்துப் பார்த்து விட்டார்.

எல்லாம் முடிந்துவிட்டது. அடுத்தநாள் விடியல் அவர்களது சாவுச் செய்தியோடு வரப்போகிறது என்றுதான் பெரும்பான்மையோர் நினைத்திருந்தோம். ஆனால் எந்தக் காரணமும் குறிப்பிடப் படாமல் அந்தத் தூக்கு நிறுத்தி வைக்கப் பட்டது. இதற்கான காரணத்தையும் அந்த நூல் விரிவாக சொல்கிறது.

அடுத்தநாள் தூக்கு என்கிற நிலையில் அது குறித்த ஒரு விவாதத்தை விஜய் தொலைக் காட்சி ஏற்பாடு செய்கிறது. காங்கிரஸ் சார்பில் கௌரிசங்கர், ம.தி.மு.க சார்பில்வைகோ, இந்திய மார்க்சிஸ்ட் பொது உடமைக் கட்சி சார்பில் டி கே ரெங்கராஜன், மற்றும் வேலுசாமி ஆகியோர் அழைக்கப் பட்டிருக்கிறார்கள். என்ன காரணத்தினாலோ தோழர் டி கே ரெங்கராஜன் அவர்களாலும் வைகோ அவர்களாலும் வர இயலாமல் போகிறது. சுதாங்கன்தான் நிகழ்ச்சியை ஒருங்கிணைக்கிறார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மத்திய அரசினால் நியமிக்கப் பட்ட ஜெயின் கமிஷன் நூற்றுக் கணக்கான நபர்களிடம் விசாரணையை நடத்தியதன் அடிப்படையில் ஒரு அறிக்கையை அரசுக்கு அளித்தது. விசாரிக்கப் பட்டவர்களில் திருச்சி வேலுசாமியும் ஒருவர்.

ராஜீவ் கொலையில் உண்மைக் குற்றவாளிகளை இதுவரை கண்டு பிடிக்கப் படவில்லை என்றும் இன்னும் விசாரிக்கப் பட வேண்டியவர்கள் இருக்கிறார்கள் என்றும் சொன்னதோடு விசாரிக்கப் பட வேண்டியவர்களின் பட்டியல் ஒன்றையும் கமிஷன் வழங்கியது. அதன் அடிப்படையில் பன்முனைநோக்கு புலனாய்வு விசாரணைக் குழுவை அரசு நியமித்திருக்கிறது என்பதையும் வேலுசாமி சொல்கிறார். அந்த விசாரனை நடக்கும் வேளையில் அதில் சாட்சி சொல்வதற்கு முருகனோ, சாந்தனோ, பேரறிவாளனோ தேவைப் பட்டால் அப்போது யாரால் அவர்களை உயிரோடு தர முடியும் என்பதாக வேலுசாமி அந்த விவாதத்தில் நொந்து போனவராய் சொல்லியிருக்கிறார்.

வேலுசாமியின் இந்த பதிவால் அடுத்த கேள்வியைக் கேட்க இயலாத அளவிற்கு சுதாங்கன் ஸ்தம்பித்துப் போயிருக்கிறார். விவாதம் பாதியிலேயே முடிந்திருக்கிறது. கொலை வழக்கு இன்னும் நடக்கிறது என்றால் இன்னும் கொலையாளிகளைக் கண்டடைய வில்லை என்றுதானே பொருள். எனில் இவர்கள் எப்படி குற்றவாளிகளாவார்கள். படபிடிப்புத் தளத்திலிருந்த அனைவரும் வேலுசாமியைக் கட்டியணைத்தார்களாம். உடனே இதை விளக்கியும் அடுத்த நாள் தூக்கு நியாயமற்றது என்பதாகவும் ஒரு மனு அவசர அவசரமாகத் தயாரிக்கப் பட்டு தொலை நகல் வழியாக அன்றைய குடியரசுத் தலைவர் கே ஆர் நாராயணன் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகிறது.

காரணம் சொல்லப் படாமல் அடுத்தநாள் நடக்கவிருந்த தூக்கு ரத்து செய்யப் படுகிறது. இந்த மனுதான் தூக்கு ரத்தானதற்கு காரணம் என்று சொல்லப் படவில்லை. என்றாலும் இதுவாகத்தானிருக்க வேண்டும். இல்லை என்றால் இதைப் போலவே வேறு யாரிடம் இருந்தேனும் இது மாதிரியானதொரு அய்யம் குடியரசுத் தலைவரிம் கொண்டுபோகப் பட்டிருக்க வேண்டும். அப்படி வேறு யாரோ கொண்டு போயிருந்தால் கொலையாளிகள் இவர்களாயிருக்க வாய்ப்பில்லை என்கிற அய்யத்திற்கு இன்னும் வலு சேரவே செய்யும்.

ஒருக்கால் அன்றே மூவரும் தூக்கிலேற்றப் பட்டிருந்தால் அவர்களை விடுதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்கு மாண்பமை முதல்வருக்கு இன்று வாய்ப்பே இருந்திருக்காது. அதனால்தான் இதுவரை அவர்கள் உயிரோடு இருப்பதற்கு போராட்டங்களும் இவர்களைப் போன்ற தனி ஆளுமைகளும் காரணம் என்று சொன்னேன். காரணமானவர்களின் முழுமையான பட்டியல் இதுவென்று ஒருபோதும் சொல்லமாட்டேன்.

1991 மே 21ஆம் நாளன்று இரவு10.25 வாக்கில் தனக்கும் சுப்ரமணியசாமிக்குமிடையில் நடந்ததாக ஒரு உரையாடலை வேலுசாமி அந்த நூலில் தருகிறார். மே 22 அன்று மதுரையில் வேலுசாமியும் சுப்ரமணியசாமியும் கலந்து கொள்ளவேண்டிய தேர்தல் பிரச்சாரக் கூட்டம். 22 அதிகாலை தில்லியிருந்து சென்னைக்கு விமானத்தில் வரும் சுப்ரமணியசாமி அவர்கள் அங்கிருந்து மதுரை விமானத்தில் வருவதாகவும், விமானம் திருச்சியில் நிற்கும் வேளையில் அவரோடு வேலுசாமி சேர்ந்து கொள்வதாகவும் ஏற்பாடு. அதுகுறித்து பேசுவதற்காகத்தான் 21ஆம் தேதி இரவு 10.25 வாக்கில் சுப்ரமணிய சாமியை அழைக்கிறார். இவரது குரலைக் கேட்டதும், 'என்ன ராஜீவ் காந்தி செத்துட்டார். அதானே சொல்ல வரேள்' என்று சுப்ரமணிய சாமி கேட்டதாக வேலுசாமி எழுதுகிறார்.

குண்டு வெடிப்பு 10.10 அல்லது 10.15 மணி வாக்கில் நடந்ததாகவும் பெரிய புகை மூட்டம் ஏற்பட்டதாகவும் புகை அடங்கிய பிறகே தானும் திரு மூப்பனார் அவர்களும் சென்று முகம் சிதறிக் கிடந்த தங்களது தலைவரைக் கண்டுபிடித்ததாகவும் திருமதி ஜெயந்தி நடராஜன் அடுத்தநாள் பத்திரிக்கைகளுக்கு அளித்த பேட்டியை மேற்கோள் காட்டுகிறார் வேலுசாமி. எப்படியும் புகை அடங்க அரை மணி நேரமாவது ஆகியிருக்கும். எனில் மூப்பனார் அவர்களும் திருமதி ஜெயந்தி அவர்களும் தங்களது தலைவரது உடலை அடையாளம் காண்பதற்கும் அதை ஊர்ஜிதம் செய்வதற்கும் அதன் பிறகு அதை மேலிடத்திற்கு சொல்வதற்குமான நேரங்களைக் கணக்கிட்டால் எவ்வளவு விரைவாக என்று கொண்டாலும் தில்லிக்கு செய்தி சேர்ந்திருக்க 10.45 ஆவது ஆகியிருக்கும். அப்படி இருக்க தன்னிடம் 10.25க்கு பேசிய சுப்ரமணிய சாமி ராஜீவ் செத்து விட்டார்தானே என்று எப்படி சொல்லியிருக்க முடியும். வேலுசாமி இன்னொரு விஷயத்தையும் இந்த நூலில் சொல்கிறார்.

அதே நூலின் 78 ஆம் பக்கத்தில் தேர்தல் செலவிற்காக பணம் கேட்டவர்களிடம் தேர்தல் நடந்தா பார்த்துக்கலாம் என்று சுப்ரமணியசாமி அவர்கள் சொன்னதாகவும் வேலுசாமி சொல்கிறார். ராஜீவ் இறப்பதற்கு முதல்நாள் இதை சுப்ரமணியசாமி சொன்னதாக அவர் சொல்கிறார்.

வேலுசாமி சொல்வதெல்லாம் உண்மை என்று வாதாட நாம் தயாராய் இல்லை. ஆனால் அவை உண்மையா இல்லையா என்பதை ஏன் ஒழுங்காய் விசாரிக்கவில்லை என்பதுதான் நமது கேள்வி. விசாரிக்க வேண்டும் என்பதுதான் நமது ஆசை.

மகத்தான ஆளுமையாக விளங்கிய , அந்த நேரத்தின் உலக அரங்கில் இந்தியாவின் அடையாளமாக விளங்கிய ராஜீவின் கொலையாளிகள் கடுமையாகத் தண்டிக்கப் படவேண்டும். ஆனால் அவர்களுக்கும் மரண தண்டனை கூடாது என்பதே நமது நிலை.

ஆயுள் தண்டனை என்றால் சாகும்வரை தானே என்றுகூட மெத்தப் படித்த அறிவாளிகள் கேட்கிறார்கள். அப்படி எனில் பிரேமானந்தாவிற்கு இரட்டை ஆயுள் விதிக்கப் பட்டதே. ஒரு ஆயுள்தானே அவருக்கு முடிந்திருக்கிறது. இன்னொரு ஆயுள் தண்டனைக்காக மீண்டும் உயிர்ப்பித்து அவரை உள்ளே போடுவீர்களா?

வேலுசாமிகூட எந்த இடத்திலும் தான் சொல்வதை ஏற்கக் கோரவில்லை. மாறாக தன்னையும் உட்படுத்தி விசாரணையை முடுக்கிவிட வேண்டும் என்றே கூறுகிறார். அது நியாயமாகவே படுகிறது.

எனது முகநூல் நிலைத்தகவலை கீழ்வருமாறுதான் முடித்திருந்தேன். அப்படியே இங்கும் முடிக்கிறேன்,

1. இனி யாரையும் தன்னைத் தானே மாய்த்துக் கொள்ள அனுமதிப்பதில்லை. அதற்கான தயாரிப்பை நாம் கொண்டு சென்றாக வேண்டும். தன்னை மாய்த்துக் கொள்ளுதல் என்பது இனி போராட்ட வடிவமாக இருத்தல் கூடாது. இளைய உயிர்களின் முக்கியத்துவத்தை நாமும் உணர வேண்டும், பிள்ளைகளுக்கும் உணர்த்த வேண்டும்.

2. மரண தண்டனைக்கு எதிராக என்னென்ன வடிவங்களில் என்னென்ன செய்ய முடியுமோ அதை அது நடக்கும் வரைக்கும் தொய்வின்றி கொண்டு செல்ல வேண்டும்.

3. ராஜீவ் கொலை வழக்கினை மீண்டும் நியாயமான முறையில் வெளிப்படையாக நடத்த வற்புறுத்தி தொடர்ந்து இயங்க வேண்டும். அதை அமெரிக்கை நாராயணன் பாஷையில் சொல்வதெனில் மக்கள் மன்றத்தில் நடத்தக் கேட்டு தொடர் இயக்கத்தை நடத்த வேண்டும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாளை பஷீர் › நடப்பு

# எதிர் அலை பயணிகள்

“உலகம் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு ஆட்பட்டிருக்கின்றது. இப்போது ஏழைகள் எண்ணிக்கை பெருகி வருகிறது. ஒரு காலத்தில் நடுத்தர வருமானமுள்ள மக்களின் எண்ணிக்கை கூடுதலாக இருந்தது. இன்று அது சுருங்கி வருகின்றது. முதலாளித்துவ வாழ்க்கை முறைக்கு அறை கூவல் விடுக்கும் மாற்று ஏற்பாடு தேவைப்படுகிறது. அந்த மாற்று ஏற்பாடு எது என தெரியவில்லை.”

ஃபிரெஞ்ச் திரைப்பட தயாரிப்பாளரும் இயக்குநருமான காஸ்டா கவ்ரஸ் {COSTA GAVRAS}, THE HINDU (Nov 04,2013) நாளிதழுக்கு அளித்த நேர்காணலில் கூறியவை.


ஆனால் தமிழகத்தில் விவசாயம், நெசவு தொழில்களுக்கும் வணிக நிறுவனங்களில் கடை நிலை பணிகளுக்கும் ஆள் கிடைப்பது அருகி வருகின்றது.

சென்னை, கோயம்புத்தூர், பங்களூரு, புனே, தில்லி, மும்பை உள்ளிட்ட நகரங்களில் ஏராளமான தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் பெருகி வருகின்றன. நாட்டின் குக்கிராமங்களிலிருந்து வரும் எண்ணற்ற இளைஞர்களும் இளைஞிகளும் கழுத்தில் அடையாள அட்டையுடன் கை வழிய ஊதியம் பெறுகின்றனர்.

நாம் வாழும் சென்னை நகரத்தில் தகவல் தொழில் நுட்ப துறை, கட்டிட கட்டுமானம், உணவு விடுதிகள் என பல துறைகளில் தமிழர்களை விட கேரளம், பீஹார், மேற்கு வங்காளம், வடகிழக்கு மாநிலங்களை சேர்ந்த தொழிலாளர்கள் பணி புரிவது பெருகிக் கொண்டே வருகின்றது.

“ சத்தீஸ்கர், பிஹார், ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம், ஒடிஷா போன்ற பின்தங்கிய மாநிலங்களில் இருந்து வயிற்றை கழுவுவதற்காக தமிழகம் நோக்கி புலம் பெயர்ந்த ஏழை உழைப்பாளிகளுக்கு எந்த முகமுமில்லை. அடையாளமுமில்லை. அவர்களின் அன்றாட உழைப்பும் தங்கு தடையில்லாமல் சுரண்டப்படுகின்றது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980 ஆம் ஆண்டுகள் வரை படித்த பட்டதாரிகள் வேலைக்கு அலையாய் அலைந்தது போன்ற நிலைமை இன்றில்லை.

நிலத்தின் மதிப்பு பாய்ந்து உயர்ந்து வருகின்றது. பேரங்காடிகளிலும், வணிக வளாகங்களிலும், பொழுது போக்கு சாகச பூங்காக்களிலும் காசை இறைக்கத்தயங்காத மக்கள் திரள் வார நாட்களிலும் கூட பெருகி வருகின்றது. மக்களின் வாங்கும் திறன் பெருகி உள்ளது. பணம் தாராளமாக எல்லோரிடமும் புழங்குகின்றது.

இவை நவீன வளர்ச்சியின் ஆதரவாளர்கள் முன் வைக்கும் வாதங்கள்.

இந்த வாதங்களும் திரைப்பட இயக்குநர் காஸ்டா கவ்ராஸின் நுண்ணிய அவதானமும் அன்றாட வாழ்வியல் பருண்மையை அணுகும் இரு வேறு மன நிலைகள்.

காஸ்டா கவ்ராஸின் மன நிலை வெகு மக்களுக்கானது. மற்ற பிரிவினரின் எண்ண ஓட்டங்கள் ஒரு குறுங்குழுவினரின் தன்னலத்தோடு இறுக பிணைக்கப்பட்டது.

இன்று நாம் காணும் இந்த பள பள வளர்ச்சியானது உண்மையிலேயே முழுமையான வளர்ச்சிதானா? அல்லது ஒரு பக்க வீக்கமா?

நாம் வாழும் சென்னையை எடுத்துக் கொள்ளுங்கள் .

இந்த நவீன வளர்ச்சி என்ற ராட்சச சக்கரத்தின் பேய் சுழற்சியில் சிக்கி செம்மஞ்சேரி, கண்ணகி நகர், துரைப்பாக்கம் என நகரத்திற்கு வெளியே நவ சேரிகளில் எறியப்பட்ட உழைக்கும் தலித்துகளின் எண்ணிக்கை யாருக்கு தெரியும்?

சத்தீஸ்கட், பிஹார், ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம், ஒடிஷா போன்ற பின்தங்கிய மாநிலங்களில் இருந்து வயிற்றை கழுவுவதற்காக தமிழகம் நோக்கி புலம் பெயர்ந்த ஏழை உழைப்பாளிகளுக்கு எந்த முகமுமில்லை. அடையாளமுமில்லை. அவர்களின் அன்றாட உழைப்பும் தங்கு தடையில்லாமல் சுரண்டப் படுகின்றது.

அவர்களின் குழந்தைகளுக்கான பள்ளிக் கல்விக்கு எந்த உத்திரவாதமும் இல்லை. கட்டுமானப்பணியில் தவறி விழுந்து பலியான புலம் பெயர் தொழிலாளிகளின் பிணம் கூட அவர்களின் ஊர் போய் சேரும் என்பதற்கும் எந்த உறுதியும் இல்லை. இதில் எங்கு இழப்பீட்டு தொகையைப்பற்றி பேச முடியும் ?

நவீன வளர்ச்சி என்ற துர்தேவதையின் புனித தலத்தின் அஸ்திவாரத்தில்தான் இத்தனை ரத்தக்கறை என்றால் அந்த மாளிகையின் உள்ளே வாசம் செய்பவர்களின் தலையையும் அந்த துர்தேவதை காவு வாங்கிக் கொண்டுதான் இருக்கின்றது.

இந்த துர்தேவதையின் பளபளக்கும் வழிபாட்டுத்தலங்களான ஷாப்பிங் மால், மேம்பாலம், பலதள வணிக வளாகம், ஐ.டி. கண்ணாடி மாடங்களின் முகப்புகளிலிருந்து விழுந்து இந்த வருடம் தற்கொலை செய்து கொண்ட இளசுகளின் பட்டியல் மெல்ல நீளுகின்றது.

06 மாதத்திற்கொரு தரம் மாடலை மாற்றிக் கொண்டே இருக்கும் செல் பேசிகள், ஊர்திகளை வாங்குவதற்காகவும் மது, பெண் நண்பிகள் உள்ளிட்ட ஆடம்பர செலவுகளுக் காகவும் இரு சக்கர வண்டிகளில் வந்து வழிப்பறி செய்யும் கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கையும் பெருகி வருகின்றது. தேசிய குற்ற ஆவண பணியகத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான பதிவேடுகளில் காணக் கிடைக்கும் விவரங்கள் :

தேசிய தற்கொலை சதவிகிதமானது இந்தியாவின் முன்னேறிய மாநிலங்களான தமிழகத்தில் 12.5% மஹாராஷ்டிரத்தில் 11.9 % என்ற அளவிலும் அடுத்ததாக மேற்கு வங்காளத்தில் 11 % ஆந்திரா 10.5% கர் நாடகா 9.4% என்ற அளவிலும் இருக்கின்றது. தேசிய சராசரியில் இவை மற்ற மாநிலங்களை பின்தள்ளி விட்டன. அதே போல இந்திய பெரு நகரங்களில் ஏற்படும் தற்கொலை விகிதங்களில் மற்ற நகரங்களை விட சென்னை, பெங்களூரு, மும்பை, தில்லி தான் முன்னணியில் இருக்கின்றன.

மேற்கண்ட தற்கொலைகளுக்கான பல்வேறு காரணிகள் இருந்த போதிலும் மிக அதிகமான காரணம் குடும்ப பிரச்னை 25.6 %, உடல் நலக்குறைவு 20.5 % எனவும் கண்டறியப் பட்டுள்ளது.

பெண்களுக்கான எதிரான வன்முறை நிகழ்வுகளானது திரிபுரா, மணிப்பூர், மேகாலயா, நாகாலாந்து , சிக்கிம் உள்ள 05 வட கிழக்கு மாநிலங்கள், சத்தீஸ்கட், ஜார்க்கண்ட், ஹிமாச்சல் பிரதேஷ் தவிர ஏனைய இந்திய மாநிலங்களில் மிக கூடுதலாக உள்ளது.

இதற்கான காரணம் என்ன ?


மேற்கண்ட மாநிலங்களில் வாழும் மக்களும் வாழ்வியல் முறையும் பெரு நகர பாணியிலான வாழ்க்கை வெள்ள ஓட்டத்திற்குள் பெரிய அளவில் சிக்காதவர்கள்.

சூழலியலை உறுத்தாத அசுர வேக நீக்கம் செய்யப்பட்ட நிதானமான வாழ்க்கை முறை அவர்களுடையது.

இந்த மாநிலங்கள் நீங்கலாக உள்ள எஞ்சிய இந்தியாவில் வளர்ச்சி என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பளபளக்கும் கட்டடங்களிலும் ஊர்திகளிலும் கடன் அட்டைகளிலும் பீட்ஸாவிலும் மின்னணு சாதனங்களிலும் நவீன உடைகளிலும் உல்லாச விடுதிகளிலும் வங்கி கணக்கின் இருப்பிலும் மட்டுப்படுத்தி பார்க்கின்றோம்.

அதன் விளைவுதான் மேலே காணும் புள்ளி விவர பலன்கள்.

எல்லாம் தரும் கற்பக மரமாக சித்தரிக்கப்படும் ஐடி. துறையானது சம்பளத்தை சும்மா ஒன்றும் அள்ளிக் கொடுத்து விடவில்லை. இந்த துறையில் வேலை பார்க்கும் இளைய தொழிலாளிகளின் திறமையுடன் அவர்களின் உடல் நலத்தையும் மன நலத்தையும் சேர்த்து உறிஞ்சி எடுத்து விட்டு பின்னர் கூலியாக பணத் தாள்களை துப்புகின்றன அய்டி. நிறுவனங்கள்.

மகத்தான மனித வளமானது வெறும் பணமாக குறுக்கப்பட்டு மிக மலிவாக பண்ட மாற்றீடு செய்யப்படுகின்றது.

கை நிறைய வரும் இந்த பணக் கத்தையை குறி வைத்து ஊடக விளம்பரங்கள் ஆசை வலை வீசுகின்றன. பெரு வணிக நிறுவனங்கள் தங்களது சந்தையை நிலை நிறுத்த போலியான கவர்ச்சியான சமூக மதிப்பீடுகளை உருவாக்கி அவற்றை நுகர்வு சாதனங்களில் நுட்பமாக பொதிந்து வைக்கின்றன.

உழைப்பாளிகளின் கையில் இருக்கும் மாத சம்பள பணத்தின் பல வருட பெருக்கல் மடங்கை கணக்கு போடும் நுகர் பொருள் உற்பத்தியாளர்கள் சுலப மாத தவணை {EMI} என அவர்களை தூண்டி விட்டு மீளாக் கடனிலும் வட்டியிலும் சிக்க வைக்கின்றன. மீளாக்கடனிலும் வட்டியிலும் சிக்காத மாத சம்பளக்காரர்களுக்கு மகிழ்ச்சிதானே மிஞ்சுகின்றது என்ற கேள்வி இயல்பாகவே எழலாம். அப்படி மகிழ்ச்சி எதுவும் எஞ்சுவதில்லை என்பதைத்தான் தொழில் வளர்ச்சி பெற்ற மேற்கண்ட மாநிலங்களில் உள்ள குற்ற விவரங்கள் தெரிவிக்கின்றன.

மிகையான வருமானத்தை நிழல் போல பின் தொடரும் நுகர்வு பழக்கமானது பின்னர் பேராசையாக கொதித்து வெறியாக திரண்டு இறுதியில் தன் மீதும் பிறர் மீதும் வெறுப்பாக விரக்தியாக வெடித்து சிதறுகின்றது.

பல சுற்றுகளாக சிதறும் இந்த வெடிமருந்தானது குடும்ப உறவுகளிலும் சமூக தளங்களிலும் அமைதியை குலைக்கின்றது. குற்றங்களை பெருக்குகின்றது. அதீத நுகர்வின் முதல் படியான தேவைக்கதிகமான உற்பத்தியானது நீர், நிலம், விண்வெளி, காற்று என அனைத்தையும் நஞ்சாக்கி வருகின்றது. இந்த சூழலியல் மாசினால் இனம் தெரியாத ஆள் முடக்கி, உயிர் கொல்லி நோய்கள் பெருகி வருகின்றன.

இன்றைய நவீன வளர்ச்சியில் எதை இழந்து எதை பெற்றோம் என்பதை நாம் கணக்கு பார்க்க வேண்டாமா? நவீன வளர்ச்சி என்ற முழக்கத்தின் உரிமையாளர்களை கண்டு பிடித்து விட்டால் ஆதாயமும் இழப்பும் தானாக தெரிந்து விடும்.

பெரும் ஆலை முதலாளிகள், பெரு வணிக நிறுவனங்கள், பன்னாட்டு வணிக நிறுவனங்கள், அன்னிய முதலீட்டாளர்கள் என்ற வகுப்பாரும் இவர்களின் நலன்களை மட்டுமே எப்போதும் சிந்திக்கவும் பாதுகாக்கவும் செய்யும் வல்லாதிக்க அரசுகளும் அரசியல் வாதிகளும் பொருளாதார அடியாட்களான வல்லுனர்களும்தான் நவீன வளர்ச்சியின் உண்மையான முதலாளிகள்.

இப்பூவுலகின் மண், மலை, நன்னீர், கானுயிர்கள், பறவைகள், கடல், காடு, மரங்கள், கனிம வளங்கள், காற்று, மனித ஆற்றல் என அனைத்து இயற்கை கொடைகளையும் பணத்தாள்களாக மாற்றிப் பார்க்க முயலும் கண் மண் தெரியாத பேராசைதான் வர்க்க, வகுப்பு, சமூக மோதலாகவும், அணு ஆயுத உற்பத்தி யாகவும், பழங்குடி அழிப்பாகவும் நாடுகளுக் கிடையேயான பகையாகவும், ஃபாஸிச வல்லாதிக்கமாகவும் வடிவமெடுக்கின்றது.

அது உலகினுள் போட்டி பொறாமை யையும் கசப்புணர்வையும் உண்டு பண்ணக் கூடிய முடிவுறா நச்சு வளையத்தை சுழல வைத்துக் கொண்டே இருக்கின்றது.

உண்மையான முழுமையான வளர்ச்சி என்பது சமூகத்தின் அனைத்து பிரிவினரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தழுவியதாக இருக்கும். நவீன வளர்ச்சி என்பது பல குடும்பங்களின் சமூகங்களின் நாடுகளின் நுகர்வை ஒரு குடும்பமோ சமூகமோ நாடோ சுரண்டி உறிஞ்சி கொழுப்பதாக இருக்கும்.

நவீன வளர்ச்சியின் கொடூர தோற்றத்தை வேலை வாய்ப்பு பெருக்கம், வாழ்க்கைத் தரம் உயர்வு, பணப்புழக்கம் அதிகரிப்பு, தேச வளர்ச்சி என்கின்ற கனமான சமூக்காளம் போட்டு மறைக்கும் முயற்சிகள் தொடர்ந்து நடை பெறுகின்றன.

இப்படி விதந்து ஓதப்படும் நவீன வளர்ச்சியின் கூறுகளில் ஒன்றான அதீத உற்பத்தி என்ற ராட்சத பொறியானது மனிதனின் தன் சிந்தனை, ஊக்க மிக்க படைப்பாற்றல், தற் சார்பு, மனித நேயம் போன்றவற்றை முழு வேகத்தில் உறிஞ்சி குடித்து விட்டு அவர்களை குப்பையாக்கி சமூகத்திற்குள் கக்குகின்றது.

நவீன வளர்ச்சியை அதன் அனைத்து கேடுபாடுகளுடனும் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கும் இந்த சக்கை மனிதர்களினால் கிளப்படும் குருட்டு அடிமைத்தன அலைக்குள் மொத்த சமூகமும் நாடும் மூழ்கடிக்கப்படுகின்றது.

* * *

இந்த அலைக்கு எதிரான பயணமும் போராட்டமும் வரலாறு முழுக்க நிகழ்த்தப்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றது.

இரக்கம், உயிர் நேயம், மென்மை, அழகியல் உணர்வு, படைப்புத்திறன், களிப்பு, தற்சார்பு போன்றவை மனிதனுக்குள்ளே இயற்கையால் இறைவனால் பொதிந்து வைக்கப்பட்ட உன்னதமான உள்ளார்ந்த குணங்களாகும் .

இந்த உன்னதங்களை கலைத்துப் போடும் அதீத நுகர்வு, மலை போன்ற உற்பத்தி, முடிவற்ற பயனற்ற உழைப்பு போன்ற எதிர்மறையான குணங்களிலிருந்து மனித வாழ்வை மீள உருவாக்கும் நடவடிக்கைகள் தத்துவ அடிப்படைகளினாலும் தனி மனிதர்களாலும் , சமூகக்குழுக்களாலும், மதங்களினாலும் காலங்காலமாய் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது.

எளிய மனம் பெற்றோர் பேறு பெற்றோர் (மத்தேயூ :05) என்கின்றது விவிலியம். அன்பு மட்டுமே நிறைந்த ஒரு இனிய வாழ்வை நோக்கி வழி நடத்தப்பட்ட தன் சீடர்களை மந்தைகள் என்ற விளிம்பு நிலை சொல்லாடலை கையாண்டு அழைத்தார் ஏசு பிரான். கிறிஸ்து வின் வாக்களித்த பரலோக ராஜ்யத்திற்காக தங்களது இவ்வுலக வாழ்க்கையை ஒதுக்கி வைத்து துறவு கோலம் பூண்டவர்கள் ஏராளம்.

சிற்றரசுகளும் பேரரசுகளும் அதீத ஆடம்பரத்தின் தனி முழு குறியீடுகளாக இந்திய மண்ணில் பெரு வெள்ளமென கரை புரண்டு ஓடும்போது அதன் எதிர் நீரோட்ட மாக விளங்கியவர்கள் துறவிகள் , சித்தர்கள். அலைந்து திரியும் நாடோடி வாழ்க்கை முறையின் வாயிலாக சராசரி மனித வாழ்க்கையை நிராகரித்து இவ்வுலகை கடந்து சென்றவர்கள் .

இந்திய ஞான மரபின் தொடர்களான பௌத்தமும் சமணமும் ஆசை நீக்கத்தையும் தீவிர துறவையும் அழுத்தமாக போதித்தன.

சராசரியான மக்களுக்கான வாழும் வெளியை நுகர்வு பண்பாடானது அதி வேகமாக விழுங்கி வரும் வேளையில் அதற்கெதிரான வாழ்வியல் குறியீடுகளை உருவாக்கும் முயற்சியில் சுயுலோ , மாக் பாய்ல் போன்ற அய்ரோப்பியர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் வழியில் தன் எழுச்சியாக ஆங்காங்கே பணத்தை ஒதுக்கிய சமூகம் என்பன போன்ற சிறு குழுக்கள் முளை விடுகின்றன. இவர்களும் தங்களுக்கான பாதையின் வரைபடத்தை இந்தியாவின் துறவு மரபிலிருந்தும், கிறிஸ்தவத்திலிருந்தும் கண்டு கொண்டவர்களே.

நவீன வாழ்க்கை கையளித்துள்ள பேய் ஓட்டத்திலிருந்து தங்களை வலுவில் விலக்கிக் கொண்டு பாதையின் ஓரத்தில் இளைப்பாற நினைக்கும் மாற்று வாழ்க்கைக்கான இன்றைய தேடல் நம்மில் பலருக்கு புது செய்தியாக இருக்கலாம்.

ஆனால் பல்லாயிரம் வருடங்களாக இந்த நிலவுலகில் நீடித்து வரும் பழங்குடி சமூகமானது வாழ்க்கையின் மீது இயல்பாக மிதந்து சென்று கடந்து கொண்டிருக்கின்றது. அவர்கள் வாழ்க்கையிலிருந்து விலகிய பாதை ஓர பார்வையாளர்களாகவும் இல்லை. நம்மை போல அவர்கள் அன்றாட வாழ்க்கைக்காக மிக கடினமாகவும் திட்டமிடுவதில்லை. கதிரவனின் இளங்காலை கிரணங்களோடு சேர்த்து அன்றாடம் கையளிக்கப்படும் வாழ்வை அதன் மெருகு குலையாமலேயே அவர்கள் சுவைக்கின்றனர்.

பழங்குடியினர் என்ற இந்த ஆதி குடிகளின் வாழ்க்கை முறையில் தனி உடைமை இல்லை. மிக அற்பமான பொருட்கள் மட்டுமே அவர்களின் தனி உடைமை ஆக இருக்கும். மீதி அனைத்துமே பொது உடைமைதான். அவர்கள் பசியை தணிக்கக்கூடிய அளவில் மட்டுமே காடுகளிலும் மலைகளிலும் உள்ள கனியை, தேனை, கிழங்கை, தானியங்களை, சிறு விலங்கை பயன்படுத்துகின்றனர். கிடைப்பதை அனைவரும் பகிர்ந்து கொள்ளும் வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை அவர்களுடையது. உணவு கிடைக்காத காலங்களில் பட்டினி கிடப்பார்களே தவிர காட்டை சூறையாட மாட்டார்கள்.

உதிர்ந்த கனிகள், காய்ந்த இலை கிளைகள் என்பனவற்றை மட்டுமே பயன்படுத்துகின்றனர். பச்சை மரத்தையும் செடியையும் அவர்கள் தொடுவதில்லை. மண்ணுக்கடியில் உள்ள கனிம வளங்களுக்காக மண்ணுக்கு மேல் உள்ள பல்லுயிர் சூழலை குலைக்காதவர்கள்.

அதாவது இயற்கையை அன்னையாக அவர்கள் கருதி அது தானாக மனம் உவந்து ஊட்டுவதை மட்டுமே ஏற்கின்றனர். அமுதூட்டும் இயற்கையின் மார்பை அறுக்க விரும்பாத குழந்தைகள்தான் பழங்குடிகள்.

அவர்கள் அன்றாட உணவிற்காக மட்டும் வேட்டையாடும் அல்லது விவசாயம் செய்யும் நேரம் என்பது மூன்று முதல் ஆறு மணி நேரங்கள் மட்டும்தான். மீதி நேரம் முழுக்க பாரம்பரிய இசை, நடனம், இயற்கையுடன் மௌன உரையாடல், ஓய்ந்திருத்தல் என வாழ்க்கையை அவர்கள் களிப்பு மிக்கதாக முழுமையாக வாழ்கின்றனர். அவர்களுக்குள் யாரையும் யாரும் ஆதிக்கம் செய்வதுமில்லை, அடிமைப்படுத்துவதுமில்லை.

சில மாதங்களுக்கு முன்னர் சுற்றுச்சூழல் அமைப்பு ஒன்றினால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டேன். அந்த பயிற்சி வகுப்பின் ஓரம்சமாக மேற்கு மலைத்தொடரில் வாழ்ந்து வரும் காணிப்பழங்குடியினரிடையே ஓரிரவு தங்க வேண்டி வந்தது. அப்போது பல விஷயங்களைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்தோம்.

அப்போது எங்களுக்கு மலைப் பாதை வழிகாட்டியாக வந்த பூதத்தான் என்ற பெயருடைய காணி பழங்குடி எங்களோடு சில செய்திகளை பகிர்ந்து கொண்டார்.

காணிகளை இடம் பெயர்த்து சம வெளிக்குள் வாழ வைக்க அரசு முயற்சி எடுத்ததாம். அப்போது காணிப்பழங்குடியினர் அரசைப் பார்த்து பின் வருமாறு சொல்லியிருக்கிறார்கள்.

"நாட்டுக்குள் வந்தால் அங்குள்ள வாழ்க்கை முறையில் எங்களால் இணைய முடியாது. அதற்கு ஈடு கொடுக்க முடியாமல் நாங்களும் எங்கள் பெண்களும் சிறையில்தான் அடைபட வேண்டி வரும். காட்டின் ஒவ்வொரு அங்குலமும் எங்கள் உயிரோடும் உணர்வோடும் கலந்தது. எனவே எங்களை அங்கேயே விட்டு விடுங்கள். அங்குதான் எங்களால் இயல்பாக வாழவும் முடியும்."

தான்ஸானியாவின் ஹட்ஜா ஆதி இனக்குழுவினர் தொடங்கி, பழனி மலைத்தொடரில் வசிக்கும் பளியர் இன மக்கள் வரை ஆதி குடிகள் அனைவருமே காணிகள் சொன்னதைத்தான் சொல்கின்றனர்.

காடுகளிலும் மலைகளிலும் இயற்கையுடன் ஒன்றித்து வாழும் பழங்குடியினரை மனித நாகரீகத்தின் மூத்த குடிமக்களை சீர்திருத்த போகின்றோம் என படையெடுத்து சென்றனர் சம வெளி மனிதர்கள்.

அவர்கள் தங்களோடு கூடவே எடுத்துச் சென்ற அரசு, படை, மதம், பண்பாடு, பணப் புழக்கம், கல்வி முறை, சட்டம், உணவு, நுகர்வு வெறி, வாழ்க்கை முறைகளின் விளைவாக தொல் குடிகளின் வாழ்வில் நடந்தது என்ன?

காலங்காலமாக முழு உடல் நலனுடன் வாழ்ந்து அந்த மக்கள் தொற்று நோய் உட்பட பல உடல் நலக்குறைவுகளினால் பாதிக்கப்பட்டு இறந்து போனார்கள் . எஞ்சியவர்கள் ஊட்டச் சத்திழந்து நடமாடும் எலும்புக்கூடானார்கள். காட்டின் முணு முணுப்பை தங்களின் தாய் மொழியாக கொண்டவர்கள் தங்களுக்குள் ளேயே நவீன ஆயுதங்களை ஏந்தி கொலைக் கூச்சலிடும் வன்முறைக் கும்பலாக மாறிப் போனார்கள். போதையும் குடும்ப வன்முறையும் சில சமயங்களில் கொலைகளும் அன்றாட நிகழ்வாகிப்போயின.

தங்களின் வாழ்வாதாரத்திற்கு இயற்கையின் கருணையை மட்டும் நம்பி தன்மானத்துடன் இருந்தவர்கள் உல்லாச பயணம் வரும் நாட்டு மனிதர்களிடம் கையேந்தும் வறுமை மிக்கவர்களாக மாற்றப்பட்டார்கள். சம வெளிக்கு பிழைக்க சென்றவர்கள் அற்ப கூலிக்கு மாரடிப்பவர்களானார்கள். கொத்தடிமைகளாக ஆலைகளில் சிறைப்பட்டுள்ளார்கள்.

பள்ளிக்கூடங்களுக்குள் அடைத்து திணிக்கப்பட்ட பழங்குடி குழந்தைகளினால் புதிய வாழ்க்கை முறைக்குள் பொருந்த முடியாமல் தாழ்வு மனப்பான்மைக்கு ஆளானார்கள்.

மேற்கண்ட நிகழ்விற்கான ஏராளமான சான்றுகள் அந்தமான் நிக்கோபார் தீவுகளிலும் வடகிழக்கு மாநிலங்களிலும் ஆஃப்ரிக்க கண்டத்திலும் நிறைந்து கிடக்கின்றன.

இந்தியாவில் ஆங்கில ஏகாதிபத்தியம்தான் காடுகளின் வளங்களை தங்கு தடையின்றி கொள்ளையடிக்க முதன் முதலில் வன பாதுகாப்பு சட்டத்தை கொண்டு வந்தனது.

விடுதலை பெற்ற இந்தியாவிலும் அன்னிய வெள்ளை ஏகாதிபத்தியமானது வன பாதுகாப்பு சட்டம் உள்ளிட்ட பல மக்கள் பகை சட்டங்களின் வாயிலாக தனது இருப்பை உறுதி செய்து கொண்டே இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பேராசைக்காக உலகை தின்ன விரும்பும் மனதிற்கு அய்ரோப்பியர் இந்தியர் என்ற பூகோள வேறுபாடெல்லாம் இல்லை. அது ஒரு உலகளாவிய மனக் கோணல் நிலையாகும்.

தங்களுக்கு எதிரான பண்பாட்டு விழுமியங்களையும் மதங்களையும் வாழ்க்கை முறைகளையும் இந்த மனக்கோணல்காரர்கள் தங்களது நோக்கத்திற்கும் தேவைக்கும் ஏற்ப சீரழிக்க விழைகின்றனர். நெருப்பு மழை யிலிருந்து தப்பிக்க காகித குடையை கொடுத்து உதவும் கனவான்கள் இவர்கள்.

எடுத்துக்காட்டாக இரண்டு விஷயங்களை கூற முடியும்.

"வறுமையிலிருந்து மீட்டு நாகரீகத்தின் முன்னேற்றப்பாதையில் அழைத்து செல்கின் றோம்" என்ற கவர்ச்சிகரமான பதாகைக்குள் ஒளிந்து கொண்டு இயற்கையோடு இசைந்து வாழும் பழங்குடி வாழ்க்கை முறையை குலைக்கின்றனர். உலக மீட்பிற்காகவும் , நைந்து தொய்ந்த ஆன்மாக்களின் விடுதலைக்காகவும் வழி காட்ட வந்த மதங்களின் கையில் கொலை ஆயுதத்தை கொடுத்து அவற்றை வெறுப்பில் ஊறிய ஃபாஸிச சித்தாந்தமாக்குகின்றனர்.

பின்னர் அந்த சித்தாந்தத்தின் வழியாக பேரின வாத அரசியல் பொம்மலாட்டம் ஒன்றை இருள் மூலைகளுக்குள் ஒளிந்திருக்கும் மர்மக் கரங்கள் படைத்து இயக்குகின்றன.

அதனால்தான் அதற்கெதிரான மாமனிதர் களின் வழிகாட்டுதல்களும் மீட்புகளும் அகிலம் தழுவியதாய் இருக்கின்றது .வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில் எழுந்த விதம் விதமான தேவைகளையொட்டி அந்த மீட்பு இயக்கங்கள் மாறுபட்ட தளங்களிலும் வழி முறைகளிலும் செயல்பட்டிருக்கும், அவை அவற்றின் புற தோற்றம் மட்டுமே. . ஆனால் அவற்றின் அகமானது ஒரே ஆன்ம ஒளிச் சரட்டில் பின்னப்பட்டிருப்பதை நாம் உன்னிப்பாக கவனித்தால் அறிந்து கொள்ள முடியும்.

மனிதனின் இருப்பு என்பது பிறப்பு இறப்பு என்ற இரு புள்ளிகளுக்கிடையே தொடங்கி முடிந்து போகும் பயணம்தான். எல்லாம் அடங்கிய இந்த அண்ட வெளியில் மனிதன் என்பவன் சிறு துகளே. அவன் மட்டுமே இந்த அண்ட சராசரத்தில் தனித்த உயிரி இல்லை. அவனுடன் எண்ணற்ற உயிரினங்கள் படைக்கப்பட்டு வாழ்ந்து மடிகின்றன.

வாழ்வின் இந்த அநித்தியத்தையும் தன்னுடன் சேர்த்து எல்லா உயிரிகளுக்கும் பிரபஞ்சத்தின் மீது இருக்கும் கூட்டு பாத்தியதையையும் உணரும் மனித மனம் மட்டுமே யாருக்கும் தீங்கு விளைவிக்க துணியாது. பேராசை எனும் குவளையில் உலகை அள்ளி ஒரே மடக்கில் விழுங்க நினைக்காது. வானமும் பூமியும் அடங்கலான இந்த வெளியின் உண்மையான நிரந்தரமான உரிமை அவற்றை படைத்த பேராற்றல் ஒன்றுக்கு மட்டும்தான் உடையது என்ற பேருண்மையின் வெளிச்சத்தில் எப்போதும் அந்த மனம் வழி நடத்தப்படும்.

வாழ்வின் நிலையா தன்மையை தன் அன்றாட வாழ்வினுக்குள் பொருத்தி பார்க்கும் மனித ஆன்மாவானது நாம் மூச்சு விட்டு கொண்டிருக்கும் இந்த கணம்தான் பருண்மையானது என்பதை புரிந்து கொள்ளும். எதிர்காலம் பற்றிய அஞ்சாமை என்ற பிரபஞ்ச உயிரிகளின் இயல்பான ஓட்டத்தில் அவன் இணைவான். பேராசையும் சுரண்டலும் ஆதிக்க வெறியும் எவ்வளவு செயற்கையானது என்பதுடன் அது மொத்த அண்ட சராசரத்திற்கு எதிரான போர் பிரகடனம் என்பதையும் அறிந்து கொள்வான்.

கண்மூடித்தனமான வாழ்க்கை ஓட்டத்தின் சிதிலங்களிலிருந்து புதையுண்டு போகும் இந்த வாழ்விலக்கணத்தை அவ்வப்போது மீட்டுத்தரு பவர்கள் ஞானிகளும், தீர்க்கதரிசிகளுமாகிய மகா மனிதர்கள் மட்டுமே.

இந்த பொது உண்மைகள் வெறும் ரசனைக்குரிய காட்சிப்பொருளாக நீடித்து விடாமல் அன்றாட வாழ்விற்குரிய இலக்கண மாகவும், நிகழ்முறைகளாகவும் அவர்களால் செயல் உரு கொடுக்கப்பட்டன.

பாலைவன நிழல் மேகமான முஹம்மது நபி உங்களில் யார் உடல் நலம் உள்ளவர் களாகவும் உயிருக்கும் குடும்பத்திற்கும் பாதுகாப்பு பெற்றவராகவும் அன்றை நாளுக்குரிய உணவை அடைந்தவராகவும் உள்ளாரோ அவர் இவ்வுலகம் முழுவதையும் அடைந்து கொண்டவரைப் போன்றவர் ஆவார் {நூல்: திர்மிதீ, இப்னு மாஜா} என்ற எளிமையான அடையாளப்படுத்தல் மூலம் முடிவற்ற பேராசை பெரு வெளியில் அலைந்து கொண்டிருந்த மனித வாழ்வை எல்லோருக்கு மானதாக வசப்படுத்தி தந்தார்.

இந்தியாவின் ஆன்மாவை எளிமை, கிராமம், கைத்தொழில், தற்சார்பு, இயற்கை மருத்துவம், சூழலியல் போன்ற புள்ளிகளில் அடையாளங்கண்டார் காந்தியடிகள்.

நிலமெங்கும் படர்ந்து வரும் ஆதிக்க பண்பாட்டு நுகர்வு பேராசை இருளிலிருந்து உலகினை மீட்கும் ஆன்ம திறனை கொண்டிருப் பவர்கள் இந்த மகாத்மாக்களே.■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏகன் ▸ அரசியல்

# புலம் நலிந்த களம்

**க**னவு இல்லையேல் வாழ்க்கை இல்லை. குறிப்பாகப் பிரதமர் கனவுடன் நாடெங்கிலும் பல தலைவர்கள் விழிப்புடன் செயல்பட்டு வருகிறார்கள். வரும் நாடாளுமன்றத் தேர்தல், இதுவரை இல்லாத அளவுக்கு வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என நாலாபுறமும் கனவுகளை விதைத்திருக்கிறது. மத்திய அரசியலில் தேசியக் கட்சிகள் தனித்து நிற்க இயலாத நிலையில், மாநிலக் கட்சிகளின் ஆதிக்கம் தேர்தலுக்குத் தேர்தல் அதிகரித்து வருகிறது. இந்திய ஜனநாயகத்தின் தழைத்தோங்கல் என்பது இப்படியான முக்கிய மாற்றங்களையும் உள்ளடக்கியது என்பதைக் கட்சிகள் மட்டுமல்ல, தெளிந்த வாக்காளர்களும் அறிவார்கள். பிரதான தேசியக் கட்சிகளான காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. ஆகிய இரண்டும், வரும் தேர்தலில் தனிப் பெரும்பான்மையை எட்ட முடியாது என்றும் மாநிலக் கட்சிகள் முந்தைய தேர்தல்களைவிடக் கூடுதல் இடங்களைப் பெறுவதற்கு வாய்ப்புகள் அதிகம் என்றும் கணிப்புகள், ஊகங்கள் பரவலாக நிலவி வரும் வேளையில், இந்தியத் துணைக் கண்டத்தின் கனவுப் பிரதேசத்தில் பிரதமர் கனவுகளின் நெரிசல் அதிகமாகி வருகிறது.

குஜராத் முதல்வர் நரேந்திர சிங் மோடியைப் பிரதமர் வேட்பாளராக அறிவித்திருக்கும் பா.ஜ.க, பத்தாண்டு ஆட்சிக் காலத்தை முடித்துவிட்டு விடைபெறும் காங்கிரஸைவிடக் கூடுதல் இடங்களைக் கைப்பற்றும் என்று இதுவரை வெளியான பெரிய, சிறிய ஊடகக் கணிப்புகள் கூறுகின்றன. அதிக இடங்களைப் பிடித்தாலும் ஆட்சி அமைக்க பா.ஜ.கவுக்கு மாநிலக் கட்சிகளின் ஆதரவு தேவை. அவ்வாறில்லாமல், பா.ஜ.க அன்றி ஆட்சி அமைக்கும் வாய்ப்பைப் பெறும் எந்த அணியும் காங்கிரஸ் ஆதரவைத் தவிர்க்க இயலுமா என்பதும் கேள்விக்குறியதே. மாநிலக் கட்சிகளின் ஆதரவுடனான பா.ஜ.க ஆட்சி அல்லது காங்கிரஸ் ஆதரவுடனான பிற தேசிய, மாநிலக் கட்சிகளை உள்ளடக்கிய மூன்றாவது அணி ஆட்சி ஆகியவற்றுக்குச் சாத்தியம் அதிகம் என்பது அரசியல் வட்டாரத்தின் அழுத்தமான எதிர்பார்ப்பாக இருக்கிறது. இப்போது கூறப்படுவதைவிடக் கூடுதலாக இடங்களைப் பிடிக்கும்பட்சத்தில், பிற கட்சிகளின் ஆதரவுடன் மறுபடியும் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைக்கும் சாத்தியத்தையும் நாம் மறுத்துவிட முடியாது. ஏனெனில், கூட்டணி அரசியல் நுட்பத்தில் காங்கிரஸ் பிற எந்தக் கட்சிகளைக் காட்டிலும் கை தேர்ந்தது என்ற உண்மையோடு ஒட்டிப் பார்த்தால் அந்தச் சாத்தியம் புரியும். ஆட்சிக்கு யார் வரவேண்டும், யார் வரக்கூடாது என்பது அவரவர் விருப்பம் சார்ந்து வேறுபடலாம். ஆனால் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பை நெருங்கும்பட்சத்தில், யாரால் எதிரணியைவிட விரைவாகப் போதுமான ஆதரவைத் திரட்டவும் சிக்கல்கள் கடந்து தக்கவைத்துக்கொள்ளவும் முடியுமோ அவரே அதாவது அக்கட்சியே ஆட்சி அமைப்பதற்கான சாத்தியம் அதிகம்.

பா.ஜ.க., காங்கிரஸ் மற்றும் தேசியக் கட்சிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இடதுசாரிகள் ஆகியவை நாட்டின் பிற பகுதிகளில் தங்கள் வெற்றி வாய்ப்பு குறித்து ஓரளவுக்குக் கணிக்க முடிந்தாலும், தென் மண்டலம் அவர்களுக்குப் புதிராகவே இருக்கிறது. ஆந்திரம் இரண்டாகப் பிரிந்து தெலுங்கானா உருவான நிலையில், தென் மாநிலங்களில் தமிழகம்தான் அதிகத் தொகுதிகளைக் கொண்டதாக (39 +1) இருக்கிறது. கடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல்களைப் போல, இந்த முறையும், தமிழகத்தில் கிடைக்கும் வெற்றி வாய்ப்பு அல்லது தமிழகத்திலிருந்து கிடைக்கும் ஆதரவு, மத்திய ஆட்சியைத் தீர்மானிப்பதில் முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. அதன் பொருட்டே, இங்கு அரசியல் கட்சிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் புதுப்புது உத்திகளைக் கையாண்டு அணி சேர்க்கைக்கு முயன்று வருகின்றன.

பா.ஜ.க அல்லது காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி சேரலாம் என்று தொடக்கத்தில் பேசப்பட்டாலும், ஒரு கட்டத்திற்குப் பிறகு கிட்டத்தட்ட தனித்துப் போட்டியிடுவதில் அதிமுக பொதுச் செயலரும் முதல்வருமான ஜெயலலிதா உறுதியாக இருந்தார். எச்சரிக்கையான, எதிர்கால அனுகூலம் நிறைந்த கணிதத்தோடு இடதுசாரிகளை மட்டும் சேர்த்துக்கொண்டு ஜெயலலிதா தயாராகிவிட்டார். ஆனால் கடந்த முறை ஓரணியிலிருந்த திமுக, காங்கிரஸ் இப்போது அவ்வாறு அணி சேர்வதில் பல சிக்கல்கள். உள்ளார்ந்து நெருக்கமாக இருந்தாலும் உலகறிய கைகோர்க்க முடியாத சூழல். கழகத்தின் மேரு என்று கருணாநிதியால் பாராட்டப்பட்ட நேரு ஏற்பாடு செய்த பிரம்மாண்ட திருச்சி தி.மு.க மாநாட்டில், திருப்புமுனை என்பது அதிகம் உச்சரிக்கப்பட்டது. ஆனால் அந்த மாநாட்டிலும் கருணாநிதியால் திமுக கூட்டணி பற்றித் தெளிவான முன்னறிவிப்பு எதையும் வெளியிட முடியவில்லை. மாநாட்டை வெற்றிகரமாக நடத்திய களிப்பில் திரும்பிய திமுக தலைவர்களுக்கு, முதல்வர் ஜெயலலிதாவின் அடுத்தடுத்த முடிவுகள், அறிவிப்புகள், திருப்புமுனை புகழை திருச்சி இழந்துவிடுமோ என்ற சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறது.

இதுவரை எந்தத் தேர்தலிலும் இல்லாத அளவுக்கு, கூட்டணி அமைக்க கருணாநிதி கடுமையாகப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். ம.தி.மு.வுடன் இணைய முடியாது. பா.ம.க பா.ஜ.கவுடன் சேர்ந்துவிட்டது. காங்கிரஸிலிருந்தும் விலகி வந்துவிட்ட நிலையில், திமுகவுக்கு உள்ள ஒரே நம்பிக்கை தே.மு.தி.க.தான். ஆனால் இதுதான் தருணம் என்று எல்லாக் கட்சிகளுக்கும் கேப்டன் போக்கு காட்டுகிறார். எங்கு ஓடுகிறது என்று தெரியாமல் ஓடும் குழந்தையைப் போல, கேப்டன் விளையாட்டுக் காட்ட, பா.ஜ.க., காங்கிரஸ், திமுக ஆகியவை பின்தொடர்ந்து ஓடிக் களைத்து ஓய்ந்துவிட்டன. இப்படி ஓடுவது தனக்கே ஆபத்தாக முடியலாம் என்பது குழந்தைக்குத் தெரியுமா, என்ன?

உளுந்தூர்பேட்டை ஊழல் எதிர்ப்பு மாநாட்டிலேயே கூட்டணி பற்றி அறிவிப்பதாகச் சொன்ன விஜயகாந்த், இப்போது வரை (இக் கட்டுரை எழுதப்படும் வரை) எந்தப் பக்கம் செல்வார் என்பது குறித்த தெளிவான அறிகுறி ஏதும் இல்லை. விஜயகாந்த் சினிமாவில் நல்ல ஸ்டன்ட் மாஸ்டர். அதுபோலவே அரசியலிலும் செயல்படுகிறார் என்று திமுக தரப்பு முயற்சிகள் பலிக்காத சலிப்புடன் கூறியிருக்கிறார் கருணாநிதி. திமுகவுடன் கூட்டணி சேர்ந்தால், 2016 சட்டப்பேரவைத் தேர்தலில் தனது முதல்வர் கனவு நனவாவதில் சிக்கல் உருவாகும் என்று விஜயகாந்த் யோசிக்கிறார். கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் திமுகவையும் பின்தள்ளிவிட்டு பிரதான எதிர்க்கட்சியாக உருவெடுத்ததும் தமிழகம் முழுவதும் பரலாக, பிற கட்சிகளின் வெற்றி வாய்ப்பைப் பாதிக்கக்கூடிய குறைந்தபட்ச வாக்கு வங்கியைக் கொண்டிருப்பதாலும் தேமுதிக தனது பேர சக்தியின் அதிகபட்ச உயரத்தை எட்ட நினைக்கிறது.

பாஜக மரபிலிருந்து விலகி, பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்ட திருச்சி, வண்டலூர் கூட்டங்களில் மோடி பேசிவிட்டுச் சென்றிருக்கிறார். ஒருகாலத்தில், திராவிடக் கட்சிகளின் பாணியை விமர்சித்த பாஜக, இப்போது பொன்னார் அழைக்கிறார் என்ற வாசகத்துடன் மோடி கூட்டத்துக்குத் தொண்டர்களை வரவேற்கிறது. பொன்னார் என்பது அக்கட்சியின் மாநிலத் தலைவர் பொன். ராதாகிருஷ்ணனைக் குறிக்கும். பொன் என்பதன் தமிழ் வடிவமாம் அது. இளந்தாமரை மாநாடு என்று நல்ல தமிழ் பேசுகிறார்கள். தேசியக் கட்சி என்ற தொனியில், தூரத்திலிருந்து அரசியல் செய்ய முடியாது என்பதை பாஜக புரிந்துகொண்டிருக்கிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் எப்போதும் திமுக அல்லது அதிமுகவால் காங்கிரஸ் நாடப்படும். குறிப்பாகக் கடந்த சில தேர்தல்களில் திமுக, காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளுக்கும் ஒருவரை ஒருவர் சார்ந்து பலன் ஈட்ட வேண்டிய நிலை. அவ்வாறே செய்தன. இந்த முறை அரசியல்ரீதியாக ஓரணியில் திரள முடியாதவாறு சிக்கல். ஆனால், இருதரப்பும் அந்தத் தடையை எக்கணமும் உடைத்துவிட்டு கைக்கோர்க்கலாம். அது தேர்தலுக்கு முன்போ அல்லது பின்போ இருக்கலாம்.

ஆக, இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தமிழகத்தில் கிட்டத்தட்ட தனித்துவிடப்பட்டிருக்கிறது. அதற்குள்ள ஒரே நம்பிக்கை தே.மு.தி.க.தான். காங்கிரஸைத் தவிர்த்த நிலையில், தி.மு.க.வுக்கு உள்ள ஒரே எதிர்பார்ப்பும் தே.மு.தி.க.தான். ஒரு வளரும் மாநிலக் கட்சியான அதாவது தேமுதிகவின் ஆதரவைப் பெறுவதற்கு, அதைவிட வலுவான மாநிலக் கட்சியான திமுகவும், இங்கே சுயபலம் குன்றிய தேசியக் கட்சிகளான காங்கிரஸ் மற்றும் பாஜகவும் மும்முரம் காட்டுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் களத்தின் அடிக்கல் எப்படி இருக்கிறது என்பதைப் பிரதிபலிக்கிறது.

தில்லியின் முன்னாள் முதல்வரான ஆம் ஆத்மி அரவிந்த் கெஜ்ரிவாலின் தேசியக் கனவுக்கு எதிராக அவரது மேனாள் குரு அண்ணா ஹஸாரே குரல் விடுத்திருக்கிறார். மேற்கு வங்கத்தின் மம்தா பானர்ஜி பிரதமர் பதவிக்குத் தகுதியானவர் என்றும் அவர் வெற்றி பெற பிரசாரம் செய்யப்போவதாகவும் அறிவித்திருக்கிறார்.

தெலுங்கானா மசோதாவை நிறைவேற்றியதற்கு நன்றிக் கடனாக, தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதியின் தலைவர் சந்திரசேகர் ராவ் காங்கிரஸ் கட்சியுடன் தனது கட்சியை இணைத்துவிடுவார் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. ஆனால், அவரது கட்சியிலிருந்தே அதற்கு எதிர்ப்புக் குரல் கிளம்பியிருக்கிறது. சீமாந்தராவில் ஏற்படும் இழப்பை தெலுங்கானாவில் சந்திரசேகர் ராவ் மூலமாகச் சரிக்கட்ட காங்கிரஸ் நினைக்கிறது.

மோடியைப் பிரதமராக விடமாட்டேன் என்று முழங்கியிருக்கிறார் பகுஜன் சமாஜ் கட்சியின் மாயாவதி. ஐம்பது இடங்கள் பெற்றுவிட்டால் நிச்சயம் தாம் பிரதமராகிவிடலாம் என்ற நம்பிக்கையிலிருக்கிறார் முலாயம் சிங் யாதவ்.

பிரதமர் வேட்பாளராக மோடி அறிவிக்கப்பட்டதில், வெளிப்படையாகத் தனது கசப்புணர்வைக் காட்டிய மூத்த தலைவர் அத்வானி சற்றே ஒதுங்கியிருந்தார். ஆனால், சமீபத்தில், எனது அரசியல் வாழ்க்கை இன்னும் முடிந்துவிடவில்லை என்று கூறியிருக்கிறார். இதற்கு மெய்ப் பொருள் காண்பது பாஜகவின் பிரச்சினை.

கருணாநிதி மீண்டும் தனது உயரத்தை உறுதி செய்திருக்கிறார். பிரதமர் பதவி வாய்ப்பு வந்தால் ஏற்பீர்களா என்ற கேள்விக்கு எனது உயரம் எனக்குத் தெரியும் என்று ஏற்கெனவே ஒருமுறை அவர் கூறியதை மறுபடியும் சொல்லியிருக்கிறார். ஆனால், அவரது கட்சியினர் கலைஞர் கைகாட்டுபவர்தான் மத்தியில் பிரதமராக முடியும் என்று திருச்சி மாநாட்டில் முழங்கியிருக்கிறார்கள்.

கிட்டத்தட்ட ஒரு மண்டலம் சொச்சம் தில்லியை ஆட்சி செய்த கெஜ்ரிவால் தவிர, இந்திய அரசியல் களத்தில் எந்தக் கட்சிக்கும் தனித்துப் போட்டியிடும் துணிச்சல் இல்லை. அவர் வழி தனி வழி! பவார், நிதிஷ், லாலு, பாஸ்வான் உள்பட மாநில, தேசியத் தலைவர்கள் அவரவர் அரசியல் செல்வாக்குக்கு ஏற்ப கூட்டணிப் பேச்சுவார்த்தை நடத்திவருகிறார்கள். அவ்வாறே இதரக் கட்சிகளும்.

திருச்சி தி.மு.க. மாநாட்டில் தமது அணியில் அங்கம் வகிக்கும் மிகச் சிறிய கட்சிகளின் தலைவர்களுக்கும் பேச வாய்ப்பளித்தார் கருணாநிதி. அது தேர்தல் கால உத்தி என்று பேசப்பட்டாலும், இன்றைய அரசியலின் நாடியைக் கூடுதலாகப் புரிந்தவராக இருக்கிறார் கருணாநிதி என்பதைக் காட்டுகிறது.

இனி அரசியலில் யாரும் யாரையும் முடிவாகவும் முற்றிலும் பகைத்துக்கொள்ள முடியாது. கூட்டணி அரசியலின் ஆதார விதியே அதுதான் என்றாலும் நாளுக்கு நாள் அந்த விதியின் பிடி இறுகி வருகிறது. தனித்த பயணம் யாருக்கும் சுகமில்லை. காங்கிரஸ், பாஜக ஒன்று சேர முடியாது. அதுபோல திமுக, அதிமுக கைகோர்க்க முடியாது. மற்றபடி, ஒவ்வொரு கட்சியும் கூட்டணி வாய்ப்பின் கடைசித் தருணம் வரை பாடுபட வேண்டியிருக்கிறது. பெரும்பான்மை கிடைக்காவிட்டாலும், அதை உருவாக்குவதில் தீர்மானிக்கும் பங்கேற்பாளர்களாக இருக்க ஒவ்வொரு கட்சியும் விரும்புகின்றன. ஒரே கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் கோலோச்சிய காலம் மறைந்துவிட்டது. இனி, மத்திய அதிகாரம் என்பது ஒற்றைப் புள்ளியில் சாத்தியமில்லை. மாநிலக் கட்சிகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த புள்ளிகளின் வடிவமே மத்திய அதிகாரமாக உருவெடுக்கும். இதுதான் இந்திய ஜனநாயகத்தின் பலம். என்றாலும் அதுவே ஒருவகையில் பலவீனமாகவும் தெரிகிறது. இதன் பொருட்டு நிகழும் அரசியல் விழுமியங்களின் தேய்மானம் பல கேள்விகளை எழுப்புகிறது. எந்தக் கட்சியும் அது எதற்காக நிறுவப்பட்டது என்று பிரகடனம் செய்ததோ அந்தக் கொள்கையின் பிடிப்புடன், குறைந்தபட்சம் நெருக்கமாகக்கூட அல்லது சற்றே தள்ளியும்கூட இல்லை. மாறாக, அந்தக் கொள்கையைச் சுருட்டிப் பின்நகர்த்தி, அரசியல் பலன் நோக்கி முன்நகர்கின்றன. வாக்கு வங்கிகளின் சேர்மானம் வெற்றியைத் தீர்மானிக்கும் நிலையில், நாங்கள் இவ்வாறாகத்தான் செயல்பட முடியும் என்று கட்சிகள் வாதிடுகின்றன. அந்த வாதத்தை முற்றிலும் ஒதுக்கிவிட முடியாது என்றாலும், கொள்கை சார்ந்த செயற்பாடு என்பது பழங்கதையாகச் சுருங்கிவிடுமோ என்ற அச்சம், ஆரோக்கியமான அரசியலை வளர்த்தெடுக்கும் வளமையான ஜனநாயகத்தில் தீவிரம் கொண்டவர்களின் மத்தியில் உருவாகியிருக்கிறது.

சமூக உணர்வு மிக்க, தேச நலன் நாடும் தேர்ந்த வாக்காளன் மன உளைச்சலுக்குத் தள்ளப்பட்டிருக்கிறான்.

உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது! ■

**அறிவிப்பு**

**ஞாநி பதில்கள்**
**அடுத்த இதழில் வரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முகிலன் புகழ் அஞ்சலி

'பாடுமீன் மண்ணீன்ற ஈழமகனானாலும்

தமிழ்நாட்டு மண்ணின் ஒளிஞானியாகினாய்!

தமிழ்ச் சினிமாவின் கலங்கரை விளக்காகி

தமிழர்தம் கலை வாழ்வில் அழியாத கோலமானாய்!"

கடந்த 16.02.2014 மாலை பாரீசின் மையப் பகுதியும் தமிழர்களது தமிழ்க் கலாச்சார விற்பனை நிலையங்கள் அமைந்ததுமான லாச்சப்பல் பகுதியில் பிரான்ஸ் வாழ் தமிழ் திரைக் கலைஞர்கள் ஆர்வலர்கள் இரசிகர்கள் படைப்பாளிகள் இலக்கியவாதிகள் கலந்து கொண்ட மறைந்தும் மறவாக் கலைஞன் 'ஒளிஞானி பாலுமகேந்திரா' அவர்களுக்கான புகழ் அஞ்சலி நிகழ்ந்தது. மொழிபெயர்ப்பாளரும் இலக்கியவாதியுமான வாசுதேவன் அவர்களது ஒன்றுகூடல் வளாகத்தில் அமைதியான முறையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புலம்பெயர்வின் முதற் தலைமுறையினருடன் அடுத்த தலைமுறையினரும் இளைஞர்களும் கலந்து கொண்டதானது தமிழ்த் திரையுலகின் தனித்துவ சகாப்தமென வாழ்ந்த பாலு மகேந்திராவின் செயல் வீச்சைக் காட்டியதாகவே கூறவேண்டும்.

இந்நிகழ்வை ஈழத் தமிழர் திரைப்படச் சங்கம் (LIFT) திரை ஆர்வலர்களது ஒத்துழைப்புடன் ஒருங்கிணைத்திருந்தது. நிகழ்வை இதன் தலைவர் றொபேர்ட் அவர்கள் மௌன வணக்கத்துடன் தொடக்கி வைத்தார். தொடர்ந்து நிகழ்வை தமிழமுதம் வானொலி இயக்குநர் இராஜென் தொகுத்தளித்தார். எம்மோடு வாழும் ஈழத்தின் மூத்த கலைஞர் ஏ.ரகுநாதன் அவர்கள் ஒளிஞானி பாலுமகேந்திரா அவர்களது உருவப்படத்திற்கு ஒளிவிளக்கேற்றி நினைவுரை ஆற்றினார். தமிழ்த்திரையின் தெளிவான வழிகாட்டியாக வாழ்ந்து காட்டிய பிதாமகனை தனது நவாலி ஊரில் அவர் கல்வி கற்றிருந்த காலத்தையும் நினைவுகூர்ந்ததுடன் சிறு பிராயத்திலிருந்து கடைசி மட்டும் திரைக் கனவுடனேயே வாழ்ந்த கலைஞனை நெகிழ்சியுடன் பகிர்ந்து கொண்டார். தொடர்ந்து அண்மையில் பிரான்சில் நடைபெற்ற கைத்தொலைபேசி குறும்படப் போட்டியில் முதற் பரிசைப் பெற்ற இயக்குனர் மைக்கல் என அறிப்பட்ட இளைஞன் சதாபிரணவன் அவர்களது புகழ் உரையில் தன்னால் பாலுமகேந்திரா அவர்களது பட்டறையின் பயிலரங்கில் பங்கேற்க முடியாமற் போன ஆதங்கம் வெளிப்பட்டது.


தொடர்ந்து முகுந்தன், பரா, நாகேஸ், அசோக், வாசுதேவன், கேசவன் என திரை ஆர்வலர்கள், படைப்பாளிகள், விமர்சகர்கள், சமூக அக்கறையாளர்களுமாக பலர் புகழுரை ஆற்றினர். புலம்பெயர் நாடொன்றில் தமிழ்த் திரைப்பட வழிகாட்டியாக தடமமைத்துக் கொடுத்த பாலுமகேந்திரா நினைவிலான சங்கம நிகழ்வு இயல்பாக நடந்ததென்பது குறிப்பிடத் தக்கதாகும். உலகளாவிய ஆர்வலர்களது மத்தியில் பெரும் ஈர்ப்பினை விரவியுள்ளதற்கான சான்றாகவே பதிவாகியது. ■





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துக்கு உயிரானேன் விளைவதற்கு ஊனானேன்



ஒருமாதக் கோயிலறை - கண்ணேநீ
உருவானாய் நெல்லளவு
இருதயமாம் நுரைப்பூவாம் - கண்ணேநீ
எடுத்தமுதல் கொள்ளவு!

மறுமாதம் நிறைவாகும் - கண்ணேயுன்
மதியிலிரு மீனுருவம்
சிறகாக விரல்விரியும் - கண்ணேயுன்
செவியிரண்டும் எள்ளுருவம்!

வாரமொரு ஈராறு - கண்ணேயுன்
வாயுதடு மாட்சிபெறும்
போராடும் கேடயமாம் - கண்ணேயுன்
பொன்னுறுப்பு காட்சிதரும்!

ஈரிரண்டு நிலாவரிசை - கண்ணேயுன்
இதயமது இசைபாடும்
புருவமிரு வில்வரிசை - கண்ணேயுன்
பூவிரல்கள் முடிசூடும்!

பத்துவிரல் கடைதாண்டும் - கண்ணேயுன்
பனிக்குடத்து உடல்நீளம்
சத்திபெற்று எடைகூடும் - கண்ணேயுன்
சந்திரனார் ஐந்தாவார்!

கண்ணிரண்டின் மணிதிறந்தாய் - கண்ணேநீ
காதவிழ்த்து ஓசைகொண்டாய்
கைவிரல்கள் ரேகைகொண்டாய் - கண்ணேநீ
கலையாறு பிறைவளர்த்தாய்!

இரண்டோடு மாதமைந்து - கண்ணேநீ
எட்டியெட்டி முட்டுகிறாய்
இமைதிறந்து தேடுகிறாய் - கண்ணேநீ
இருட்டறையில் நீந்துகிறாய்!

முழுகாத மாதமெட்டு - கண்ணேநீ
முழுநிலவு முல்லைமொட்டு
மூடுதிரை வலைதரித்தாய் - கண்ணேநீ
முந்திரியாய் வட்டமிட்டாய்!

வித்துக்கு உயிரானேன் - கண்ணேநீ
விளைவதற்கு ஊனானேன்
பத்துக்கு முதல்மாதம் - கண்ணேநீ
பாதைதேடும் நிறைமாதம்!

இடுப்பெலும்பு நொறுநொறுங்க - கண்ணேயுன்
இளையதலை கீழிறங்க
எடுத்தேனே மறுபிறவி - கண்ணேயுன்
இனியகுரல் எனைத்தாங்க!

நிலமடந்தை மணமறிந்தாய் - கண்ணேநீ
நீல்விசும்பு காற்றறிந்தாய்
நீரோடு தீயறிந்தாய் - கண்ணேநீ
நின்தாய்என் சூடறிந்தாய்! ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சாவூர் வி.அ.இளவழகன்



வாழ்க்கை

# முதுமையை விரட்டும் மந்திரச்சாவி!

அம்மா, அப்பா, மாமா, மாமி, தாத்தா, அப்பாயி, அம்மாயி, பாட்டி, பெரியப்பா, பெரியம்மா, சிற்றப்பா, சின்னம்மா, அத்தை, அண்ணன், அக்கா, தங்கை, தம்பி, பெயரன், பெயர்த்தி - என்கிற கூட்டுக்குடும்ப வாழ்க்கை சிதறிவிட்டது. "நாம் இருவர் - நமக்கு ஒருவர்", "கணவன்-மனைவி-ஒரே ஒரு பிள்ளை", எனச் சுருங்கிப் போன நாகரிக யுகம், இப்போது!!

"முதியோர் சொல்லும் முதுநெல்லிக் கனியும் முன்னே கசந்து பின்னே இனிக்கும், முதியோர் சொல் வார்த்தை அமுதம்" - போன்ற செங்கதிர்க் கீற்றுகள் எல்லாம் மறைந்து விட்டன. கிழம்கட்டை, பெரிசு, சாய்வு, சக்கர நாற்காலிகள், கீறல் விழுந்த இசைத்தட்டு என அத்துவான காரிருள்.

ஓடி ஓடி, பணத்தைத் தேடி கடனை வாங்கி, மனைக்கட்டை வாங்கி வீட்டைக்-கட்டி மகனுக்கும் மகளுக்கும் திருமணத்தை முடித்து முதுமையோடு போராடி ஓய்வு தேடும் காலகட்டத்தில், தொலைபேசி, பால்அட்டை, மின்சாரக் கட்டணங்கள் செலுத்த, காய்கறிகள் முதலியவற்றை வாங்க எந்திரமாக இன்னமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள்தொகைக் கணக்கீட்டின்படி சீனாவிற்கு அடுத்த நிலையில் இந்தியாவில்தான் முதியோர் எண்ணிக்கை அதிகம். அறுபது அகவைக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் இந்தியாவில் மட்டும் நூறு பில்லியன். 2050இல் இந்த எண்ணிக்கை 16% ஆக உயரும். சராசரி இறப்பு வயது 60லிருந்து 70ஆக உயர்ந்து விட்டது என்றாலும் வாழ்நாளின் பிற்பகுதியான 20ஆண்டுகளை பிணியுடன், நோயுடன் முதியோர் போராடிக் கொண்டுள்ளனர் என்பது கசப்பான உண்மை.

சுழன்று கொண்டிருக்கும் முதியோர்கள் எண்ணற்றோர்! சிறகொடிந்த கிளிகளாக முதியோர் இல்லங்களில் மூப்போடும், நோயோடும் போராடிக் கொண்டிருக்கும் முதியோர்கள் ஏராளம்!!

மக்கள்தொகைக் கணக்கீட்டின்படி சீனாவிற்கு அடுத்த நிலையில் இந்தியாவில்தான் முதியோர் எண்ணிக்கை அதிகம். அறுபது அகவைக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் இந்தியாவில் மட்டும் நூறு பில்லியன். 2050இல் இந்த எண்ணிக்கை 16% ஆக உயரும். சராசரி இறப்பு வயது 60லிருந்து 70ஆக உயர்ந்து விட்டது என்றாலும் வாழ்நாளின் பிற்பகுதியான 20ஆண்டுகளை பிணியுடன், நோயுடன் முதியோர் போராடிக் கொண்டுள்ளனர் என்பது கசப்பான உண்மை.

“தத்தக்க புத்தக்க நாலு காலு, தானா நடக்கையிலே இரண்டு காலு, உச்சி வெளுக்கையிலே மூணு காலு, ஊருக்குப் போகையிலே பத்து காலு” - என குழந்தை, இளைஞன், முதுமை, இறுதிப் பருவங்களை மனிதராகப் பிறந்த எல்லோரும் சந்தித்தே ஆக வேண்டும் என்பது இயற்கை நியதி. குழந்தை நிலையில் தோன்றி வளரும் மனிதனின் இறுதி நிலை, உடலாலும் உள்ளத்தாலும் குழந்தை நிலைக்கே போய்விடுகிறது. குழந்தை மருத்துவம் (Peadiatrics) இருப்பதைப் போல முதியோர் மருத்துவம் (Geriatrics) என்பதும் தேவையல்லவா! 100க்கு 10 பேர்கள் முதியோராக விளங்கும் தமிழ்நாட்டில் ஒரேயொரு அரசு முதியோர் மருத்துவ மையம் மட்டுமே உள்ளதா? சாதி, மதம், இன வாரியாகத் தனியார் முதியோர் இல்லங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முளை, துளிர், தளிர், சிற்றிலை, பெரிய இலை, பழுப்பு, சருகு, உதிர்வு - என்பதும் அரும்பு, மொக்கு, மொட்டு, அலர், மலர் - என்பதும் பிஞ்சு, காய், கனி - என்பதும் இயற்கை நியதிகள்தானே? இன்றைய இளைஞன் நாளைய முதியவன்தானே? வந்தால் வரட்டும் முதுமை! தனக்குத்தானே நிகர் என வாழ்ந்தால் உலகத்தில் ஏது தனிமை? எனச் சவால் விடுவோர் எத்தனை பேர்?**

தமிழ்நாடு முழுதும் காணப்படுகின்றனவா? தாயும் தந்தையும் தஞ்சாவூரில் தட்டேந்திப் பிச்சை எடுக்கையில், கும்பகோணத்தில் கோ தானம் (பசு தானம்) செய்கின்ற மகன்கள் - மகள்கள் இன்றைக்கும் இருக்கின்றார்களா? - என்பவை விடைதேடும் வினாக்கள்...விடை பகர்வோர் யார்?

இந்தியா முழுமைக்கும் உள்ள மூத்த குடிமக்களுக்காக, முதியோர் மருத்துவம் MD GERIATRICS உள்ள மருத்துவக் கல்லூரிகள் நான்குதான். சென்னையில் அரசு மருத்துவ-மனையில் ஒரே ஒரு பிரிவு (WARD) மட்டுமே முதியோர் மருத்துவ படுக்கை அறையாக உள்ளது.

நினைவாற்றல் இழப்பு, தளர்ச்சி, மன உடல் நலிவு, இரத்த அழுத்தம், கை கால் மூட்டு வலி, சர்க்கரை நோய், தடுமாறி விழுந்ததால் உடல் நலிவு, செவி, பார்வைத்திறன் மங்குதல் - போன்றவற்றில், ஒன்றால் அல்லது பலவற்றால் வாழ்க்கையில் இறுதிக்கட்ட முதியோர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

தன் மரியாதைக்காகவும், தனிமையை விரட்டவும், தன்னுழைப்பில் தன்னுடைய தனிப்பட்ட செலவுக்காகப் பொருள் தேடியும், உடல் உழைப்பாலும் மனச்செயல்-பாட்டாலும் திரும்பவும் வேலைக்குச் செல்லும் முதியோர்கள், இன்னமும் இருக்கின்றார்கள்.

இதுதான் பாடத்திட்டம்' மூன்று மாதங்களுக்குரிய பாடப்பகுதிகள் இவை; தேர்வில் கேட்கப்படுகின்ற மாதிரி வினாத்தாளும் இதுதான்; தேர்வு நேரம், தேர்வுப் பயிற்சி, விடையின் அளவு - இவை எல்லாவற்றையும் வழங்கி அதை எதிர்நோக்க முடியாமல் திணறுகின்ற கூட்டமும், மனப்பாடம் செய்ததை வாந்தி எடுத்து அதிக மதிப்பெண் பெறும் (நாமக்கல் கோழிப்-பண்ணைகள் போல) கூட்டமும் இளைய தலைமுறையாகக் காட்சி அளிக்கின்றனரா?

பாடத்திட்டம், பாடப்பகுதி, வினாக்கள் மாதிரி, விடைப் பயிற்சி, தேர்வு காலம், நேரம், தேர்வுப்பயிற்சி - இவையெல்லாம் என்னவென்று தெரியாமல் எதிர்பாராத நேரங்களில் எதிர்பாராத இடங்களில், வாழ்க்கைத் தேர்வுகளையும், சவால்களையும் சந்தித்து தீர்வு காணும் கூட்டம் மூத்த குடிமக்கள் கூட்டமா? படிப்பறிவு தேவையா? பட்டறிவு தேவையா? படிப்பறிவும் பட்டறிவும் மிக்க மூத்த குடிமக்கள் தேவையா? எப்போதும் எல்லோரும் எழுப்புகின்ற வினாக்கள்... கடந்த காலமோ திரும்புவதில்லை நிகழ்காலமோ விரும்புவதில்லை எதிர்காலமோ அழைப்பதும் இல்லை - இதுதானே அறுபது அகவையினரின் நிலை...

நகர்ப்புறங்களில் பாதுகாப்புக் காவலர்களாக (Security Guards), தானியங்கி (ATM) காசு வழங்கிகளில் பாதுகாவலராக, ஏவலராக, உணவு விடுதிகளில் பணியாளராக; நாட்டுப்புறங்களில் கூலிகளாக, உழைப் பாளர்களாக, விவசாயக் கூலிகளாக, தொழிலாளிகளாக தன்மானம் கருதி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைக்கின்ற மூத்த குடிமக்கள் இன்னமும் இருக்கின்றார்கள். வளர்ந்த நாடுகளில் முதியோர் மருத்துவம் (Geriatrics) என்பது உச்சக் கட்டத்திலிருக்கும்போது இந்தியாவில் இன்னமும் அடிமட்ட நிலையில்தான் உள்ளது.

முளை, துளிர், தளிர், சிற்றிலை, பெரிய இலை, பழுப்பு, சருகு, உதிர்வு - என்பதும் அரும்பு, மொக்கு, மொட்டு, அலர், மலர் - என்பதும் பிஞ்சு, காய், கனி - என்பதும் இயற்கை நியதிகள்தானே? இன்றைய இளைஞன் நாளைய முதியவன்தானே? வந்தால் வரட்டும் முதுமை! தனக்குத்தானே நிகர் என வாழ்ந்தால் உலகத்தில் ஏது தனிமை? எனச் சவால் விடுவோர் எத்தனை பேர்?

58-60 அகவையில் முடிவடைந்த மாந்த ஆயுள் 75 - 80இல் தற்போது நிறைவடைகிறது. இருப்பினும், வாழ்க்கையின் கடைசி 20 வருடங்கள் ஊசி மருந்துகள், மாத்திரைகள், டானிக்குகள் பிடிக்குள் சிக்கிச் சீரழிகிறது. இரண்டாவதாக இந்தியாவிற்கே, தமிழ் நாட்டிற்கே உரித்தான கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை சிதைந்துவிட்டது. தனிக் குடித்தனத் தடுமாற்றத்தால் முதியோர் தனிமைப்படுத்தப்பட்டுப் போயினர். மகளுக்குத் திருமணம் முடிந்ததும் பிறந்த வீட்டை விட்டுப் புகுந்த வீடு மகள் போவது அக்காலம்! முதலிரவு என்கிற பெயரால் முதியவர்களைத் தவிக்கவிட்டு, தாலி கட்டியவுடன் தனியே பிரிந்து செல்லும் மகன்கள் கொண்டது இக்காலம். உனக்கு நான் எனக்கு நீ எனத் தடுமாறும் முதியவர்கள் சரண் அடையும் முதியோர் காப்பகங்கள்தாம் நவநாகரிக மனித உறவுகளைத் தீர்மானிக்கும் சரணாலயம். மூன்றாவதாக, பணிநிறைவு பெற்றதும் தான் பிறந்து வளர்ந்த முன்னோர், மூதாதையர் இல்லத்திற்கு, மூதாதையர் மண்ணிற்கு திரும்பிச் செல்லும் இடங்களும் இப்போது காணாமல் போய்விட்டன.

பணியிலிருந்து ஓய்வுபெறும் எல்லா முதுகுடிமகன்களும் நான்கு வகை பாதிப்புகளுக்கு ஆட்படுகின்றனர். அவை என்ன தெரியுமா!

**முதலாவது:** வாழ்ந்த வாழ்க்கை போதும்; போய்விடலாம். பணிநிறைவு பெற்ற சில மாதங்களிலேயே வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் நிலை, இயற்கையாக அல்லது செயற்கையாக! - இது ஒரு வகை மனச்சிதைவு அல்லது மனநோய்! அல்லது மனநலக்குறைவு. மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் என்பதைப் புரிந்து கொள்ளாதவர்கள்.

**இரண்டாவது:** பொருளற்ற சடங்குகளை விடாப்பிடியாகத் தொடர்வது. குறித்த நேரத்தில் எழுவது, குளிப்பது, உண்பது, நடை பயில்வது போன்ற செயல்பாடுகளால் அடுத்தவர்களைத் தொல்லைப்படுத்துவது. தன்னை மற்றவர்கள் அச்சத்துடன் மதிக்க வேண்டும் என எண்ணுவது. சொன்னவற்றையே சொல்லிக் கொண்டிருப்பது.

**மூன்றாவது:** பொழுது போக்கு என்னும் பெயரில் அமர்ந்தபடி படித்தல், சீட்டாடுதல், சதுரங்க ஈடுபாடு கொள்ளுதல் போன்ற உடலியக்க செயல்பாடுகள்.

**நான்காவது:** எந்த உடலியக்க செயல்பாடுகளிலும் ஈடுபடாமல் பிறரை நோட்டம் விடுதல், நொள்ளை நொட்டை சொல்லுதல் போன்ற சிந்தனை வழிச்செயல்பாடுகள் இந்த நான்கு வகை மாற்றங்களுக்கும் மாற்று உண்டா? தாராளமாக உண்டு. அவற்றை ஐந்துவகை மந்திரச்சாவிகள் என அழைக்கலாம். அவை என்ன?

**மந்திரச்சாவி 1:** கருத்தாளர் (Consultant) ஆதல். மேலதிக கூர்நோக்குத் திறனும் துறை சார்ந்த மேலாண்மை நுண்ணறிவும் உடையோர் மட்டுமே கருத்தாளர் ஆக முடியும். "ஆமாம்! அப்படியே ஆகட்டும் I am at your ser-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vice, yes Boss" எனும் பணிமுதிர்வுற்ற அரசு அலுவலர்கள் இந்த வரையறைக்குள் நுழைய முடியாது. எல்லோரும் கருத்தாளர் ஆக இயலாது!

**மந்திரச்சாவி 2:** வர்த்தக, வணிக, தொழில் முனைவோர் ஆதல். தொழில் முனைவோர் திறனும்(Entrepreneurial skill) நிர்வாக மேலாண்மையும் (Executive Management) பொருளாதார வலிமையும் கொண்டோர் மட்டுமே இந்தச் சாவியைக் கையில் எடுக்கலாம். வெறும் ஆர்வமும், யாரையாவது ஏவி எதையாவது சாதித்து விடலாம் என எண்ணினால் கையிலிருந்த கோடி ரூபாய்கள் லட்சமாகி, ஆயிரம் நூறாகி அவதிப்பட நேரிடும்; ஆண்டியாக மாற்றிடும்.

**மூன்றாவது மந்திரச்சாவி:** ஏற்கெனவே இருந்த பணியை ஒத்த வேலையில் ஈடுபடுதல். அரசு கல்லூரிகளில் பணிநிறைவு பெற்றவர்கள் தனியார் கல்லூரிகளுக்கு குறைந்த அளவு ஊதியத்திற்கு மாற்றிக் கொள்ளுதல். இவ்வகை மந்திரச்சாவி எல்லோருக்கும் ஒத்து வராது. பாப்பாத்தியம்மா! மாடு வந்தால் கட்டினால் கட்டு; கட்டாவிட்டால் போ! தின்றால் தின்னு; திங்காட்டிப் போ! என பூசை மணியடித்து விட்ட அரசுப் பணியாளர்கள் வாரத்தின் எல்லா நாட்களிலும் பணிக்கு வரச்சொல்லும் தனியார் நிறுவன வேலை ஒத்து வருமா?

**நான்காது மந்திரச்சாவி:** சமய நாட்டம் அல்லது ஆன்மிகத்தேடல். யாருக்கும் எந்தவித தீங்கும் செய்யாமல் கோயில் வழிபாடு, திருத்தலங்கள் சுற்றி வருதல். நண்பர்கள், உற்றார் உறவினர், பெற்ற மக்கள், மனைவி - இவர்கள் யாரிடமும் சொல்ல முடியாத ஏதாவது ஓர் அல்லது பல உறுத்தல்கள். மதம், இனம், சாதி, மொழி கடந்து எல்லாவகை முதியோர்களிடம் கண்டிப்பாக இருந்தே தீரும்.

**ஐந்தாம் மந்திரச்சாவி:** விருப்பமான வேலையை ஓய்வு நேர வேலையாக, மாற்றிக் கொள்ளுதல். எழுதுதல், படித்தல், சொற்பொழிவாற்றல், தோட்ட வேலை, பூங்கா வேலை ய்தல், சிறுவர் சிறுமியர்க்கு கதை சொல்லுதல், முகநூல் தேடல், கீச்சிடல் (Twitter) , நூல் எழுதுதல், நூல் வெளியிடுதல், திருக்கோயில் திருப்பணி ஆற்றல். ஐந்தாம் மந்திரச்சாவியை பணியிலிருக்கும்போதே தேர்வு செய்து கொள்ளலாம்.

வைகறைப் பொழுதில் எளிய உடற் பயிற்சிகள், மூச்சுப் பயிற்சி, நடைப்பயிற்சி, சைக்கிளில் இயன்ற தூரம் செல்லுதல் - போன்றவற்றில் ஈடுபடலாம். நரை, திரை, முதுமை, தனிமை, இயலாமை, எனும் மந்திரப் பூட்டுகளைத் திறக்க, ஐந்து மந்திரச் சாவிகளில் ஓய்வு நேர வேலை (Hobby) என்பதும் 'ஆன்மிகத் தேடல்' (Spiritual activities) என்பதும், உன்னதமானவை; மிகவும் உகந்தவை. பணி விடுபடல் (Retirement) என்பது வாழ்விற்கு வருடங்களைக் கூட்டுவது அல்ல; வருடங்களுக்கு வாழ்க்கையைச் சேர்ப்பதுதான், பணி விலகல் அல்லது பணி நிறைவுறல். வாழ்க்கையின் பிற்கால நல் வாய்ப்பே அதனை பேரிடராக, இடுக்கணாக எண்ணி இடர்பட வேண்டாம். ■

## மனிதன் பெற்ற வரம்

கடவுள் ஒருநாள் உலகைக் காண வந்தார். முதலில் அவர் கண்ணில் பட்டது பசு. பசுவைப் பார்த்து பரந்தாமன், 'பாலைப் பொழி; கன்றுகளை ஈன்று விடு; விவசாயிக்கு உற்ற துணையாய் விளங்கு; உனக்கு 60வருட ஆயுளைத் தருகிறேன்', என்றார். வேண்டாம் 60 வயது; 20 வருடங்கள் வாழ்கிறேன்; மீதி 40ஐ திரும்ப எடுத்துக் கொள்ளுங்கள்' என்றது பசு.

இரண்டாவது நாள் ஒரு நாயைப் பார்த்த கடவுள், '20 வருட வாழ்நாள் உனக்கு. வாசப்படியில் நின்று குரைத்து எச்சரிக்கை செய்தால் போதும்' என்றார். 'பத்து வருட ஆயுட்காலமே போதும்; மீதி 10ஐ நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்' என்றது நாய்.

மூன்றாவது நாள், குரங்கைக் கண்ட ஆண்டவன், ஏ! குரங்கே, உனக்கும் 20வருடம் ஆயுள் தருகிறேன். ஆடி ஓடி அங்கும் இங்கும் தாவிக்குதித்து சேட்டைகள் காட்டி மக்களை மகிழ்விக்கச் செய்!' எனச் சொன்னார். எனக்கு பத்து வருடங்களே போதும் என்றது குரங்கு.

நான்காம் நாள், மனிதனை ஒருவனைப் பார்த்த கடவுள், 'ஏ மனிதா! நன்றாக சாப்பிடு, தூங்கு, விளையாடு, பொழுதைக் கழி; வேறு எதையும் செய்ய வேண்டாம், உனக்கு 20வருட ஆயுளைத் தருகிறேன்' என்றார்.

ஆனால் மனிதன், கடவுளை நோக்கி, 'மிக்க நன்றி! தாங்கள் அளித்த 20வருட ஆயுள் எனக்குப் போதாது; பசு தங்களிடம் திருப்பித்தந்த 40 வருடங்களையும், நாயும் குரங்கும் ஒப்படைத்த 20 வருடங்களையும் 60ஆகச் சேர்த்து, எனக்கென ஏற்கனவே தாங்கள் வழங்கிய 20ஐயும் சேர்த்துக் கூட்டி மொத்தத்தில் 80 வருட ஆயுளை அருள்கூர்ந்து வழங்கவும்' என மண்டியிட்டு தண்டனிட்டு மன்றாடினான். அப்படியே ஆகட்டும், என்றார் ஆண்டவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பே.சக்திவேல் தொன்மச்சான்றுகள்

# மருத்துவமும் மறைந்து கிடக்கும் வரலாறும்

ஒற்றைப் பண்பாட்டை நோக்கிப் பயணிக்கும் இன்றைய வாழ்வியல் சூழலில் அடித்தட்டு/விளிம்புநிலை மக்களின் வாழ்வியல் வெளிப்பாடுகளான வழக்காறுகளை ஆவணப்படுத்தலும் கீழிருந்து மேலாகப் புரிந்து கொள்ளலும் முக்கியத் தேவைகளாக உள்ளன. இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள் முதலானவற்றைக் கொண்டு எழுதப்பட்டுள்ள சமூக வரலாறுகளின் உண்மைத் தன்மை குறித்து ஐயம் எழும் இன்றைய சூழலில் முழுமையான சமூக வரலாறு அல்லது மக்களின் வரலாறு என்பது வழக்காறுகளைக் கொண்டு எழுதப்பட வேண்டிய தேவை உருவாகியுள்ள இந்தக் காலகட்டத்தில் வழக்காறுகள் முக்கியத்துவம் உடையவையாக இருக்கின்றன. வழக்காறுகள் எதார்த்த வாழ்வியலின் வெளிப்பாடுகள் என்பதால் இவற்றைச் சமூக, சாதிய நோக்கில் புரிந்து கொள்ளவும் அர்த்தப்படுத்தவும் வேண்டியுள்ளது. வாய்மொழி வரலாறு எனும் வரலாற்று முறையியலின் பார்வையில் வழக்காறுகள் சமூக ஆவணங்களாகக் கருதப்படுகின்றன. குறிப்பாக, சடங்குகள் போன்ற வழக்காறுகள் குறியீட்டு நிலையில் பொருள் தரக்கூடியவையாகவும் சமூக வரலாற்று எச்சங்களாகவும் உள்ளதை ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

வெகுசன சமயமான நாட்டுப்புறச் சமயம் பல்வேறு அமைப்பொழுங்குகளைக் கொண்டுள்ளது. இவ்வமைப்பொழுங்குகளில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது நோய் நீக்கும் மருத்துவச் சடங்குகளாகும். இச்சடங்குகளைச் சமூக நோக்கிலும், வரலாற்று நோக்கிலும் அணுகும்போது



**தஞ்சை மாவட்டத்தில் பறையர் வீடுகளில் அம்மைநோய் ஏற்பட்டால் வண்ணார் வீடுகளிலும், வண்ணார் வீடுகளில் அம்மை நோய் ஏற்பட்டால் பறையர் வீடுகளிலும் நீராகாரம் வாங்கிக் குடிக்கும் வழக்கம் உள்ளது. மற்ற சாதியினரின் வீடுகளில் அம்மைநோய் ஏற்பட்டால் அவர்கள் பறையர், வண்ணார் வீடுகளில் நீராகாரம் வாங்கிக் குடிப்பதன் வாயிலாக நோய்நீக்கம் பெறுகின்றனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைக்கப்பட்ட வரலாற்றை / மாற்று வரலாற்றைக் கட்டமைக்க முடியும் என்ற புரிதலின் அடிப்படையில் தமிழகத்தில் காணப்படும் அம்மைநோய் நீக்கும் சடங்குகளில் ஒன்றான பறையர், வண்ணார் வீடுகளில் நீராகாரம்/கூழ் வாங்கிக் குடித்தல் எனும் சடங்கு குறித்தும் இச்சடங்கியல் நிகழ்வு காட்டும் சமூக வரலாறு குறித்தும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**அம்மைநோய்**

தமிழகத்தில் அம்மைநோய் மாரியம்மனோடு தொடர்புபடுத்தப்படுகிறது. அடிப்படையில் தமிழகம் வெப்ப மண்டலப் பகுதியாக உள்ளதால் அம்மைநோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. குறிப்பாக, கோடை காலம் அம்மைநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கும் காலமாக உள்ளது. தமிழர்கள் மழைக் கடவுளாக மாரியம்மனை வழிபடுகின்றனர். மாரியம்மன் மழை பொழியாக் காலத்தில் வெப்பம் அதிகமாவதால் அம்மனின் கோபத்தால்தான் மழையின்றி வெப்பம் அதிகரித்து அம்மைநோய் உண்டாவதாக நம்புகின்றனர். அம்மையைக் குறிக்கும் வெப்புநோய் எனும் சொல் இந்நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது. "சிற்றம்மை, பெரியம்மை, தட்டம்மை, விளையாட்டம்மை, மணல் வாரி அம்மை, பொன்னுக்குவீங்கி, புட்டாலம்மை, தாளம்மை, தாடையம்மை" (மருத்துவக் களஞ்சியம் - தொகுதி 7, 1999) என அம்மையின் பல்வேறு வகைகள் குறிப்பிடப் பட்டுள்ளன. இவற்றுள் அதிக ஆபத்தானதும் தீவிரமாகப் பரவக்கூடிய தொற்றாகவும் உள்ளது சிற்றம்மை. பொதுவாக அம்மைநோய் ஏற்படுவதற்கான காரணம் வைரஸ் கிருமிகள் என்றாலும் மாரியம்மனுடைய கோபத்தால் மழைபொழியாது வெப்பம் அதிகரித்து இந்நோய் ஏற்படுவதாக மக்கள் நம்புகின்றனர். இந்த அடிப்படையில் மாரியம்மனை வழிபட்டுச் சாந்தப்படுத்தி அம்மை நோயை நீக்க வழிபாடு சார்ந்த மருத்துவச் சடங்குகளை மேற்கொள் கின்றனர்.

**அம்மை நீங்க மேற்கொள்ளப்பெறும் சடங்குகள்**

அம்மை நோய்க்கு ஆளானவரை வேப்பிலையாலான படுக்கையில் கிடத்துதல்; வேப்பிலையோடு மஞ்சளைச் சேர்த்தரைத்துக் கொப்புளங்களில் தடவுதல்; குளிர்ச்சியான உணவுப் பொருட் களை உண்ணச் செய்தல்; மாரியம்மன் தாலாட்டுப் பாடுதல்; மாரியம்மன் கோயிலிலிருந்து பால் வாங்கிக் குடித்தல்; மாரியம்மன் கோயிலில் சென்று தங்குதல்; பறையர், வண்ணார் வீடுகளில் நீராகாரம் / கூழ்வாங்கிக் குடித்தல் எனும் சடங்குகள் அம்மை நோயை நீக்குவதற்காகச் செய்யப் படுகின்றன.

மேற்குறித்த நோய்நீக்கும் சடங்கு களில் வேப்பிலையில் படுக்க வைத்தல்; வேப்பிலையை அரைத்துக் கொப்புளங்களில் இடுதல் என்பது, வேப்பிலை கிருமி நாசினி எனப தாலும் இந்நோயைக் குணமாக்கும் ஆற்றல் வேப்பிலைக்கு உண்டு என்ற அடிப்படையிலும், மாரியம்மன் தாலாட்டுப் படித்தல், கோயிலில் தங்குதல் போன்றவை மாரியால் வந்த அம்மை அவளிடம் சென்றால் தீரும் என்ற அடிப்படையிலும், குளிர்ச்சி யான உணவுப் பொருட்களை உண்ணுதல் என்பது உடல் சூட்டால் உண்டாகும் அம்மை உடல் குளிர்ச்சி அடையும்போது தானாகவே நீங்கும் என்ற அடிப்படையிலும் மேற்கொள்ளப் படுகின்றன. இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையன வாகவும் உள்ளன. இறுதியாக உள்ள பறையர், வண்ணார் வீடுகளில் நீராகாரம், கூழ் வாங்கிக் குடித்தல் எனும் சடங்கு மட்டுமே மேற்குறித்த செய்திகளோடு தொடர்பின்றித் தனித்து நிற்கிறது. இங்கு, நீராகாரம் அல்லது கூழ் வாங்கிக் குடித்தல் எனும் சடங்கு உணர்த்தும் பொருண்மை குறித்துப் புரிந்து கொள்ளவும் விளக்கவும் வேண்டி யுள்ளது. அதற்குமுன், இச்சடங்கு நிகழ்வு குறித்து சில கேள்விகளை முன்வைக்கலாம்.

- தீண்டுவதற்கே தகுதியற்றவர்களாகக் கருதப்படும் பறையர், வண்ணார் வீடுகளில் ஏன் நீராகாரம் வாங்கி உண்ண வேண்டும்?
- தமிழகத்தில் தீண்டத்தகாத சாதிகள் பல இருக்க பறையர், வண்ணார் சாதிகளிடம் ஏன் நீராகாரம்/கூழ் வாங்கிக் குடிக்க வேண்டும்?
- இச்சடங்கு பறையர்/பண்ணார் சாதியினரின் கடந்த கால வரலாற்றைக் காட்டுகிறதா?

**நீராகாரம்/கூழ் வாங்கிக் குடித்தலும் அம்மைநோய் நீக்கலும்**

தமிழகத்தில் தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர் ஆகிய மாவட்டங்களில் அம்மைநோய் நீங்குவதற்காகப் பறையர் அல்லது வண்ணார் வீடுகளில் நீராகாரம் / கூழ் வாங்கிக் குடிக்கும் நிகழ்வு வழக்கத்தில் உள்ளது. தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு வட்டம் அரசூர், பாபநாசம் வட்டம் ஆலங்குடி ஆகிய ஊர்களில் அம்மை நோயால் பாதிக்கப் பட்டவரின் வீட்டைச் சேர்ந்த ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்நாளே சென்று பறையர், வண்ணார் வீடுகளில் நீராகாரம் வேண்டும் என்று சொல்லி விடுகின்றனர். மறுநாள் காலையி லேயே அவர்களின் வீடுகளுக்குச் சென்று வாங்கிவந்து பாதிக்கப் பட்டவருக்குக் கொடுக்கின்றனர். மூன்றுநாள் வரையிலும் இவ்வாறு செய்யப் படுகிறது. ஒவ்வொரு நாளும் இச்சடங்கைச் செய்ய அம்மை குறைந்துவிடும் என்று நம்பப் படுகிறது. இவ்வாறு தொடர்ந்து செய்வதால் அம்மை முற்றிலுமாக நீங்கிவிடும் என்று நம்புவதை அறிய முடிகிறது. தஞ்சை மாவட்டத்தில் பறையர் வீடுகளில் அம்மை நோய் ஏற்பட்டால் வண்ணார் வீடுகளிலும், வண்ணார் வீடுகளில் அம்மை நோய் ஏற்பட்டால் பறையர் வீடுகளிலும் நீராகாரம் வாங்கிக் குடிக்கும் வழக்கம் உள்ளது. மற்ற சாதியினரின் வீடுகளில் அம்மைநோய் ஏற்பட்டால் அவர்கள் பறையர், வண்ணார் வீடுகளில் நீராகாரம் வாங்கிக் குடிப்பதன் வாயிலாக நோய்நீக்கம் பெறுகின்றனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வண்ணார் வீடுகளில் மட்டுமே நீராகாரம் வாங்கிக்குடிக்கும் வழக்கம் உள்ளது. இச்சடங்கை மேற்கொள்வதற்கு முன்பாக உடலில் ஏற்பட்டிருப்பது அம்மைதானா என்பதை வண்ணாரே சாமியாடி உறுதி செய்கிறார். வண்ணார் உறுதி செய்த பிறகே வந்திருப்பது அம்மை என்பதைக் குடும்பத்தினர் அறிகின்றனர். புதுக் கோட்டை மாவட்டத்திலுள்ள செல்லுக்குடி எனும் ஊரைச் சேர்ந்த பிச்சை எனும் வண்ணார் சாதியார் இவ்வூர்களைச் சுற்றியுள்ள அடப்பங்காரன்சத்திரம், பெருஞ்சுனை போன்ற ஊர்களில் மேற்குறித்தவாறு சாமியாடி அம்மையை உறுதி செய்கிறார். பிராமணர் களின் வீடுகளிலும் அம்மை நோயை வண்ணார்களே உறுதி செய்கின்றனர். இவ்வாறு உறுதிசெய்த பிறகு இவரது வீட்டிலிருந்து நீராகாரம் வாங்கிக் குடிக்கும் சடங்கை மேற்கொண்டு நோய் நீக்கம் பெறுகின்றனர். இதே மாவட்டத்தைச் சேர்ந்த பெருங்களூர், வெள்ளவெட்டான் விடுதி போன்ற ஊர்களில் அம்மை நோய் ஏற்பட்டால் வண்ணார் வீடுகளில் நீராகாரம் வாங்கி உண்ணும் சடங்கியல் நிகழ்வு இன்றும் வழக்கத்திலுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டம் பழம்பேட்டை எனும் ஊரில் அம்மைநோய்க்காளானவருக்குப் பல்வேறு சடங்குகள் செய்தும் நோய் குறையாமல் இருந்தால் இறுதியாக வண்ணார் வீட்டில் சென்று கூழ் வாங்கிக் குடிக்கும் வழக்கம் உள்ளது. இம்மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு சாதியினரும் அம்மைநோய் நீங்குவதற்காக வண்ணார் வீடுகளில் கூழ் வாங்கிக் குடித்தல் எனும் சடங்கை இன்றுவரை மேற்கொள் கின்றனர். இவ்வழக்கம் இம்மாவட்டத்திற்கு அருகிலுள்ள விழுப்புரம் வேலூர் போன்ற மாவட்டங்களிலும் வழக்கத்திலுள்ளது. மேற்குறித்த சடங்கியல் நிகழ்வில் பறையர், வண்ணார் சாதியினர் முக்கியத்துவம் உடையவர்களாக உள்ளனர்.

## தமிழ்ச்சாதியில் பறையரும் வண்ணாரும்

பறையர், வண்ணார் எனும் சாதிகளின் வரலாறு தொன்மையானது. 2500 ஆண்டு களுக்கும் மேற்பட்ட காலப்பழமை யுடைய சங்க இலக்கியங்களில் இவர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. சமூகக் கடமை யாற்றுவதில் இவர்களுடைய பங்கு முக்கியமானதாக உள்ளது. தமிழ்ச் சமூக வரலாற்றில் முக்கியத்தும் வாய்ந்த சாதிகளில் பறையர், வண்ணார் சாதியினர் குறித்த பல்வேறு வழக்காறுகள் இவர்களின் கடந்தகால வரலாற்றை உணர்த்தும் சான்று களாக உள்ளன. குறிப்பாக, சடங்குச் சூழலில் இவர்கள் தலைமைப் பண்புடையவர்களாக இருந்து சடங்கு நிகழ்த்தியதைப் பல்வேறு சான்றுகள் குறிப்பிடுகின்றன.

## தமிழ்ச்சாதிகளும் சடங்கியல் தலைமையும்

"தமிழ்நாட்டில் பார்ப்பனர் வருகைக்கு முன்னர் சடங்குக்குத் தலைமையேற்ற சாதியர் சிலர் இருந்தனர். பார்ப்பனரைப்போலச் சமூகத் தலைமையை அவர்கள் கைப்பற்றிக் கொள்ளவும் இல்லை; அரசர்கள் அவர்களுக்கு ஆதரவு அளிக்கவுமில்லை; மாறாக, சடங்கு செய்யும் சாதியாருக்குத் தாங்கள் சமூகப் படிநிலையில் கீழ்ப்பட்டவர்களாகவே இருந்தனர். இவர்களைப் புரோகிதர்கள் என்று கூறமுடியாது. சடங்குக்குத் தலைமையேற்ற குருமார்கள் என்று வேண்டுமானால் குறிப்பிடலாம்". (பரமசிவன், தொ.2006:68) என்றும்,

"பார்ப்பனர் அளவுக்குத் தமிழ்க்குருமார் சாதிகள் இங்குச் சமூக மரியாதை பெறவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாலும் அவர்களது நேற்றைய வாழ்வின் தொல்லெச்சங்களைச் சடங்குகளில் இன்றும் காண முடிகிறது. மருத்துவர் (நாவிதர், குடிமகன்), வண்ணார், வள்ளுவர், வேளார் (மட்பாண்டம் செய்வோர்), தமிழ்ப் பண்டாரம் (நந்தவனம் வைத்துப் பூத்தொடுப்பவர்), பறையர் ஆகிய சாதிகளைக் குருமார் சாதிகளாகக் குறிப்பிடலாம்" (பரமசிவன், தொ.2006;68) என்றும் கூறப்படும் கருத்துக் களை நோக்க, பார்ப்பனர் வருகைக்கு முன்னர்த் தமிழ்ச்சாதிகளின் சடங்கியல் தலைவர் களாகத் தமிழ்ச்சாதியினரே இருந்துள்ளனர் என்பதும் தெளிவாகிறது. பறையர், வண்ணார், மருத்துவர், வள்ளுவர், வேளார் போன்ற சாதியினர் தமிழ்ச்சாதிகளின் சடங்கியல் தலைவர்களாக இருந்திருந்தாலும் இக்கட்டுரையின் மையப்போக்கு பறையர், வண்ணார் சாதியரின் சடங்கியல் தலைமை குறித்தது என்பதால் அதுகுறித்த செய்திகள் மட்டுமே விளக்கப்படுகின்றன.

**பறையரும் சடங்கியல் தலைமையும்**

தமிழகத்தின் தொன்மையான குடிகளுள் பறையர் குடியும் ஒன்று. பறை என்னும் இசைக்கருவியை வாசித்ததால் இவர்களுக்குப் பறையர் எனும் பெயர் வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. பறையர்கள் கடந்த காலத்தில் உயர்நிலையில் இருந்ததாகவும், சடங்கியல் தலைவர்களாக இருந்ததாகவும் வழக்காறுகளும் பல்வேறு ஆய்வு நூல்களும் குறிப்பிடுகின்றன.

இன்றும், தமிழகத்தில் மாரியம்மன், பிடாரியம்மன் கோவில் திருவிழாக்களில் பறையருக்கே முதலில் காப்புக் கட்டப் படுகிறது. இத்தெய்வங் களுக்குப் பறையர் கணவர் உறவுமுறை யினராகக் குறிப்பிடப் படுகின்றனர். பல்லவர் காலத்தில் பறையர்களில் ஒரு பிரிவினரான வள்ளுவர் கோயிலில் பூசையிடுபவராக இருந்ததை அபிதான சிந்தாமணி, "இவர்கள் ஒன்பதாவது நூற்றாண்டில் பல்லவர் காலத்தில் உயர் பதவியில் இருந்ததாகத் தெரிகிறது. வள்ளுவரே புரோகிதம் செய்திருந்தார்கள் என்று கூறப்பட்டிருக்கின்றது. 'ஸ்ரீ வள்ளுவம் பூவாணவன் உவச்சன்' ஆறுவள்ளுவரை நித்ய கட்டளைக்கு வைத்துக்கொண்டு கோவில் காரியம் செய்ய வேண்டியதென்று" (ப.1289) எனக் குறிப்பிடுகின்றது. இவ்வாறு கோயில் சடங்கு மட்டுமின்றி வேறு சில சடங்குகளை ஆற்றுபவர்களாகவும் பறையர்கள் இருந்துள்ளனர். மழையில்லாக் காலங்களில் மழைவேண்டிச் செய்யப்படும் சடங்குகளில் ஒன்றான கொடும்பாவி கொளுத்தும் சடங்கில் பறையர்கள் முக்கியப் பங்காற்றியதை "வெட்டியான் தன் தலையை சிரைத்துக் கொண்டு அக்கொடும்பாவிக்குப் பிரேத சமஸ்காரம் செய்வன். இதனால் வெட்க மடைந்த சுக்ர வைப்பாட்டி, சுக்ரனைச் சொந்த இடம் அனுப்புவாள். பின் மழை பொழியும் என்பது மழைக்கு முதலோனார்கள்" என அபிதான சிந்தாமணி (1289) பறையர்கள் நாடு வளம்பெற சடங்காற்றியதைக் குறிப்பிடுகிறது.

'பார்ப்பானுக்கு மூப்புப் பறையன் கேட்பாரில்லாமல் கீழ்ச் சாதியானான்' எனும் சொலவடை தமிழகத்தில் பரவலாக வழங்கப் பெறுகிறது. பார்ப்பானுக்குப் பறையன் எவ்வாறு மூப்பானான் என்ற வினாவிற்குப் "பார்ப்பான் எனும் சொல்லிற்குரிய வேர்ச் சொல் பார்ப்பு என்பதாகும். இவ்வேர்ச் சொல்லுக்கு இளமை, குஞ்சு, குட்டி என்பது பொருளாகும்" என்றும், "பார்ப்பார் என்ற சொல்லுக்கு வேர்ச்சொல் காட்டும் பொருளின் படி இளையர் (Junior) என்பது பொருளாகும்" என்றும் விளக்கி, ஏற்கனவே, இங்குப் புரோகிதராக இருந்த பறையரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டவே, புதிதாக வந்த பிராமணரைக் குறிக்க பார்ப்பார் எனும் சொல் வழங்கப்பட்டது எனக் குறிப்பிடும் தொ.பரமசிவன் (1995),

தென் மாவட்டங்களில் சிறுவர்கள் பனம்பழம் உண்ணும்போது வேடிக்கையாக பனம்பழத்தின் ஒரு முனையினைப் பார்ப்பான் முனை என்றும் மற்றொரு முனையினைப் பறையன் முனை என்றும் கேலி செய்து நகையாடும் வழக்கம் உள்ளது. ஒன்றில் இரண்டு முனைகள் ஒன்றுக்கொன்று பண்பில் எதிராக விளங்குவதை Polar opposites என்று சமூகவியல் அறிஞர் கூறுவர். இந்தப் பழம் பற்றிய குறியீடு, இருசாதியாரும் ஒரு தொழிற்களத்தில் இருந்ததைக் குறிப்பதாகும் (1995:90) என விளக்குகிறார். மேற்குறித்த கருத்துக்கள் அனைத்தும் பறையர்கள் கடந்த காலத்தில் சடங்கியல் தலைவர்களாக இருந்தனர் என்பதைக் காட்டுகின்றன. இனி வண்ணாரின் சடங்கியல் தலைமை குறித்துக் காணலாம்.

**வண்ணாரும் சடங்கியல் தலைமையும்**

பறையர் போன்றே வண்ணாரும் தமிழகத்தில் உள்ள பல சாதியினரின் வாழ்க்கை வட்டச் சடங்குகளில் சடங்கியல் தலைவர்களாக உள்ளனர். குறிப்பாக, பூப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ்ச் சமூக வரலாற்றில் முக்கியத்தும் வாய்ந்த சாதிகளில் பறையர், வண்ணார் சாதியினர் குறித்த பல்வேறு வழக்காறுகள் இவர்களின் கடந்தகால வரலாற்றை உணர்த்தும் சான்றுகளாக உள்ளன. குறிப்பாக, சடங்குச் சூழலில் இவர்கள் தலைமைப் பண்புடையவர்களாக இருந்து சடங்கு நிகழ்த்தியதைப் பல்வேறு சான்றுகள் குறிப்பிடுகின்றன.**

திருமணம், இறப்புச் சடங்குகளில் வண்ணார் முதன்மை பெறுகின்றனர். ஒடுக்கப்பட்ட சாதிகளான பறையர், பள்ளர் போன்ற சாதியாரின் குடும்பச் சடங்குகளில் இவர்கள் சடங்கியல் தலைமை ஏற்கின்றனர். பூப்புச் சடங்கில் பெண்ணின் பூப்புத் தீட்டைக் கழித்தல், கொடிபோடுதல் எனும் சடங்குகள் வண்ணாரேலேயே நிகழ்த்தப்படுகின்றன. இதே போன்று, இறப்புச் சடங்கில் இறந்தவரைக் குளிப்பாட்டுதல் தொடங்கி, பால் தெளித்தல் வரையிலான சடங்குகளையும் இவர்களே தலைமையேற்று நிகழ்த்துகின்றனர். பார்ப்பனரைப் போன்று தமக்குக் கீழான அல்லது அரசர், வணிகர் போன்ற உடைமையாளர்களுக்குச் சடங்கு நிகழ்த்துவதைப் போலல்லாது தமக்கு மேலானவர் என்று கருதப்படக்கூடிய சாதியினருக்குச் சடங்காற்றுவது வண்ணார்களின் நிலைப்பாடாக உள்ளது. இதனை தொ.பரமசிவன் (2009:73) "ஒடுக்கப்பட்ட மக்களாய்ப் பணிசெய்யும் சாதியார், தங்களை ஒடுக்கும் சாதிமக்களின் வீட்டு விழாக்களிலும் கோயில் விழாக்களிலும் சபை மரியாதை பெறுகின்றனர்" எனக்குறிப்பிடுகிறார்.

"பார்ப்பனர்களிடம் தங்கள் சடங்கியல் தலைமையைப் பறிகொடுத்த சாதியாரே பிற்காலத்தில் பிறப்டுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சாதித்திரள் ஆளானார்கள். மருத்துவர் (முடி திருத்துவோர்), பறையர், வள்ளுவர், வண்ணார் (மண்ணார்) என வட்டார வாரியாக இவ்வகையில் பல சாதியாரைக் குறிப்பிடலாம். குறிப்பாக எடுத்துக் காட்டுவதானால், சில சாதியார் பார்ப்பனரைப் போல தீ வளர்த்துத் திருமணச் சடங்கைச் செய்கின்றனர். இந்தத் திருமணச் சடங்கின்போது மணமகனுக்கும் மணமகளுக்கும் பார்ப்பனப் புரோகிதர் 'காப்புக்கயிறு கட்டுகின்றனர்.' இந்தக் காப்புக் கயிறு 'அறுக்கும்' சடங்கினைப் பெரும்பாலும் பார்ப்பனப் புரோகிதர் செய்வதில்லை. மாலையில் அல்லது மறுநாளில் மருத்துவர், வண்ணார் போன்ற மற்றொரு சாதிக்காரரே சபை மரியாதையுடன் கூடிய காணிக்கை (தட்சணை) பெற்றுக் கொண்டு மணமக்களுக்குக் கட்டப்பட்ட காப்பினை 'அறுக்கின்றனர்.' இது ஒரு சமூக வரலாற்றுத் தொல்லெச்சமாகும். அதாவது, திருமணம் செய்துகொண்ட சாதியார்களுக்குக் காப்பறுத்த சாதியாரே பார்ப்பனர் வருகைக்கு முன் புரோகிதராக (குருவாக அல்லது சடங்கியல் தலைவராக) இருந்திருக்கின்றனர். இதுவே வரலாற்று உண்மையாகும்" (பரமசிவன், தொ.2006:73) எனக் குறிப்பிடுவதன் வாயிலாக வண்ணார் சாதியினரின் சடங்கியல் தலைமை குறித்து அறிந்து கொள்ள முடிகிறது.

மேற்குறித்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்பொழுது, வழக்காறுகள் காலந்தோறும் மாற்றமடைந்து வந்தாலும், சமூகத்தைப் புரிந்து கொள்ள மக்களின் முழுமையான வரலாற்றைக் கட்டமைக்க உதவும் சமூக ஆவணங்களாக உள்ளதை அறிய முடிகிறது.

**துணைநூற் பட்டியல்**


1. சக்திவேல்.பே.2010, சங்க இலக்கியத்திலும் வாய்மொழி மரபிலும் தொன்மக் கதைகள் (முனைவர் பட்ட ஆய்வேடு), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10
2. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, பதிப்பாசிரியர்: எஸ்.கௌமாரீஸ்வரி, சீதைப் பதிப்பகம், சென்னை-5
3. பரமசிவன்,தொ.1995, தெய்வங்களும், சமூக மரபுகளும், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் வெளியீடு, சென்னை
4. பரமசிவன்.தொ.2006, பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில்-629 001
5. பரமசிவன்.தொ.2006, தெய்வம் என்பதோர், யாதுமாகி பதிப்பகம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி
6. மருத்துவக் களஞ்சியம், 1999, தமிழ்வளர்ச்சிக் கழகம், சென்னை-5 ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நா.விச்வநாதன் ▸ சிறுகதை

# நிழலின் விலை

கொஞ்சமும் கூச்சப்படாமல் அந்த பிரம்மாண்டத்தைச் சாய்த்து வீழ்த்தி விட்டார்கள். அந்தப் பிரதேசமே புழுதிபறக்க - ஒரு பெரிய மலை வீழ்ந்தது மாதிரி - இதுவென்ன அறம்தாண்டிய செயல்! எவ்வளவு உயரம் எவ்வளவு அகலம், பருமன். எத்தனை பேருக்கு இதமான குளிர் நிழல். அது எதற்குள்ளிருந்து வந்தது. கிளைகளிலிருந்தா, லட்சக்கணக்கான - கோடிக்கணக்கான இலைகளிலிருந்தா. எதன்பொருட்டு. அங்கு குடியேறி குறுக்கும் நெடுக்குமாய்ப் பறந்து கொண்டிருந்த நிரந்தரக் குருவிகளின் ஆணைகளுக்குட்பட்டா. அதுவோர் அற்புதம் தான்.

அது பெருங்கருணை. மனித குலத்திற்காக வாரி வாரி வழங்கும் பெரும் கொடை அது மனசிலிருந்து பெற்றது. அதன் மனசு அதன் பிரமாண்டத்திலிருந்தது. அது அந்த பிரமாண்டத்தைவிடவும் பெரிசு. எந்தப் பிரதி பலனுமற்று இது என் கடமை என்றாற்போல ஒப்பற்ற வள்ளல் தன்மை. அரசமரம் போன பிறகு அந்த ஆகுருதி எங்கே போயிருக்கும். களவாட முடியுமோ - அதற்கு அழிவு என்தே அர்த்தமற்றது. அது பிரம்மம் - எவர் வாழ்வின் உயிர் ஆதாரத்தை அறிந்திருக்கிறாரோ அவரைத் தலைவராக ஏற்கிறோம். வழிபடுகிறோம். அவரின் கருணைக்கு நன்றியுள்ளவர்களாகிறோம்.

அரசமரம் மட்டுமல்ல. அதனோடு சேர்ந்து ஒட்டிக்கொண்டே வளர்ந்த வேம்பு - சின்னதும் பெரிதுமான இன்னதெனஅடையாளம் காண முடியாத செடிகள். ஒரு பெரிய குடும்பம் இணக்கமாக வாழ்தலின் அடையாளங்கள். நிழலைக் கொடையாகத் தருகிறவன் அன்னத்தைத் தருகிறவனைவிட மேலானவன். அனைத்திலும் மேலானவன். பரம்பொருளுக்கு இணையாகச் சொல்ல முடியுமோ. அதையும் தாண்டியா?

எதை எதையோ நவீனமாகச் செய்து நிமிஷத்தின் அந்தப் பிரமாண்டத்தை வீழ்த்தி விட்டு ஏராளமான ஆட்கள் குரூரமாகச் சிரித்துக் கொண்டே போனார்கள். பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அரசமரம் மட்டுமல்ல. அதனோடு சேர்ந்து ஒட்டிக்கொண்டே வளர்ந்த வேம்பு - சின்னதும் பெரிதுமான இன்னதென அடையாளம் காண முடியாத செடிகள். ஒரு பெரிய குடும்பம் இணக்கமாக வாழ்தலின் அடையாளங்கள். நிழலைக் கொடையாகத் தருகிறவன் அன்னத்தைத் தருகிறவனைவிட மேலானவன்.**

இயந்திரங்களின் பேரிரைச்சல் ஓய்ந்து எங்கும் பெட்ரோல் நெடி. இதன் பின்புலம் யார். எவனாயிருந்தாலும் அவன் உலகமேன்மைக்கு எதிரானவன். இந்த துவம்சத்தின் நோக்கமென்ன. சதா மணத்துக் கொண்டிருக்கும் அந்தப் பிரதேசம் முழுதும் குருதிவாடை. அறமல்லவே.

கொள்ளுத்தாத்தா சொல்வாராம் ஏற்ற இறக்கமாய் நிறுத்தி நிறுத்தி - ஒருநாள் காலங்கார்த்தாலே வயலுக்குப் போகும்போது லேசாக சின்னதாய் சற்று வெள்ளை கலந்த பச்சையாய் பூமி பிளந்து இரண்டு தளிர்கள் - இதென்ன திடீர்ப் பாசம். குழந்தைகளைக் கொஞ்சுவதுபோல் வாஞ்சையாய், நான்கு பக்கமும் குச்சி வைத்துக்கட்டி பந்தோபஸ்து பண்ணி - இதமாக நீர்விட்டு - அடேயப்பா இதற்காகவே காத்திருந்தாற்போல் அசுர வளர்ச்சி. அபார வளர்ச்சி. இரண்டு காலும் ஒரு கையும் விளங்காமல் படுக்கையில் விழுந்த போதுகூட ஜன்னல் வழியாக ஆகாயம் தொடும் அதன் ஆகுருதியைப் பார்த்துவிட்டுத் தான் கண்மூடினாராம். பூரண திருப்தியின் அடையாளம் முகம் முழுக்க -

மேன்மையான உலகத்தில் மேன்மைகளின் குரல் தொடர்ந்து ஒலிக்கட்டும். காற்றின் ஊதலில் அறங்களை அடையாளம் காண்போம். பட்சிகளின் இறகசைப்பில் தர்மத்தின் ஒலி கேட்கும். மேகங்களின் சீரான நகர்வில் உலகின் வனப்பு பிரதிபலிக்கட்டும். வாழ்வின் ரசம் வேறுண்டோ.

ஆச்சரியம்தான். இத்தனை தாண்டியும் உற்பதம் சாத்தியமோ. பிரமாண்டமான நிழல் காணாமல் போய்விட்டதே எப்படி நிகழ்ந்தது இது. பசுமையின் சாயலைக்கூட துடைத்து விடவல்ல வல்லமை எப்படி சாத்தியமாயிற்று. புரிபடவில்லை.

சின்னவளவு தண்டபாணி குடும்பத்திற்கும் பெரிய பாட்டா குடும்பத்திற்கும் தீராப்பகை. மூலம் யாரறிவர். எங்கிருந்து எந்தத் தலைமுறையிலிருந்து என ஏதும் தெரியாது. ஆனால் கண்ணி விடாமல் தொடர்ந்து பரம்பரைப் பொக்கிஷம் காப்பதுபோல் கவனமாகக் காத்தனர். மூன்று வெட்டு நாலு கொலை கலவரம் கோர்ட் கேஸ் என்று குலப் பெருமை காக்கும் விஷயங்களைப் பேணி - இரண்டு தலைமுறை கடந்து போய்விட்டது.

மரத்தடியில் நின்று மேல் துண்டால் தேவையற்று விசிறிக் கொண்டிருந்த கணேசனைப் பார்த்துமே செல்வராசுக்கு உடம்பே தீயாய் எரிந்தது. அணைந்து விடாமல் காலந்தோறும் காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கும் தீ. ஊழித்தீ. பரம்பரைச் சொத்தாய் அடுத்தடுத்துக் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தீ. பெரிய பாட்டாவின் கொள்ளுப்பேரன் கணேசன் அரசமரத்தின் உச்சிக்கிளையில் ஏதோ தேடுவதைப்போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தோண்டின இடமெல்லாம் தேனாய் நீர். போட்ட விதைகள் எல்லாமே முளைத்து தழைத்து செல்வம் குவித்த அற்புதம். அல்லிகள் கூட்டமாய்ச் சிரிக்க நிரம்பித் ததும்பும் பெரிய குளம் வற்றிப் பார்த்ததில்லை. உடம்புக்கு வந்தால் அரசமரத்தைச் சுற்றி வந்து ஒரு கும்பிடு. கோட்டையம்மா காப்பாற்று- அவளுக்கு விருப்பமான இடமாக இருந்திருக்க வேண்டும்.**

பார்த்துக் கொண்டிருந்தான். ரத்தம் கொப்பளிக்கும் கண்களோடு செல்வராசு. எலே' என்று நெஞ்சிலிருந்து வீறிட்ட வன்மச் சொல் தொண்டைக்கு மேல் வரமறுத்தது. உடம்பு சிலிர்த்தாற்போலிருந்தது. மேனியெங்கும் புது ரசாயனம். இப்படியொரு சந்திப்பு முன்பே நிகழாததன் காரணமென்ன என மனசு அலைபாய்ந்தது. அரசமரத்தின் இதமான தென்றல் தடவி மீண்டும் தடவி, மீண்டும் மீண்டும் தடவி சுற்றிச் சுற்றிச் சுழன்றது.

என்ன செல்வராசு. ஒரே ஊர்லே இருந்தும் பாத்துக்க முடியலே. ரொம்பவும் மெலிஞ்சு போயிட்டே. சற்றே எழுந்த பதற்றம். எழுந்துபோக நினைத்தவனை யாரோ தடுத்தது மாதிரி இருந்தது. ஏராளமான பறவைகள் சப்தித்துக் கொண்டிருந்தன. சந்தோஷத்தின் சாயல். 'ரொம்ப நாளா கேட்கனும்னு நெனச்சேன். நீதான் மொறச்சுக்கிட்டு நிக்கறே' என்றவாறே தொடும் தூரத்தில் வந்து நின்றான் - உற்றுப்பார்த்தான். இரண்டு கிளிகள் குதூகலமாய் கொஞ்சலின் உச்சியில் நின்றன.

'ஏதோ உன் போதாத காலம். வியாபாரம் அதுஇதுன்னு எறங்கி மளமளனு சொத்தையெல்லாம் தொலச்சுட்டே. கஷ்டமா இருக்கு. சமஞ்ச பொண்ண எத்தினி நாளு வீட்லே வச்சிருப்பே. இருவத்தி ஏழாமே. என் மவனுக்குக் கட்டி வச்சுடலாம். சமுத்திரம் மாதிரி சொத்து இருக்கு. ஒரே வாரிசு..'

சுபம் எல்லாம் சுபமே என்று ஓர் அணிற்பிள்ளை வாலை ஆட்டிக்கொண்டே யாருக்கோ இதை அவசரமாகச் சொல்ல வேண்டும் என்பதைப்போல மரத்தில் தாவி உச்சிக்குச் சென்றது. பொல பொலவென உதிரும் பூக்கள்.

எங்கும் பகையில்லை. எங்கும் வன்மம் இல்லை. நான் அனைத்து மேன்மைகளுக்கும் சாட்சியாய் ஆகாயம் தொட நிற்கிறேன். ரட்சிக்கிறேன். உலகம் அமைதி பெறட்டும். மூவகையிலும் அமைதி பெறட்டும். கிழக்கே சந்திரனின் இதமான ரேகைகள் எட்டிப் பார்த்தன. எங்கும் பகையில்லை. எங்கும் குதூகலம்.

கோட்டை அதிகாலையிலேயே அங்கிருந்து உரக்கச் சிரிப்பதாகச் சொன்ன போது சற்று பயமாகத்தான் இருந்தது. அனைத்து நற்காரியங்களுக்கும் காரணமானவள். வந்தாளா இருந்தாளா, கோட்டையம்மாவின் இருப்பை அனைவரும் அறிவர்.

உலகத்தின் அனைத்து நற்காரியங்களுக்கும் நானே காரணமாகிறேன் என்று சொல்கிறாள். கோட்டையம்மாவை யாருக்கும் தெரியாது. பார்த்ததில்லை. ஆனால் அவள் அறிந்தவளாகவே இருந்தாள். அகன்ற நெற்றியில் பெரிய குங்குமப்பொட்டு. அழகிய நீண்ட கூந்தல். எப்போதுமான வாய் நிறையச் சிரிப்பு. நல்ல கரும்பச்சைப் புடவை. இது கோட்டையம்மா என்று உருவகப்படுத்துவதில் - அடையாளப்படுத்துவதில் சத்தியம் இருந்தது. தேவீ நின் வசனங்கள் ரோஜாப் பூவிதழ்களைப் போல பொலபொலவெனக் கொட்டி நெடுகிலும் வாசம் பரவ - பூமியே க்ஷணத்தில் உயிர்ப்பிக்கும். ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில் குளம் பொலிகளோடும் சலங்கை யொலிகளோடும் - சேர சாரத்யம் செய்பவளாயிருப்பது எம் குலச்சாமி. யார் பார்த்தார்கள் யார் பேசினார்கள் என்ன செய்தி பெற்றார்கள் - அறிந்திலர். அவள் பேசப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறாள். இருப்பும் இருப்பற்றதுமானதும் கூட இன்பம் தருவதாகத்தான் இருக்கிறது. அறிவியல் கணக்குகளுக்கு உட்படுத்தலாமோ இந்தப் பரவசத்தை.

தோண்டின இடமெல்லாம் தேனாய் நீர். போட்ட விதைகள் எல்லாமே முளைத்து தழைத்து செல்வம் குவித்த அற்புதம். அல்லிகள் கூட்டமாய்ச் சிரிக்க நிரம்பித் ததும்பும் பெரிய குளம் வற்றிப் பார்த்ததில்லை. உடம்புக்கு வந்தால் அரசமரத்தைச் சுற்றி வந்து ஒரு கும்பிடு. 'கோட்டையம்மா காப்பாற்று-' அவளுக்கு விருப்பமான இடமாக இருந்திருக்க வேண்டும். எந்தக் கிளையில், எந்த இலையில், எந்தப் பூவில் சூட்சுமமாக அமர்ந்து சிரித்துக் கொண்டிருக்கிறாள். புரியாவிட்டாலென்ன? புரிந்து ஆகப்போவதென்ன. உண்மைக்கு உருவம் ஏது, சொற்கள் ஏது, அடையாளம் தான் ஏது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ராஜநாயகம் தாத்தா ஒரு கனவு கண்டதாகச் சொன்னார். கோட்டை அழுதாளாம். இளைத்துப்போய் கறுத்துப்போய் நெற்றிப் பொட்டு சின்னதாகி பச்சைப் புடவைகூட நிறைய இடங்களில் கிழிந்திருப்பதாகத் தெரிந்ததாம். தலையில் வழக்கமாக அமர்ந்திருக்கும் அரசிலைக் கொத்துகூட வாடினாற்போல் - 'என்ன கொற வச்சோம். என்ன கொற வச்சோம்' என்று கேட்டு பதில் பெறுவதற்குள் முழிப்பு வந்துவிட்டதாம். யாரோ ஜன்னல் வழியாக மெல்ல மெல்ல இறங்கினாற் போல - என்ன இது எதன் அடையாளம்? எங்கும் ஆழ்ந்த மௌனம்.

கல்யாணியைக் காணவில்லை என்று ஊரே தேடியது. விடிந்தால் கல்யாணம். 'படிக்க வச்சது தப்பாய்ப் போச்சு' என்று அம்மாக்காரி புலம்பித் தவித்தாள். இந்தக் கல்யாணத்தில் இஷ்டமில்லை என்று தெரிஞ்சும் ஏன்டா கட்டாயப்படுத்தினீங்க என்று ஒரு கிழட்டுக்குரல் கர்ஜித்தது. நான்கு சகோதரர்களும் அரிவாளைத் தூக்கிக் கொண்டு ஆவேசமாகக் கிளம்பினர். 'லே ரங்கசாமி...லே ரங்கசாமி... எங்கே போனாலும் உட்ருவமா.. வெட்டிக் கூறு போட்டுருவோம்...' எங்கும் தணல்.

பலபலவென விடிந்ததும் யாரோ சொன்னார்கள். கல்யாணியும ரங்கசாமியும் அரசமரத்தடியில் உட்கார்ந்திருப்பதாக. மரத்தின் பிரமாண்டத்தில் அவர்கள் புள்ளியாகத் தெரிந்தார்கள். மூத்தவன் அரிவாள் பளபளக்க முன்னே ஓடினான். தொடர்ந்து மற்றவர்களும். 'கொல்லுங்கடா கொல்லுங்கடா...' கல்யாணி கலகலவெனச் சிரிப்பது கேட்டது. எதையும் லட்சியம் செய்யாமல். ரங்கசாமி கலகலவெனச் சிரித்துக் கொண்டிருந்தான். கல்யாணியின் முகத்துச் சோபை சொல்லி மாளாது. பட்டுவேட்டியில் ரங்கசாமி கம்பீரமாய் - சற்றே லட்ஜையான முகத்தோடு.

அரசமர நிழல்வரைதான். கூட்டம் ஏதோ ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டாற்போல் நின்றது. 'அடி கல்யாணீ' என்று அம்மா அழுதாள். அப்பா திகைத்துப்போய் ஆகாயம் நோக்க ஒரு பழுத்த இலை மெல்ல மெல்ல இறங்கி அவள் தலையை உரசிக் கொண்டு போனது. கிளைகள் நர்த்தனமாடின. உலகம் இனிது என இனம் தெரியாத பட்சி நன்று சொல்லிப் பறந்து போனது. ஜில்லென்று அரசமர வாசனை.

**ஊ**ரே திரண்டு நின்றது. கடைசி மரத்துண்டை லாரியில் ஏற்றியபோது ஒரு பெரியவர் வாய்விட்டு அழுதார். 'கோட்டையம்மா என் தெய்வமே'

மேற்கே வானம் வித்யாசமாகத் தெரிந்தது. அநீதியோடு போரிடத் தெம்பிருந்தும் சும்மா இருப்பவன் மூடன். மன்னித்தல் இல்லை. யார் பேசியது. பேச்சல்ல அதட்டல். அரசமரமோ கோட்டையம்மாவோ. இதுவென்ன அபத்தம். இருவரும் வேறல்லவே.

அரசமரமற்ற பிரேசம் ஹோ' வெனக் கிடந்தது. அங்கு சதா சல்லாபித்துக் கொண்டிருந்த பட்சிகள் எங்கோ பறந்து போயிருந்தன.

யாரது கோட்டுருவமாய் அரசமரமா கோட்டை... உய்ய்ய்... என்கிற காற்று சுழன்றடித்தது. சருகுகள் கொத்துக் கொத்தாய் மேற்கு நோக்கிப் பறந்தன. எங்கும் காரிருள். வென்றது யார் தோற்றது யார். கிழக்கே பேரிரைச்சல். கண்களைக் குருடாக்கும் தொடர் மின்னல் பளிச் பளிச்சென பூமியைச் சுக்குநூறாக உடைத்துப்போடும் வண்ணம் பேரிடி. பிரம்மாண்டமான பேரலைகள். அந்தப் பிரதேசத்தையே கபளீகரம் செய்யும் ஆவேசத்தோடு உக்கிரமான வேகத்தோடு நீர்ப்பிரவாகம் நாலா பக்கமிருந்தும் பேரோசை. பேய்க்காற்று வேறு. வானம் பொத்துக் கொண்டு ஊற்றியது. இதென்ன பேய்க்காற்று.

என்ன செய்வோம், எங்கே நடுவோம். காப்பாற்றுவதார்?

இது யாரின் சிரிப்பு. அழகிய முகமும் அகன்ற நெற்றிப் பொட்டும் பச்சைச் சேலையும் இல்லாத இது யார். வெறுமையாய்.

கோட்டை வித்யாசமாகச் சிரித்தாள். பூமி கிடுகிடுக்க. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பேசுங்கள்

இங்கே அரசியல் பேசாதீர்கள் என்ற அறிவிப்பு
ஒளிந்துக்கொண்டிருக்கின்றன

பொது இடங்களில் சாலைகளில் பேருந்துகளில்
கழிப்பறையில் சிறு நீர் கழிக்கையில்
ரயில் நிலையத்தில் ரயிலில்
கோவிலில் மசூதிகளில் தேவாலயங்களில்
அரசியல் பேசாதீர்கள் என்று சொல்லட்டும்

நீங்கள் அரசியல் பேசுங்கள்
சாப்பிடும் போதும் இருமும் போதும்
சமையலறையில் படுக்கையறையில்
தெருவில் நடந்துகொண்டோ
தண்ணீருக்காக காத்திருக்கும் போது
அரசியல் பேசுங்கள்
மின்வெட்டு அதிகமான காலத்திலும்
பட்டினிச் சாவுகள் பெருகி
கஞ்சித்தொட்டி திறக்கும் காலத்திலும்
அரசியல் பேசுங்கள்
திருட்டு நடக்கும் போதும்
போலித் துப்பாக்கி சூடு நடக்கும் போதும்
அரசியல் பேசுங்கள்

நிமிரும் போதும் குனியும் போதும்
சலிப்படையும் போதும்
தற்கொலைக்கு முயற்சி செய்யும் போதும்
அரசியல் பேசாதீர்கள் என்று அவர்கள் சொல்லட்டும்

நீங்கள் அரசியல் பேசுங்கள்
ஊழல் பெருகி வழியும் போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்முறை வெடிக்கும் போதும்
நீங்கள் அரசியல் பேசுங்கள்

மனிதர்களைக் கீழிருந்து மேலாக அடுக்கி வைக்கும் போது
நீங்கள் அரசியல் பேசாத காரணங்களால்
அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்
சாதிக்கெதிராக அரசியல் பேசுங்கள்
சடங்குகளுக்கெதிராக சம்பிரதாயங்களுக்கெதிராக பேசுங்கள்

அவர்கள் உங்களை பயமுறுத்தக்கூடும்
பண்பாடு புனிதமென்று சொல்லக்கூடும்
அதற்கொரு மணம்
அடையாளம் இருக்கிறதென்று சொல்லட்டும்
அந்த அடையாளத்திற்குரியவர்கள் நீங்களும்தான்
உங்களைத் தவிர்க்கிற பண்பாட்டைப் பற்றி பேசுங்கள்
உனக்கும் அவனுக்கும் நடுவே ஏனிந்த கோடுகள்
உடன்படாதீர்கள் ஒத்துப்போகாதீர்கள்
அவர்களுக்கெதிராக நீங்கள் போகவில்லை
அவர்களுக்கு சமமாக நிற்கப்போகிறீர்கள்
அதற்காகத்தான் இந்த அரசியல் பேசுங்கள் நிகழ்ச்சி

சாஸ்திரங்களுக்கெதிராக பேசுங்கள்
தீட்டு தீண்டாமை மேல்கச்சை அணிய உரிமை இல்லாமை
கோவிலுக்குள் நுழைய அனுமதி மறுப்பு
எல்லாவற்றிலும் அரசியல் குடியிருந்திருக்கிறது
மூதாதையர்கள் பேசாததால்
உங்கள் துயரத்தின் வயது இரண்டாயிரத்து ஐந்நூறு
ஆண்டுகள்
பேசியிருந்தால் அது இறந்து போயிருக்கலாம்
பேசுங்கள் அரசியல் பேசுங்கள்

கடவுளை உங்கள் முன்னால் நிறுத்துவார்கள்
தயங்காதீர்கள் குழப்பமடையாதீர்கள்
கடவுளுக்கெதிராக அரசியல் பேசுங்கள்
உங்கள் சுதந்திரம் அரசியலுக்குள்
முடங்கிக் கொண்டிருக்கிறது
சத்தமாக அரசியல் பேசுங்கள்
உரத்த சத்தம் கேட்டு வெளிவரட்டும். ■





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமலர் குருமடம்

ஜோ டி குரூஸ்



அந்த நாளில் ஈ.எஸ்.எல்.சி என்கிற எட்டாம் வகுப்புத் தேர்வு எழுதுவதற்காக நாங்கள் ஆமந்துறையின் வடக்கே நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் இடையன்குடி கால்டுவெல் பள்ளிக்குத்தான் வரவேண்டும். திசையன்விளை போகும் வழியில் மேட்டு நிலத்தில் அமைந்த செம்மண் பூமி இடையன்குடி. மா, பலா, வாழை என முக்கனியும் விளையும் சத்தான மண். வீட்டுக்கு வீடு சப்போட்டாவும், நெல்லியும்கூட இருக்கும். சுற்றிவர கோட்டைச் சுவருள்ள வீடுகள். பச்சைப் பசேலென இருந்த அதே இடையன்குடிதான் இன்று வானம் பார்த்த பூமியாய் வறண்டு போய் கிடக்கிறது.

அரசாங்கத் தேர்வு என்கிற அச்சம் ஒருபுறம் இருந்தாலும் இடையன்குடி வந்து தேர்வு எழுதிய நாட்கள் ஏதோ உல்லாசப் பயணம் வந்துபோன உணர்வையே என்னுள் ஏற்படுத்தியிருந்தது. ஏழைக்கேற்ற எள்ளுருண்டை... காய்ந்து வறண்டுபோன ஆமந்துறை எங்கே, விதவிதமாய் குரோட்டன்ஸ், பூக்களும் காய்களுமாய் பூரித்து நிற்கும் செடி, கொடி மரங்கள் நிறைந்த இடையன்குடி எங்கே...

தேர்வுகள் முடிந்ததும் தேவஅழைத்தல் வாரம் வந்துவிடும், பின் தூத்துக்குடி போய் குருமடத்தில் சேர்ந்துவிட்டால், சாமியார் ஆகி, அங்கி மாட்டலாம், கச்சை கட்டலாம், கதிர்ப்பாத்திரம் தூக்கி ஆசீர்வாதம் வைக்கலாம், என்னென்னவோ கனவுகள், கற்பனைகள்...

ஆமந்துறையில் தேவ அழைத்தல் வாரம் அறிவித்திருந்தார்கள். என்னோடு சேர்ந்து

## வேர்பிடித்த விளைநிலங்கள் - 6

சாமியார் ஆகும் கனவோடு எட்டாம் வகுப்பு முடித்திருந்த என் நண்பர்கள் அனைவருக்குமே ஓர் இனம் புரியாத உற்சாகம். தேவ அழைத்தல் என்றால் உண்மையில் என்ன என்றே புரியாத ஒரு பரவசம். (அறியாமையே பரவசம் என்பார்களே அதுபோல...) “அறுவடையோ மிகுதி ஆனால் வேலையாட்களோ குறைவு எனவே அறுவடைக்கு ஆட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்றாடுவோம்” என்று பங்குக் கோவிலில் பிராத்தனை நடந்தபடியிருந்தது. எனக்கும் கீளியார் மகன் கலிஸ்றனுக்கும் உற்சாகம் பிடிபடவில்லை. காரணம் இந்த நாளுக்காகத்தான் ஏங்கிக் கொண்டிருந்தோம். விடுமுறை நாட்களில் நேரம் கிடைக்கும் போதெல்லாம் சாரத்தை கிழித்து பங்குச் சாமியார்போல் பூசை உடுப்பு உடுத்தி, வீட்டின் ஏதாவது ஒரு மூலையில் கையில் கிடைக்கும் படங்களை அடுக்கி வைத்து பீடம் போல் சோடித்து பூசை வைத்து ஆத்தாவுக்கும், அக்கா, தம்பி தங்கைமாருக்கும் நன்மை கொடுத்துக் கொண்டிருப்போம். பங்குச் சாமியாரை அவதார புருஷர்களாய் மனதில் வரித்துக் கொண்டிருந்த காலம் அது.

அன்று ஞாயிற்றுக்கிழமை தூத்துக்குடி மேற்றிராசனத்தில் இருந்து ஆல்பின் வில்லவராயர் ஆன்ம குருவாய் ஆமந்துறை வந்திருந்தார். பெரிய மேசைக்கார குடும்பத்துக் காரர். பின்னாளில் பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கான சம்பளம் வாங்கி வரும்போது தெரியாமல் தவற விட்டுவிட்டு அதையே நினைத்து நினைத்து மாய்ந்து, புத்தி பேதலித்து, கவனிப்பாரின்றி போய் சேர்ந்ததாகச் சொல்வார்கள். சாமியாராகும் கனவில் இருந்தவர்கள் எல்லோரும் சாமியார் மேடையில் வந்து கூடியிருந்தோம். அவர் கூடவே ஆமந்துறையிலிருந்து ஏற்கெனவே குருமடத்தில் பயிலும் சீமோனும் நின்றிருந் தான். எங்களை வரிசைப்படி நேர்முகத் தேர்வுக்காக ஆல்பின் வில்லவராயர் இருந்த அறைக்குள் அனுப்புவது அவனுக்கு இடப்பட்டிருந்த பணி.

அந்த நாட்களில் பாரீஸ் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராய் பணியாற்றிய பெரிய செல்வந்தரின் மகனான பிரான்சிஸ் சவேரியார் எப்படி குருவாகி மக்கள் பணி ஆற்ற இந்தியா வந்தார் என்றும், கடற்கரை ஊர்களில் எல்லாம் காலில் செருப்புகூட இல்லாமல் சுற்றித்திரிந்து கிறிஸ்துவையும், கிறிஸ்துவ விசுவாசத்தையும் அறிவித்தார் என்றும் பேசிக் கொண்டே இருந்தார் ஆல்பின் வில்லவராயர்.

ஆமந்துறை போன்ற கடற்கரையூர்களி லிருந்து குருமடத்தில் படித்தவர்கள் மேற்றிராசனத்தால் ஸ்பெயின், பிரான்ஸ், போர்ச்சுகல் போன்ற இடங்களுக்கு அனுப்பப் பட்டு மேற்படிப்பு படித்தார்கள். அவர்கள் அங்கு சென்று பார்த்த ரோம் தேவாலயம், போப் ஆண்டவரின் வத்திக்கான் பங்குளா, மரியன்னை காட்சி கொடுத்த பாத்திமா போன்ற இடங்களில் எடுத்த போட்டோக் களை ‘ஸ்லைடு ஸோவாய்’ இங்கு வந்து காட்டுவார்கள். பார்க்கப் பார்க்க பிரமிப்பாய் இருக்கும். குருப்பட்டம் வாங்கி முழுமையான சாமியார் ஆனவர்களை மட்டுமல்லாது சாமியாருக்கு படிப்பவர்களையும் பிரதர், பிரதர் என பாசத்தோடு அழைத்து உபசரிக்கும் வழக்கம் ஆமந்துறையிலிருந்தது.

> அந்த நாட்களில் பாரீஸ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராய் பணியாற்றிய பெரிய செல்வந்தரின் மகனான பிரான்சிஸ் சவேரியார் எப்படி குருவாகி மக்கள் பணி ஆற்ற இந்தியா வந்தார் என்றும், கடற்கரை ஊர்களில் எல்லாம் காலில் செருப்புகூட இல்லாமல் சுற்றித்திரிந்து கிறிஸ்துவையும், கிறிஸ்துவ விசுவாசத்தையும் அறிவித்தார் என்றும் பேசிக் கொண்டே இருந்தார் ஆல்பின் வில்லவராயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எல, சாமியாருக்கு படிக்கிறது லேசுபட்ட காரியமில்ல, இங்கிலீஷ், லத்தீன் எல்லாம் தளபாடமா படிக்கனும். அது ரெம்ப கஷ்டம் கேட்டியா!" என்றான் சீமோன்.

"நீங்க எப்படி படிச்சியளோ அதேமாரி நாங்களும் படிப்போம் பிரதர்."

"எல, நா பெரிய அறிவாளி கருவுலே திருவானவம். எனக்கு பிஷப் ஆகனுமின்னு ஆச. நீங்கள்லாம் எப்புடி..."

புன்முறுவலோடு வரவேற்றார் ஆல்பின் வில்லவராயர்.

"அய்யா, ஆத்தா எல்லாம் எப்புடி இருக்காங்க?"

"நல்ல இருக்காங்க ஃபாதர்."

"சரி, ஞாயிற்றுக்கெழம வேகமா பூசைக்கி போய்கிட்டு இருக்க, போற வழியில கடல்ல அடிபட்டு ஒருத்தர கொண்டு வாராங்க. ஆஸ்பத்திரிக்கி போக அவுங்களுக்கு வழி தெரியில..."

"..."

"ஒனக்கு தெரியும். ஆனா அவுங்கள ஆஸ்பத்திரிக்கி கூட்டிற்று போனா ஞாயிற்றுக் கெழம பூசைக்கு போக முடியாது"

"..."


"என்ன பண்ணுவ? ஞாயிற்றுக்கெழம பூசைக்கி போகாட்டி அது சாவான பாவம்."

"பூசைக்கி போவாட்டி பரவால்ல ஃபாதர் நா அவங்கள ஆஸ்பத்திரிக்கித்தாம் கூட்டிற்று போவம்."

"அப்புடியா... நல்லா யோசிச்சி சொன்னியா?"

"ஆமா, ஃபாதர்"

"சரி போ."



எனக்கு பிறகு கீளியார் மகன் கலிஸ்றன் உள்ளே போய் வெளியே வந்தான். கார்மேகம் போல் நெஞ்சு இருண்டு அதைத் தன் முகத்தில் காட்டியவாறே நின்றிருந்தான் சீமோன்.

"என்னல கேட்டாரு?"

"ஞாயிற்றுக்கெழம பூசையா, அடிபட்ட ஆள ஆஸ்பத்திரிக்கி கூட்டிற்று போவியான்னு கேட்டாரு."

"நீ என்ன சொன்ன?"

"நா ஞாயிற்றுக்கெழம பூசைக்கித்தாம் போவமின்னு சொன்னம்."

யோசனையில் சாமியார் மேடையில் தூணில் சாய்ந்தவாரே நின்றிருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> கடிதத்தை எடுத்துக்கொண்டு ரெபெக்டிரிக்கும், டார்மெட்ரிக்குமாய் மாறி மாறி ஓடினேன். கடிதத்தில் இங்கு நாங்கள் சுகம் அங்கு உன் சுகம் அறிய ஆவல். நன்றாக படி, சாப்பிடு என்ற வாசகங்கள்தான் ஆனாலும் கடிதத்தை என் கைகளில் வாங்கிய அந்தக்கணம் அப்பப்பா...கண்களில் தாரை, தாரையாய் கண்ணீர்.

'ரண்டியருல யார தேர்வு செய்வாரு, சரி, சரி வந்தாப் பாரு வராட்டி இருக்கவே இருக்கு எடையங்குடி பள்ளிக்கூடம்.'

ஒருவாரத்திற்குப்பின் பங்குச் சாமியாரிட மிருந்து அழைப்பு வந்திருந்தது. போய் விசாரித்தால் இருவருமே தூத்துக்குடி சிறுமலர் குருமடத்தில் படிப்பதற்கு தேர்வாகி யிருக்கிறீர்கள் என்றார். அன்று இரவே தூக்கத்தில் ஒரு கனவு. அந்தோணியார் கோவில் திருவிழா நடக்கிறது. மானாட்டா விலக்கிலிருந்து தூத்துக்குடி மேற்றிரானியாரை தாரை, தப்பட்டை முழங்க ஊருக்குள் அழைத்து வருகிறார்கள்.

"இதோ பெரிய குரு வருகின்றார்; வருகின்றார்..

இறைவனுக்குகந்தவர் வருகின்றார்..

இவர்க்கிணையாக இறை சொல்லை ஏற்று நடப்பவர் வேறில்லை"- என்று பாடியபடி மொத்த கூட்டமும் அவர் முன்னாலும் பின்னாலும் வருகிறது. அருகில் சென்று பார்த்தால் அங்கே கொலு வண்டியில் கிரீடமும், செங்கோலும் கையுமாக நான்.

விழித்துக் கொண்டேன். காலையிலேயே பாட்டி பிரகாசி வந்திருந்தாள். என்னை திசையன்விளை கூட்டிப்போய், ஒரு டிரங் பெட்டி, மூன்று செட் வெள்ளைச் சட்டையும், நீலக் கால்சட்டையும், பற்பொடி, தேங்காய் எண்ணெய், லைப்பாய் சோப் என்று தேவையான எல்லாப் பொருட்களும் வாங்கித்தந்தாள்.

குருமடத்திற்கு கிளம்புவதற்கான தேதி வந்தபோது சீமோனிடம் சென்று விவரம் கேட்டால் என்னோடு வாருங்கள் என்று சொன்னவன் முந்தின நாளே கிளம்பிப்போய் எங்களை தவியாய் தவிக்க வைத்துவிட்டான். இத்தனைக்கும் உறவுதான் ஆனாலும் அவனது அங்கியையும், கச்சையையும் பறிப்பதற்கு ஏதோ நாங்கள் வந்துவிட்டது போன்ற பாவனையிலேயே நடந்து கொண்டான்.

கலிஸ்றனின் அய்யா கிளியார்தான் எங்களை தூத்துக்குடி கூட்டி வந்தார். முந்தின நாளே வந்து தூத்துக்குடி பரதர் ஹோமில் தங்கினோம். அந்தக் காலத்தில் மிகவும் பிரபலமாய் இருந்த மேசைக்கார தனவந்தர் பெரைரா கடற்கரையூர் மக்களுக்காக கட்டிக் கொடுத்த பங்குளா பரதர் ஹோம்.

ஆமந்துறையைப் பிரிந்து தூத்துக்குடி சிறுமலர் குருமடத்தில் சேர்ந்து புனித சவேரியார் பள்ளியில் படிக்க ஆரம்பித்த நாட்கள் ஏதோ தூரப் பிரதேசத்தில் தொப் பென விழுந்துவிட்ட உணர்வையே தந்தது. தூத்துக்குடியில் ஆமந்துறையின் சிம்ம சொப்பனமாய் கல்லும் கையுமாய் அலையும் செம்பு லோட்டா இல்லை. நடுத்தெருவின் பக்கம் போனாலே தொடை நடுங்க வைக்கும் பீமணி என்ற நாய் இல்லை. ஆனாலும் பாசமாய் அழைத்து முதுகை வருடும் கிறுக்கன் போஸ்கோ இல்லை, ஆதரவாய் கூடவே சுற்றும் நண்பன் சார்லஸ் இல்லை, தாத்தா தொம்மந்திரை இல்லை, பிரகாசிப் பாட்டியின் முந்தானையின் வருடல் இல்லை...

தூத்துக்குடி சவேரியார் பள்ளியில் புதிய நட்புகள் அறிமுகமாயின. பெரிய தாழை டல்லஸ், இருதயராச், பேய்க்குளம் போரஸ், கூட்டப்பனை லயோலா, பழைய காயல் அன்றோ, இப்படியாக பல நண்பர்கள். சவேரியார் பள்ளியில் எல்லா வகுப்பறை களிலும் ஸ்பீக்கர் பொறுத்தியிருந்தார்கள். திடீரென ஸ்பீக்கரில் கரகரவென கேட்கும் உடனே வாத்திமார் பாடம் எடுப்பதை நிறுத்தி விடுவார்கள். 'அனவுன்ஸ்மெண்ட் ஃபிளிஸ்' என்று ஆரம்பிப்பார் தலைமை ஆசிரியர். ஃபாதர் மலைக்கள், தோணிப்பயமருகே ஃபாதர் மலைக்களின் சைக்கிள் ரிக்ஷா வருகிறதென்றால் நான்கு புறமும் போகும் வண்டிகளை நிறுத்திவிட்டு அவருக்கு வழிவிடுவார்கள். விதவிதமான கார்களில் வந்து இறங்குவான் மச்சாது மகன் ஜோ. பெரிய தடகள வீரனாக செஃப்ரின் டிவோட்டா, கூடைப்பந்து வீரனாக சிதம்பரம், நாடகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரர் பெர்கிமான்ஸ் வாத்தியார், 'கொசுவால் சூப்பு குடிங்கல' என்ற சொல்லும் சூசை மாணிக்கம் வாத்தியார் என பலர் எனக்கு அறிமுகமானார்கள். சிறுமலர் குருமடத்தில் சதா ஜெபமும், தவமும் என்றிருக்குமென்று பார்த்தால் அப்படி ஒன்றுமில்லை. ஆனால் கட்டடத்துக்குள்ளேயே சிறிய கோவில் இருந்தது. ஆர்மோனியம், தபேலா, டிரம்ஸ் என இசைக்கருவிகளை பழகுவதற்கு வாய்ப்புகள் இருந்தன. ஆமந்துறை சீமோன் மட்டும் எங்களோடு ஒட்டிக் கொள்ளவே மாட்டான். எப்போதும் ஒரு வகையான கெவுளிப்பார்வை.

ஒரு வாரம் கடந்திருக்குமென்று நினைக்கிறேன். ஆத்தாவிடமிருந்து வந்திருந்த கடிதமொன்றை கொண்டு வந்து தந்தான் பீடில். அதாவது குரு மாணவர் தலைவன். புதிது புதிதாய் அதிகம் ஆங்கில வார்த்தைகள் புழக்கத்தில் இருந்தன. ரெபெக்டரி என்றால் சாப்பாட்டறை, டார்மெட்ரி என்றால் படுக்கையறை. கடிதத்தை எடுத்துக்கொண்டு ரெபெக்டிரிக்கும், டார்மெட்ரிக்குமாய் மாறி மாறி ஓடினேன். கடிதத்தில் இங்கு நாங்கள் சுகம் அங்கு உன் சுகம் அறிய ஆவல். நன்றாக படி, சாப்பிடு என்ற வாசகங்கள்தான் ஆனாலும் கடிதத்தை என் கைகளில் வாங்கிய அந்தக்கணம் அப்பப்பா...கண்களில் தாரை, தாரையாய் கண்ணீர். புரியாத இடம், பழகாத சூழல், வேகாத கோதுமைத் தோசை, சுவைக்காத சாம்பார், பாசநேசத்திற்கே இடமில்லை. இங்கு பார்த்தால் குற்றம், அங்கு நின்றால் குற்றம். சவேரியார் பள்ளிவாசலில், உப்பில் ஊறவைத்த நெல்லிக்காயும், இலந்தைப் பழமும் சீவு உளி போட்டு பூப்போல் சீவிய ஐஸ்சும் விற்பான். நாக்கில் எச்சில் தாறுமாறாய் ஊறும். ஆனால் வாசலைத் தாண்டிபோய் எதுவும் வாங்கிவிட முடியாது. கடிதத்தை அன்று மாலைக்குள்ளாகவே இருபது முறையாவது படித்து முடித்திருப்பேன். ஆனாலும் கீழே வைக்க முடியவில்லை.

யார் செய்த புண்ணியமோ மேற்றிராசன நிர்வாகம் சிறுமலர் குருமடத்தை சின்னக் கோயில் பகுதியிலிருந்து இந்நாசியார் புரத்துக்கு மாற்றியது. ஏதோ ஒரு புதிய உலகமே எங்களுக்கு திறந்தது போலிருந்தது. பள்ளி முடிந்ததும் பின்புறம் இருப்புப்பாதை வழியே இறங்கி நடந்தால் இரண்டாம் கேட் வந்துவிடும். வலதுபுறம் திரும்பினால் பக்கிங் ஓடைப்பாலம். அதைக்கடந்து இந்நாசியார் புரம் போக குறைந்தது அரைமணி நேரமாவது ஆகும். முதலில் பார்த்து பயந்த ரயில் எஞ்சின்கள் பழகப் பழக பரிச்சையமாகி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தன. கூ..கூவென அவை முன்னும் பின்னும் நகர்வது பார்ப்பதற்கு பிரமிப்பாய் இருக்கும்.

"எல அங்க பாத்தியா கெணறுமாரி இருக்கத" என்றான் அன்றோ.

"அதுக்கு என்னல..."

"அதுக்குள்ள இந்த எஞ்சின் வண்டி போயி நின்னவொடன பின்னால இருந்து கையால சுத்துறான்வ பாரு. அப்புடியே 180 டிகிரி திரும்பிருது."

"ஆமால"

"வெள்ளைக்காரம் மூளயே மூள என்ன?"

"என்ன பெரிய மூள"

தூரத்திலிருந்து காற்றுவாக்கில் "அன்னக் கிளி" படத்தின் மச்சானப் பாத்தீங்களா பாடல் கேட்டபடியிருந்தது. எப்போதுமே பழைய காயல் அன்றோவை கிண்டல் பண்ணும் பெரிய தாழை டல்லஸ் எடுத்துக் கட்டிப் பாட ஆரம்பித்தான்.

"அன்றோவப் பாத்தீங்களா,
பனங்காட்டுத் தோப்புக்குள்ள
பேயாடும் தோப்பில் தனியாக அவன
பாத்தாத்தாம் சொல்லுங்களம் - என்
ஏக்கத்த சொல்லுங்களேன்."

அன்றோ நனைந்த பனைபோல் என்னிலும் கருப்பாக இருப்பான் என்பதை குத்திக் காட்டுவதாகவே அது இருக்கும்.

இந்நாசியார்புரத்தில் இருந்த குருமடம், சின்னக்கோயில் பகுதியைப் போலல்லாது சுற்றிலும் மரங்கள் அடர்ந்த பகுதி. இரவில் ஆந்தைகள் அலறும். விடிகாலை நாலரை மணிக்கு விசிலடிக்கும் சத்தத்தில் எழுந்து வந்தால் விடிய விடிய திறந்து கிடக்கும் தொட்டிகளில் இருக்கும் தண்ணீர் ஊசி போல் குத்தும். ஆனால் குளித்தே ஆக வேண்டும்.

இப்படியாக போய் கொண்டிருந்த எங்கள் வாழ்க்கையில் எப்போது இடையூறு பண்ணலாம் என்று காத்திருந்த ஆமந்துறை சீமோனுக்கு அருமையான ஒரு வாய்ப்பு கிடைத்தது.

விபூதி புதன் கடந்து தவக்காலம் ஆரம்பித்திருந்தது. ஜெபம், தவம், தியானம் என்று கழிந்து கொண்டிருந்தன நாட்கள். அன்று பெரிய வியாழன் யேசு பிலாத்துவின் முன் குற்றவாளியாய் நிற்கும் நாள். நல்லவன் போல் எங்களருகே வந்தான் சீமோன்.

"எல, அதிபர் சாமி இல்ல மரக்குரங்கு விளையாடுவமா...?"

"தவக்காலத்துல போயி விளையாடக் கூப்புடுற"

"யாருக்கு தெரியப் போவுது வாங்கல" என்றான் சீமோன்.

நானும், டல்லஸும், கலிஸ்றனும் சீமோனோடு சேர்ந்து மரத்துக்கு மரம் தாவி மரக்குரங்கு விளையாட ஆரம்பித்தோம். விளையாட்டின் சுவராஸ்யத்தில் அவன் எங்களிட மிருந்து விலகிப் போனது எங்களுக்குத் தெரியவில்லை. திடீரென மேல்மாடியில் சன்னல் கதவொன்று திறக்கிறது. வெள்ளை அங்கியில் அதிபர் சாமியும் அவரோடு சீமோனும் நின்றிருப்பது தெரிகிறது. எங்களை நோக்கி கையை ஆட்டி ஆட்டி ஏதோதோ சொல்கிறான் சீமோன். கீழே வந்த சாமியார் எங்களை பிரம்பால் வெளுத்து வாங்கிவிட்டார்.

நரிப்புன்னையோடு நின்றிருந்தான் ஆமந்துறை சீமோன். வாங்கிய அடியில் நகக்கண் வழியாக ரத்தம் கசிய ஆரம்பித்து விட்டது. சீமோனுக்கு ஏற்கெனவே குருமடத்தில் மூலம் என்று பெயர் இருந்தது.

"எல, மூலம் யூதாஸ் புத்திய காட்டிட்டான" என்றான் டல்லஸ்.

"பாடுகள் நீர்பட்ட போது
பாய்ந்து சிந்திய ரத்தம்...
கெட்டுப் போனோம்
பாவியானோம் - தீர்வை
செய்யும் நாளிலே..."

முனகியபடியே வந்தான் கலிஸ்றன்.

"அடுத்த வருடம் ஒங்களுக்கெல்லாம் இங்க எடம் இல்லை"

"சரி ஃபாதர்."

'நீங்கள் புறாக்களைப் போல் கபடற்றவர் களாயும் பாம்புகளைப் போல் விவேகி களாகவும் இருங்கள்' என்ற விவிலிய வாசகம் என் மனத்திரையில் வந்து போனது.

இப்படி கத்தோலிக்கத்துக்கு கிடைக்க விருந்த நல்ல குருக்களை முளையிலேயே கிள்ளிப்போட்ட ஆமந்துறை சீமோனும் சாமியார் ஆனானா... என்றால் அந்தோ பரிதாவம் இல்லை. பின்னாளில் மதுரையில் பெரிய குருமடத்தில் படிக்கும்போது காதல் வயப்பட்டு ஒழுங்கு நடவடிக்கையில் வெளியே துரத்திவிட்டார்களாம்.

எல்லாம் அவன் செயலன்றி வேறென்ன! ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தேவை வாழ்வியற் கல்வி இயக்கம்

**ந**ம் சிறுவர்கட்கும், இளைஞர்கட்கும் நாம் வழங்கும் கல்வி வெறும் உலகியல் கல்வியாகவே இருக்கின்றது. நாம் வாழும் வாழ்க்கையும் உலகியல் வாழ்க்கையாகவே இருக்கின்றது. இவை இவ்வாறு அமைந்திருப்பதில் ஏதேனும் குறை இருப்பதாகவும் நாம் நினைக்கவில்லை. ஒவ்வொருவரின் தன் முன்னேற்றத்தையே மையமாகக் கொண்டு வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது.

“மாந்தர் மாந்தராக வாழ வேண்டும்; மாந்தப் பண்பும், மாந்தநேயமும் உடையவர்களாக அவர்கள் திகழ வேண்டும். மாந்தர் ஒருவரை ஒருவர் சுரண்டாமல், ஒருவர் மீது ஒருவர் மேலாண்மை செலுத்தாமல், ஒருவரை ஒருவர் துன்புறுத்தாமல் இணக்கமும் நல்லுறவும் கொண்டு மகிழ்ச்சியாக வாழ வேண்டும்” என்று நாம் சொல்வோமானால், உலகியல் கல்வி கற்று, உலகியல் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய மக்கள் அதற்குச் சிறிதளவும் எதிர்ப்போ, மறுப்போ தெரிவிப்பதில்லை. சரி சரி என்றே சொல்கின்றனர்.

ஆனால், மாந்தர் மாந்தப் பண்பும், மாந்த நேயமும் அற்றுப் போவதற்கும் ஒருவரை ஒருவர் துன்புறுத்துவதற்கும் சுரண்டுவதற்கும், தங்களிடையே எப்பொழுதும், ஏதாவதொரு காரணத்தால் பூசலிட்டுக் கொண்டிருப்பதற்கும் இன்று மேற்கொண்டு வரும் உலகியற் கல்வியும் உலகியல் வாழ்க்கையுமே காரணம் என்றால் இதை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. உலகியல் இல்லாமல் வாழ்க்கை ஏது? என்று வினவுகின்றனர்.

ஒருவர் பொருளீட்டிக் கொள்வதும், செல்வச்செழிப்புடன் வாழ்ந்து வருவதும் பிழை அல்ல. அவரவர் தங்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தங்கள் வாழ்வை வளமாக ஆக்கிக் கொள்வதும் தேவையானவையே. ஆனால் இந்த உலகம் கூட்டுறவு உலகம். ஒருவரை ஒருவர் சார்ந்து ஒருவரோடு ஒருவர் அன்புடன் வாழ வேண்டிய உலகம். எனவே, ஒருவரின் உலகியல் முன்னேற்றம் என்பது மற்றொருவரின் முன்னேற்றத்துக்கோ, பிற மாந்தருடன் அமைந்துள்ள கூட்டு வாழ்க்கைக்கோ கடுகளவும் தடையாக இருத்தல் கூடாது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்தே தீரல் வேண்டும். சிலர் அளவுக்கு மீறிப் பொருளைக் குவித்துக் கொள்வது வேறு சிலரின் வறுமைக்குக் காரணமாகிறது என்பதை நாம் மறத்தல் கூடாது. எனினும், ஒருவன் தன் சொந்த உழைப்பினால் பொருள் ஈட்டிச் செல்வச் செழிப்புடன் வாழ்வதற்கு இந்த உலகில் வழியிருக்கின்றது. பிறரைச் சுரண்டித் தான் தன் செல்வ மாளிகையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது தேவையில்லை.

அவ்வாறானால், ஒருவன் தன் சொந்தப் பொருளியல் முன்னேற்றத்துக்கு எதனை வரம்பாகக் கொள்வது? தன் உலகியல் வாழ்க்கையை எந்தப் புள்ளியில் நிறுத்திக் கொள்வது? நம் முன்னேற்றம் பிறர் தீமைக்குக் காரணமாகாதிருத்தல் வேண்டும். உலகியல் வாழ்க்கை மற்றவர் மீது அன்பு காட்டுவதற்குத் தடையாயிருத்தல் கூடாது. இவற்றில் நாம் மிகத்தெளிவுடன் இருத்தல் வேண்டும்.

**நம்மைச் சுற்றி நடக்கும் தீமைகள்**

அடுத்தபடி நாம் அறிந்துகொள்ள வேண்டியது, நம்மைச் சுற்றி நடக்கும் பல தீமைகள் வெறும் பொருளியல் ஏற்றத் தாழ்வினால் மட்டுமே ஏற்பட்டிருப்பவை அல்ல என்பதாகும். நம்மிடம் காணப்படும் இன, நிற, மொழி, மதச் சாதி வேறுபாடுகளாலும் அத்தீமைகள் பெருகி வளர்ந்துள்ளன. மாந்தரிடையே நிலவும் பொருளியல் ஏற்றத்தாழ்வுகட்கு மட்டும் அன்று, சாதி, மத, இன, நிற மொழி ஏற்றத் தாழ்வுகட்கும் காரணம் சிலர் தாங்கள் உழைக்காமல் பிறரைச் சுரண்டிப், பிறர் உழைப்பை உறிஞ்சிப் பிழைத்தல் வேண்டும் என்று எண்ணுவதே ஆகும்.

தந்திரமான மூளை படைத்தவன் உடல் உழைப்பில்லாமலேயே வாழ நினைக்கின்றான். தனக்காகப் பிறர் உழைக்குமாறு அவர்களின் மூளையைக் கட்டுப்படுத்துகின்றான். இயல்பாக அமைந்த நிற, மொழி வேறுபாடுகளை மிகைப்படுத்தியும், இல்லாத சாதி வேறுபாடுகளை உண்டாக்கியும் அறியாமைமிக்க மக்கள் உள்ளத்தில் அச்சத்தைத் தட்டி எழுப்பியும், மத நம்பிக்கைகளை உண்டாக்கியும், உழைப்பைப் பல்வேறு வகையாய்ப் பிரித்து மக்கள் மீது திணித்து, அவர்கள் உள்ளத்தில் தாழ்வுணர்ச்சி ஏற்படும்படி அவர்களைக் கீழ் சாதிகளாக்குகின்றான். அவர்கள் முன்னேறும் வாய்ப்புகளை மறுத்து, என்றென்றும் அவர்களைத் தன் காற்கீழேயே வைத்துக் கொள்கின்றான். தந்திரமான வாழ்க்கை முறைகளால் பொருளியல் வலிமையைத் தன்கையில் வைத்துக் கொள்பவன் உழைக்கும் மக்கள் பொருளியல் வலிமை அடையாதிருக்க என்ன என்ன வகையில் அவர்களைக் கட்டுப்படுத்த முடியுமோ அந்த வகையிலெல்லாம் கட்டுப்படுத்துகின்றான். கீழ்நிலை மக்கட்குக் கல்வி

**"தங்கள் பொருளியல் பேரரசு சரிந்து விழக்கூடாது, அதனைக் காத்துக்கொள்ளத் தாங்கள் உண்டாக்கிவைத்த மேல் சாதி, கீழ் சாதி உணர்வுகள் மறைந்துவிடல் கூடாது; உழைப்பவன் கல்விபெற்றுத் தங்களோடொத்த உயர்நிலைக்கு வந்துவிடக்கூடாது என்று நினைக்கும் வல்லாண்மைக் கும்பல்களே சாதி மோதல்களுக்குக் காரணம் ஆகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பு, வேலை வாய்ப்பு மறுக்கப்படுவதும் இதனாலேயே.

இன்று இந்தச் சூழ்ச்சிகள் எல்லாம் அம்பலமாகிக் கொண்டு வருகின்றன. கீழ்நிலை மக்கள் படிப்படியாக விழிப்படைந்து வருகின்றனர். தங்கள் வாழ்வுரிமைக்குப் பாடுபடத் தொடங்கிவிட்டனர். இதுநாள்வரை கீழ்நிலை மக்களைத் தங்கள் காற்கீழேயே வைத்திருந்த வல்லாண்மைக் கும்பல்களால் இதனைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கீழிருப்பவன் மேல் வருவதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தங்கள் வல்லாண்மைப் பேரரசு சரிந்து விழுந்துவிடக் கூடாதே என்று அஞ்சுகின்றனர். இதன் விளைவுதான் என்ன? இதன் விளைவுதான் இன்றைய சாதிக்கலவரங்கள். காதல் எதிர்ப்பு வெறித்தனங்கள்.

தங்கள் பொருளியல் பேரரசு சரிந்து விழக்கூடாது, அதனைக் காத்துக்கொள்ளத் தாங்கள் உண்டாக்கிவைத்த மேல் சாதி, கீழ் சாதி உணர்வுகள் மறைந்துவிடல் கூடாது; உழைப்பவன் கல்விபெற்றுத் தங்களோடொத்த உயர்நிலைக்கு வந்துவிடக்கூடாது என்று நினைக்கும் வல்லாண்மைக் கும்பல்களே சாதி மோதல்களுக்குக் காரணம் ஆகின்றன.

குமுகாயத்தின் மீது அக்கறை உடைய நாம் இவற்றை எண்ணி பார்க்கின்றோம். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்நாட்டில் இருந்துவரும் சாதி இழிவு நம்மால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. மாந்தநேயமற்ற வல்லாண்மைக் கும்பல்களின் அட்டுழியங்கள் மிகத் திமிருடன் மேற்கொள்ளப்படுகின்றன. வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட சாதிக் கலவரங்களில் அப்பாவி மக்களின் உயிர்கள் காவுகொடுக்கப் படுகின்றன. உடைமைகள் அடித்து நொறுக்கப்படுகின்றன.

**தீமைகளை எதிர்கொள்வது எப்படி?**

பொருளியல், சாதி ஏற்றத்தாழ்வற்ற ஒரு மக்களமைப்பை உருவாக்குவதற்கான பல வழிகள் இன்று மேற்கொள்ளப்படுகின்றன. சாதி மறுப்பு இயக்கங்கள், கலப்புத்திருமண முயற்சிகள், மூட நம்பிக்கை ஒழிப்புப் பணிகள், கீழ்நிலை மக்களுக்கான கல்வி, வேலை வாய்ப்பு, இட ஒதுக்கீட்டுப் போராட்டங்கள், பொருளியல் சமநிலையை முன்வைக்கும் பொதுவுடைமை இயக்கப் பணிகள், பன்னாட்டுக் கொள்ளை வாணிகர்களையும் முதலாலளிகளின் சுரண்டலையும் எதிர்த்து நிகழும் போராட்டங்கள், தமிழ் மக்களை என்றும் அடிமைகளாக வைத்திருக்கச் சூழ்ச்சிபுரியும் ஆங்கிலவழிக் கல்வியை எதிர்த்து நிகழும் போராட்டங்கள், ஊழல் எதிர்ப்புப் போராட்டங்கள், முறையான நேர்மையான தேர்தலை வலியுறுத்துதல், இன்னும் எத்தனையோ வழிகளில் நாம் போராடி வருகின்றோம். இருப்பினும் சரியான விளைவுகளை நம்மால் உருவாக்க முடியவில்லை. நாளுக்கு நாள் நிலைமை சீர்கெட்டுக் கொண்டே வருகின்றது. இங்குத்தான் நான் கொஞ்சம் வேறுபாடாக எண்ணிப் பார்க்கின்றேன். மற்றவர்களும் எண்ணிப் பார்க்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன். நம் வழ்க்கை உலகியலாக இருக்கின்றது. நம் கல்வியும் உலகியற் கல்வியாக இருக்கின்றது.

உலகியல் என்பது தன்முன்னேற்றம் இல்லையா? தன் முன்னேற்றம், விழிப்பாக இல்லாவிட்டால் பிறருக்குத் தீங்கு விளைப் பதாகவும் இருந்துவிடக்கூடும். இங்குதான் சிக்கல் தொடங்குகின்றது. பெரும்பாலோர் விழிப்பாக இருப்பதில்லை. நம் தேவைகளைப் பற்றி மட்டுமே எண்ணுகின்றோம். மற்றவர் களின் தேவை பற்றிய விழிப்புணர்வு நமக்கில்லை. ஆனால் மற்றவர்களோடு சேர்ந்து வாழும் வாழ்க்கையில் மற்றவர்களைப் பற்றி எண்ணும் இந்த விழிப்புணர்வு நமக்கு வேண்டும்.. கட்டயமாக வேண்டும்.

வாழ்க்கையைச் சமநிலைப்படுத்துவது இந்த விழிப்புணர்வுதான். வாழ்க்கையைப் பற்றிய விழிப்பு நிலையை உண்டாக்குவதே வாழ்வியற் கல்வி என்று நான் கூறுகிறேன், இது நடைமுறைக்குப் பொருந்தாது; மேற் கொள்ளக் கடினமானது. உடனடியான விளைவுகளை ஏற்படுத்தாது என்றுதான் பலரும் நினைக்கின்றனர்.

“நாம் எல்லாருமே குறையுள்ளவர்களாக இருக்கிறோம். மாந்த இயல்பே குறையுடையதாக இருக்கின்றது. நம் குறைகளிலிருந்து நாம் விடுபடுவது அவ்வளவு எளிதன்று. எப்படியோ குறைகளோடு காலத்தை ஓட்டிக்கொண்டு போனால் சரிதான்” என்பதே பெரும் பாலோரின் மனநிலையாக இருக்கின்றது.

மேலோட்டமாக இப்படியெல்லாம் நினைக்கும் நாம், வாழ்க்கையில் நமக்குத் தீங்கு ஒன்று ஏற்படும் பொழுது எப்படி நடந்து கொள்கின்றோம்? ஐயோ என்று அலறித் துடிக்கின்றோம்; தீமை செய்வது மாந்த இயல்பு என்று நினைத்தாலும், நமக்கெதிராக



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**தீமை என்பது வாழ்வின் இயல்பன்று. இயல்பு திரிந்த நிலை. வாழ்க்கையை அதன் இயல்போடும், வாழ வேண்டிய முறையோடும் வாழ்ந்தால் தீமையினின்று நாம் விடுபடலாம். இதை அறிவதே வாழ்வியற்கல்வி. இப்பொழுது வாழ்க்கை என்றால் என்ன என்று தெரியாமலேயே நாம் வாழ்கின்றோம்.**

இழைக்கப்படும் தீமையை நம்மால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

இன்னும் ஆழமாகப் பார்த்தால், இன்றைய வாழ்க்கை துன்பங்களும் துயரங்களும் அல்லல்களும் அவலங்களும் மிகுந்ததாய், வாழ்க்கையின் நற்கூறுகளையெல்லாம் சிதைத்தழிப்பதாய் இருக்கின்றதே. தீண்டாமை போன்ற ஒரு பெருங்கொடுமை சும்மா விட்டுவிட்டுப் போகக்கூடியதா?

பெண்களுக்கும், ஏன், குழந்தைகட்கும் இழைக்கப்படும் பாலியல் வன்கொடுமையையே எடுத்துக் கொள்வோம். நாகரிகமிக்க, ஒரு குமுகாயம் தாங்கிக் கொள்ளக் கூடிய ஒரு கொடுமையா இது? இது நடக்கலாமா? நடக்க விடலாமா? இவற்றையெல்லாம் தாங்கிக்கொள்ள முடியாத நாம், வாழ்க்கை தீமை இல்லாமல் நடக்க வேண்டும் என்று பொதுவாக விரும்பும் நாம், எப்படி வாழ்ந்தால் தீமை நிகழாமல் இருக்கும் என்பதைச் சிறப்பாக எண்ணிப் பார்க்கத் தேவை இல்லையா? இவ்வாறு எண்ணிப் பார்ப்பதையே வாழ்வியல் கல்வி என்று நான் கூறுகின்றேன்.

தீமை என்பது வாழ்வின் இயல்பன்று. இயல்பு திரிந்த நிலை. வாழ்க்கையை அதன் இயல்போடும், வாழ வேண்டிய முறையோடும் வாழ்ந்தால் தீமையினின்று நாம் விடுபடலாம். இதை அறிவதே வாழ்வியற்கல்வி. இப்பொழுது வாழ்க்கை என்றால் என்ன என்று தெரியாமலேயே நாம் வாழ்கின்றோம், நம் விருப்பு வெறுப்புகளையே வாழ்க்கையாகக் கொள்கின்றோம். எப்படி வாழ்ந்தால் நமக்கு நன்மை, நமக்குப் பயன் என்று நினைக்கின்றோமே தவிர, வாழ்க்கையைச் சரியாக வாழ வேண்டும், வாழ வேண்டிய முறைதெரிந்து வாழ வேண்டும் என்று நினைப்பதில்லை. வாழ்க்கையை வாழ வேண்டிய முறைப்படி வாழக் கற்றுக் கொடுப்பதே வாழ்வியற் கல்வி ஆகும்.

வாழ வேண்டிய முறை ஒன்றிருக்கின்றதா? ஆம் இருக்கின்றது. ஏனென்றால், மண்ணுலக வாழ்க்கை இங்கு தோன்றியுள்ள எல்லா மாந்தர்க்கும், எல்லா உயிர்கட்கும் உரியது. ஆகையால் எல்லாருக்கும் நல்லதாக அமையும் படி அதை நாம் வாழ வேண்டுமே. வாழ வேண்டிய முறை என்பது அதுவே. முறை என்பதும், ஒழுங்கு என்பதும் ஒன்றே. ஒழுங்கை அடிப்படையாகக் கொண்டு வாழும் வாழ்க்கையே சரியான வாழ்க்கையாக இருக்க முடியும்.

**ஏன் ஒழுங்காக வாழ வேண்டும்?**

ஒழுங்காக வாழ்ந்தால்தான் யாருக்கும் தீமையில்லாமல் வாழ முடிகின்றது. ஒழுங்கில் தான் நம் நலம் போலவே பிறர் நலமும் அடங்கியுள்ளது. நம் நலம், பிறர் நலம் இரண்டுக்கும் உரியதுதான் சரியான வாழ்க்கை. நம்மை, நம் நலத்தை முதன்மையாகக் கொள்ளாதபொழுதுதான் பிறர் நலத்தில் கவனம் செலுத்த முடிகின்றது.

தன்னையே முதன்மையாகக் கொண்டு வாழ்வது இவ்வுலகில் எல்லாவுயிர்க்கும் பொதுவானதோர் இயல்பாக இருக்கின்றது. மாந்தரும் அவ்வாறுதான் வாழ்கின்றனர். இந்த வாழ்க்கையில் பொதுவாக ஒழுங்கைப் பற்றியும் பிறர் நலம் பற்றியும் ஒருவர்க்குச் சிறிதும் ஈடுபாடு இருப்பதில்லை. அல்லது, ஒழுங்கு, பிறர்நலம் என்பவை தமக்கு எந்த அளவு பயன்தருமோ அந்த அளவோடு மட்டுமே அவர் நின்று கொள்கிறார். தன்னை முதன்மைப்படுத்தாமல் ஒழுங்கினையும் பிறர் நலத்தினையும் முதன்மைப்படுத்தும் ஈடுபாடு அல்லது வாழ்க்கை முறை அங்குக் காணப்படுவதில்லை. இந்த வாழ்க்கை முறை உடைத்தெறியப்பட வேண்டும்.

வாழ்க்கையைச் சரியாக வாழ வேண்டும் என்றால் சொந்த விருப்பு வெறுப்புகளைக் கடந்து வாழ்க்கையைப் பொதுவாகப் பார்க்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்படிப் பார்க்கும் பொழுதுதான் வாழ்க்கையைப் பற்றிய உண்மைகள் நமக்குப் புலப்படும். முதலில் எதையும் உள்ளது உள்ளபடி பார்ப்பது மிக இன்றியமையாதது. இவ்வாறு பார்க்க வேண்டுமென்றால் சொந்த விருப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுப்புகட்கும், ஏற்கெனவே நாம் கொண்டிருக்கும் கருத்துகட்கும் இடம் கொடுத்தல் கூடாது. நம்மைச் சுற்றி நடந்துவரும் வாழ்க்கையையும், வாழ்க்கைக்கு அடிப்படையான இயற்கையையும் இப்படியே உற்றுநோக்குதல் வேண்டும். வாழ்க்கை எப்பொழுது அழகுடன் விளங்குகின்றது? எப்பொழுது அது துன்பத்தில் தள்ளப் படுகின்றது? வாழ்க்கை எங்கே மேம்பட்டு நிற்கின்றது? எங்கே தாழ்வுபடுகின்றது? என்பவற்றையெல்லாம் உற்று நோக்கித் தெளிதல் வேண்டும். இப்படியெல்லாம் பார்க்கையில், அன்பு வாழ்க்கையை அழகுபடுத்துவதையும், தன்னலம் அதன் அழகை அழிப்பதையும் காணலாம்.

எல்லாரும் இணக்கமாகவும் மகிழ்ச்சி யாகவும் வாழவேண்டிய வாழ்க்கைக்கு அன்பே உயிர் நிலையாகவும், அன்பின்மை தடை யாகவும் இருப்பதைக் காணலாம். அது போலவே எங்கு மாந்தன் தன்னை முதன்மைப் படுத்துகின்றானோ அங்குத் தீமையின் வித்து ஊன்றப்படுவதையும், தன்னைக் கடந்து பிறர்பால் ஈடுபடுகின்றானோ அங்கு வாழ்வின் மலர்ச்சிக்கான வித்து ஊன்றப்படுவதையும் காணலாம்.

அதுபோலவே, வாழ்க்கையின் இயக்கம் ஒழுங்கென்னும் நேர்கோட்டில் நடக்கையில் எல்லாம் சிறப்பாக அமைவதையும், ஒழுங்கினின்று சிறிது பிறழ்ந்தாலும் தீமை உள்ளே புகுந்துவிடுவதையும் காணலாம்.

படிப்பவர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே ஒரே செய்தியை பல கோணங்களிலிருந்தும் திரும்பத் திரும்பக் கூறியுள்ளேன்.

என் விருப்பமெல்லாம் இதுதான். நம் கல்வி வாழ்வியற் கல்வியாக மாற்றி அமைக்கப்படல் வேண்டும். குமுகாய அக்கறை உடையவர்கள் தங்கள் பல்வேறு நடவடிக்கை களின் நடுவில் வாழ்வியற் கல்வியையும் ஓர் இயக்கமாக மக்களிடம் முன்னெடுத்துச் செல்லுதல் வேண்டும்.

மாந்தன் மீது மாந்தன் தன்னலமற்ற அன்பு செலுத்துவதே முதன்மையானது என்பதை அடிப்படையாகக் கொண்டே நம் கல்வித் திட்டங்கள் உருவாக்கப்பெறல் வேண்டும். வாழ்க்கையை அன்போடு வாழ்வதற்குரிய நடைமுறைப் பயிற்சியாகக் கல்வி அமைதல் வேண்டும்.

ஒரே வரியில் கூறினால் தன்னலத்தினின்று மாந்தனை விடுவிப்பதே வாழ்வியற்கல்வி. கல்லூரி, பள்ளிப் பாடங்களின் மூலம் அவனுக்கு வழங்கப்படும் பல்துறை அறிவு, ஆய்வுத்திறன், அறிவியல், தொழில்நுட்ப அறிவு, கலை, இலக்கியம், மெய்யறிவு யாவற்றோடும் தன்னலமின்மையையும் பாடமாகக் கற்றுக் கொடுத்தல் வேண்டும். ஏனெனில் எல்லா அறிவும் திறமையும் ஆற்றலும் அவன் மாந்தப் பண்பு உடைய மாந்தனாக வாழத் துணை புரிவதற்காகவே. அவனது எல்லா வகையான நாகரிக, அறிவியல், தொழில்நுட்ப முன்னேற்றமும் அவன் சிறந்த தொரு மாந்தனாக இம்மண்ணில் வாழ்ந்து எல்லா வகையிலும் வாழ்க்கையை மேம் பாடடையச் செய்வதற்குத்தான். இன்றைய மாந்தன் அன்பற்ற, தன்னலமிக்க மாந்தனாக இருந்து கொண்டு அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் ஈடுபடுவது எவ்வளவு பெருந் தீமைகளை விளைத்துக்கொண்டு வருகின்றது என்பதை ஒவ்வொரு நாளும் கண்டுகொண்டு வருகின்றோமே. மாந்தனைக் காட்டு விலங்காண்டியாக்கும் சாதி, மத, இன வெறிகள் தாமே இன்று போர்கட்கும், இனப்படுகொலைகட்கும், மதக்கலவரங் கட்கும், பாலியல் வன்கொடுமைகட்கும் காரணமாக நிற்கின்றன. இவற்றையெல்லாம் கண்டபின்னும் தன்னை முதன்மையாகக் கொள்ளாமல், தன்னலச் செயல்களில் ஈடுபடாமல் அன்பையே முதன்மையாகக் கொண்டு வாழக் கற்றுக்கொடுக்கும் வாழ்வியற் கல்வியை நடைமுறைக்குக் கொண்டுவர ஏன் தயங்குதல் வேண்டும்?

எனவே. வாழ்வு தீமையற்றிருப்பதை விரும்பும் நாம் ஒவ்வொருவரும் வாழ்வியற் கல்வியை ஓர் இயக்கமாக முன்னெடுத்துச் சென்று மக்களிடையே பரப்புதல் வேண்டும். அங்கங்கு வாழ்வியற் கல்வி மையங்களை ஏற்படுத்தி இளைஞர்கட்கு வாழ்க்கைப் பயிற்சி வழங்குதல் வேண்டும். இனவெறி, சாதிவெறி, சமயவெறி, நிறவெறி, மொழிவெறி யாவுக்கும் காரணம் அன்பின்மையே, தன்னலமற்ற அன்பை உள்ளத்தில் வளர்த்துக் கொண்டால் இத்தீமைகளின்று விடுபட முடியும் என்பதை மக்கட்கு எடுத்துரைப்போம். உண்மை உணர் பவர்கள் அங்கங்கு தத்தம் அளவில் வாழ்வியற்கல்வி மையங்களைத் தொடங்கு வோம். வருங்கால இளைஞர்களை அன்பு நெறியில் உருவாக்குவோம்.■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காக்கைகள்

மூன்றிலின் முன் மின் கம்பத்தில் அமர்ந்து
சொற்களை உதிரத்தன. காக்கை
அவரவர் மன மொழிகளை சேகரித்து
அர்த்தப்படுத்திக் கொண்டார்கள்.
உதிர்ந்த சொற்கள் பொருளற்றவையாய் போயின.
தனித்து நிலமெங்கும் அநாதையாய் திரியும் சொற்கள்
நான்கு சக்கர வாகனத்தில் விபத்துக்குள்ளாகி
மரித்துப் போனது
108க்கும் வக்கற்ற அச்சொல்லின் ஆன்மா
பெருவெளியில் அலைகின்றது.

காந்தி சாலையின் தொடக்கத்தில் இருக்கும்
மதுபானக்கடையில் சிந்தும்
நெய்தல் மீன் முள்ளுக்காகவும்
வயல்வெளியில் திரிந்த கோழியின் எலும்புக்காகவும்
சிறகில் வியர்வை ஒழுக பறந்து வந்திருக்கிறது காக்கை
சிதறிக் கிடந்தவற்றை கொத்தாமல்
அவர்கள் வீசியெறிந்த பறையன் காக்கா என்ற சொல்லில்
அடிபட்டு நொண்டத் தொடங்கியது.
காக்கை குருவிகள் எங்கள் சாதி என்ற வரியில்
காக்கை என்ற சொல் பறந்து போய்க் கொண்டு இருந்தது.

சாலையில் செத்துக் கிடப்பவற்றை சுத்தம் செய்தும்
கைப்பிடிச்சுவரில் வைக்கும் பருக்கைகளைக் கொத்தியும்.
கூடி ஒப்பாரி வைத்துக் கொண்டும்.
தாகத்துக்காக கூழாங்கற்களை குடித்தும்
நரியிடம் பாட்டுப் பாடிக்கொண்டும் இருக்கும் காக்கைகள்
கலிங்கத்துப் பரணியிலிருந்து பறந்து வந்த
வெண் காகத்தை பார்த்து வியப்புற்றன.
கத்திக்கொண்டே இருப்பதில் ஒருபயனும் இல்லை
போர் வேண்டும் என்றது வெண் காகம். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம் முரளி

சிறுகதை

# தொலைந்து போனவன்


கடைசியாக ஒருமுறை கேட்டுப் பார்த்தால் என்னவென்று தோன்றியது கிரிதரனுக்கு. அவனது உடலில் பசியின் வலி முழுக்க பரவியிருந்தது. கைக்கால்களில் சற்று முன்பு பெய்திருந்த மழையின் ஈரம் அப்பியதில், அவை விறைத்துக்கொண்டு நின்றன. வயிறு உள்பக்கமாக ஒடுங்கிக்கொண்டே போனது. நேரமாக நேரமாக மனம் என்னவெல்லாமோ கற்பிதம் செய்து கொண்டது. சாலையில் அவனைக் கடந்து செல்லும் ஒவ்வொருவரும் ஏதோ சவஊர்வலத்தில் செல்வதைப்போல சாவகாசமாக சென்று கொண்டிருந்தது மேலும் அச்சத்தை கிளறியது. உயிர் மெல்ல பிரிந்து கொண்டிருக்கிறதோ என்றுகூடத் தோன்றியது.

தொலைவில் சண்முகம் அண்ணனின் டீக்கடையில் இப்போது கூட்டம் அமோகமாக கூடியிருந்தது. முன்பே இரண்டுமுறை 'ஒரேயொரு குவளை தேநீர் கடனாகக் கொடுங்க, பொழுதுக்குள் சில்லரைக் கொடுத்துடுறேன்' என்று எவ்வளவோ கேட்டுப்பார்த்தும, சண்முகம் அண்ணன், 'காசிருந்தா வா, கடன் மட்டும் கேக்காத'ன்னு ஒரேயடியாகச் சொல்லிவிட்டார். பசி அறியாது வளர்ந்தவர். தனது அப்பாவின் நிழலில் தவழ்ந்து எழுந்தவர். அதனால் உத்தரவுகள் மட்டுமே போடத் தெரியும். கோரிக்கைகளுக்கு அவரிடம் இடமில்லை.

டீக்கடையை மொய்த்துக் கொண்டிருந்த கூட்டத்தை தனது துவண்டு நடுங்கும் கால்களை ஊன்றி ஒருமுறை எக்கி நின்று பார்த்தான் கிரிதரன். இப்போது கேட்டுப் பார்ப்பதில் தப்பில்லை என்று தோன்றியது அவனுக்கு. கொடும் பசி எப்போது இயல்பை புரிந்து கொள்கிறது. கிரிதரன் டீக்கடையை நோக்கி நகரத் தொடங்கினான். ஏனோ சாலை நீண்டு கொண்டே போவதாக ஒரு நொடித் தோன்றியது. சொர்க்கத்துக்குச் செல்லும் வழி இல்லை நரகத்துக்குத் தாவி ஓடும் பாதை. எதுவானாலும் போராடிப் பார்த்துவிடுவதென்று முடிவு செய்திருந்தான். பசியை விடவும் பெரிய போராட்டம் எதுவாக இருக்க முடியும்?

'அண்ணே, ஒரேயொரு கிளாஸ் டீ கொடுங்க... கொஞ்ச நேரத்துல காசு கொடுத்துடுறேன்.' உடலில் பரவியிருந்த பசியின் வலி, இப்போது முகத்துக்கு ஏறியிருந்தது.

'ஏம்பா...சொன்னா புரிஞ்சுக்கவே மாட்டியா எத்தன தடவ சொல்றது... காசிருந்தா வா இல்லன்னா நடைய கட்டு.. சும்மா காலைலயே கழுத்த அறுக்காதே.'





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அறுபடுவது கிரிதரனின் கழுத்துதான் என்றாலும், செயற்கை வலியை சண்முகம் அண்ணன் கக்கிக் கொண்டிருந்தார். கையில் காசில்லாதவனுக்கு ஒரு கிளாஸ் டீக்கூட கருணை காட்டுவதில்லை. கிரிதரன் உடல் கூச சில நொடிகள் அவர் முகத்தைப் பார்த்து அங்கேயே நின்றிருந்தான். சிறிதளவு கருணை, மெல்லிய சிரிப்பு, குறைந்தபட்சம் பொய்யான அன்பு என கிரிதரன் எதிர்பாராத எதுவுமே அவரது முகத்தில் இல்லை. நேரமாக நேரமாக கடுமைதான் கூடிக்கொண்டே போனது. இனிமேலும் அங்கு நிற்பதில் அர்த்தமில்லை என்பதை உணர்ந்த கிரிதரன் மெல்ல அங்கிருந்து நழுவ முற்பட்டபோது, அவனது முதுகுக்குப் பின்னாலிருந்து ஒரு குரல் அவனை தழுவி நிறுத்தியது.

“யாரது...நம்ம கிரிதரனா....?”

ஏதோவொரு இனம் புரியாத உள்ளக் கிளர்ச்சி அந்நொடியில் கிரிதரனின் மனதில் பற்றிக்கொண்டது. வெகு காலத்திற்குப் பிறகு, தனது பெயரை யாரோ கூவி அழைத்தது அவனது காதுகளில் சக்கரையாக இனித்தது. அதுவும் உறவற்ற இந்த ஊரில் நிச்சயமாக அந்தக் குரல் அழைப்பது தன்னைத்தான் என்று மீண்டும் மீண்டும் மனதில் சத்தியம் செய்து கொண்டான். அவனுக்குப் பின்னால் நாற்பதை நெருங்கும் வயதுடையவர் ஒருவர் நின்றிருந்தார். பார்த்ததும் சட்டென்று அவரது உருவத்தை நினைவுக்குள் கொண்டுவர முடியவில்லை என்றாலும் அவருக்குத் தன்னைத் தெரிந்திருக்கிறது என்பதே பேச்சுக் கொடுக்க போதுமானதாக இருந்தது.

“ஆமாங்க கிரிதரன்தான் நீங்க யாருன்னு சட்டுன்னு பிடிபடலையே...” கண்களை விரித்து நெளித்து பார்த்தும் அவனால் ஒரு தீர்மானத்துக்கு வரமுடியவில்லை.

“என்ன தெரியலையா...? நாந்தாம்பா வரதராஜன். அய்யாகிட்ட நீ வேலை செய்யும்போது அவர பாக்க அடிக்கடி வருவேனே...”

கிரிதரனுக்கு சட்டென்று நினைவுகள் சுழலத் துவங்கின. நெற்றியில் அப்பிக் கிடந்த விபூதிப் பட்டையும், காதுகளில் புடைத்துக் கொண்டு நின்ற மயிரும், உடைந்து ஒழுகும் அவரது குரலும் கிரிதரனுக்கு பரீட்சயமானது தான் என்றாலும் முகம் சரியாக இனம் கண்டுகொள்ள முடியாததாக இருந்தது. சர்வ நிச்சயமாக மனித இனம்தான் என்பதில் மட்டும் சந்தேகமில்லை. ஒருவேளை பசியால் கண்கள் இருட்டிக் கொண்டிருக்கலாம்.

“சார்.. உங்கள சரியாக அடையாளம் தெரியல. ஆனா பார்த்த மாதிரித்தான் இருக்கு. தப்பா எடுத்துக்காதீங்க...பசி வயித்த கிள்ளுது. ஒரேயொரு டீ வாங்கிக் கொடுங்களேன்...”

கிரிதரன் இப்படி சட்டென்று கேட்டு விட்டதில் வரதராஜனுக்கு சங்கடமாகி விட்டது. அவன் கையை இறுகப் பற்றியவர்,

‘வாப்பா டிபன் சாப்பிடலாம்...’ என்று சொல்லி இழுக்கவும், கிரிதரனுக்கு மனம் கனத்து கண்களில் ஈரம் கசிந்தது. எதுவும் பேசாது அவர் கைச்சூட்டில் முழுவதும் கரைந்து அவர் பின்னாலேயே சென்று கொண்டிருந்தான். சில்லறையற்று நின்று கொண்டிருந்த தனக்கு சாப்பாடு வாங்கிக் கொடுக்க முன்வருகிறாரே என்று அவர் மீது அன்பு பொங்கியது. உயிர்த்தெழுதல் என்பது இதுதானோ?

ஓலைக் கூரையால் வேயப்பட்டிருந்த ஒரு சிறிய ஹோட்டலை இருவரும் அடைந்தார்கள். சூடாக நான்கு நான்கு இட்லிகள் இருவருக்கும் பரிமாறிப்பட்டது.

**அந்நாட்களில் அய்யாவைத் தேடி பலரும் அவரது வீட்டுக்கு வந்து செல்வதுண்டு. இலக்கியம் குறித்து உரையாடவும், தங்களை உரமேற்றிக் கொள்ளவும் அடிக்கடி இப்படி வருவார்கள். பொழுதுகளற்று நீளும் உரையாடல்கள் அவை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிதரன் நொடியும் தாமதிக்காமல் இட்லியைப் பிய்த்துத் தின்னத் துவங்கினான்.

'எவ்ளோ நாளாப்பா...இந்த ஊர்ல இருக்க...?'

'அது சரியா தெரியலைங்க...ஆனா ரொம்ப நாளா இங்கதான் இருக்கேன். அய்யா போனதுக்கு அப்புறம் நமக்கு அந்த ஊர்ல எந்த வேலையும் இல்லையே. அவர விட்டா நமக்கு வேற நாதி? அதான் அப்படியே இந்த பக்கமா ஏதாவது செஞ்சு பொழப்ப ஓட்டலாம்னு வந்துட்டேன்.'

'அதுவும் சரிதான். அய்யாவ விட்டா அங்க பொழைக்க வேறு வழி ஏது?

நீ ஒரு நாவல் எழுதணுமுன்னு சொல்லிக்கிட்டு இருந்தியே. அது எந்த நிலைல இருக்கு..?'

வரதராஜன் இப்படிக் கேட்டதும்தான் அவரை யாரென்று கிரிதரனால் சரியாக நினைவுப்படுத்திக் கொள்ள முடிந்தது. வியர்வையில் ஊறிய விபூதி அலங்கரிக்கும் அதே வட்ட முகம். கூரிய கண்கள், மயிர்கள் அடர்ந்த கைகள். நிச்சயமாக அவரேதான்.

கிரிதரன், முன்பு அய்யாவிடம் வேலை செய்து கொண்டிருந்தான். அய்யா ஒரு எழுத்தாளர். மனிதநேயம் மிக்க கதைகள் அவருடையவை. ஆளும் மனிதர்களை மதிக்கத் தெரிந்தவர்தான். அதனால்தான் தினசரி பத்திரிகையொன்றில் மாதம் ஐந்நூறுக்கு வேலை பார்த்துக் கொண்டிருந்தவனை அழைத்துத் தன்னுடனேயே வைத்துக் கொண்டார். அவருக்கு வயது எழுபதை நெருங்கிக் கொண்டிருந்ததால், விரல்கள் அவருக்கு இசைவு காட்ட மறுத்தன. அதனால் தான் இப்படியொரு ஏற்பாடு. அய்யா சொல்லச்சொல்ல கிரிதரன்தான் அதனை எழுதிக் கொண்டிருப்பான். அய்யாவின் புகழை உயர்த்திய பல கதைகளுக்கு உயிரூட்டியவன் கிரிதரன்தான்.

அந்நாட்களில் அய்யாவைத் தேடி பலரும் அவரது வீட்டுக்கு வந்து செல்வதுண்டு. இலக்கியம் குறித்து உரையாடவும், தங்களை உரமேற்றிக் கொள்ளவும் அடிக்கடி இப்படி வருவார்கள். பொழுதுகளற்று நீளும் உரையாடல்கள் அவை. அவர்களில் வரதராஜனும் ஒருவர். எப்போதுமே அவரது நெற்றியில் விபூதி அப்பியிருக்கும். கண்களில் ஒரு திராட்சை, ஒரு ஒளி. பேச்சில் பணிவு, அய்யாவுக்கு வரதராஜனை ரொம்பவும் பிடிக்கும். நிறையவே சொல்லி இருக்கிறார் கிரிதரனிடம். 'ரொம்ப நல்லவன்டா..'

நாட்கள் ஓட ஓட அய்யாவுக்கு உடல்நிலை ரொம்பவும் மோசமாகிக் கொண்டே இருந்தது. படுக்கையை விட்டு அவர் எழுவதே நிச்சயமில்லாமல் இருந்ததால் தன்னை அண்டி வாழும் கிரிதரனுக்கு ஏதேனும் செய்துவிட வேண்டுமென்று தீர்மானமாய் இருந்தார். அந்நாட்களில் அய்யாவைத் தேடி வருபவர்களின் எண்ணிக்கையும் குறைந்துகொண்டே போனது.

எழுத்தாளர்களின் இறுதிக்கால பேச்சை யார்தான் கேட்டுக் கொண்டிருக்க முடியும், அதனால் திடீரென்று ஒருநாள் வரதராஜனை அவசரமாக அழைத்து,

"கடவுள நெருங்குற நாள் வந்துடுச்சுன்னு நினைக்கிறேன். நிறைய எழுதிட்டேன். இப்போ ரொம்ப களைப்பாக இருக்கு. நான் போறதுக்குள்ள இவனுக்கு ஒரு நல்லது பண்ணிடணும்னு பிரியப்படுறேன். வரதா நீதான் பாத்துக்கணும் இவன. நாவல் ஒன்னு எழுதி வச்சிருக்கான்...ரொம்ப நல்லா வந்திருக்கு." 'வேடிக்கை மனிதர்கள்'ன்னு தலைப்பு. இன்னும் ஒன்னும் எழுதிக்கிட்டு இருக்கான். யாரையும் இப்ப என்னால நம்ப முடியல. தேடிப் போகவும் கூச்சமா இருக்கு. அதான் உன்கிட்ட சொல்றேன்..ஏதாவது பண்ணு.."

அய்யாவின் குரல் தழுதழுத்தது. வார்த்தைகள் வறண்டு காற்று மட்டுமே நொடிக்கொருதரம் வெளியேறிக் கொண்டிருந்தது.

"நம்ம கிரிய நான் பாத்துக்குறேன் அய்யா. நீங்க ஏன் விசனப்படுறீங்க. உடம்ப பாத்துக்கோங்க" என்று சொல்லி அய்யாவின் கைப்பிடியிலிருந்து நழுவிய வரதராஜன், கிரிதரனை நெருங்கி,

"அய்யா எல்லாத்தையும் சொல்லி யிருக்கார். நீ ஒன்னும் கவலப்படாத.. நான் பாத்துக்குறேன், அய்யா கண்ண மூடுறதுக் குள்ள புக்க நாம பப்ளிஷ் பண்ணிடுவோம்" நம்பிக்கை சொட்ட இதமாகப் பேசி கிரிதரனின் எழுத்தை வாங்கிக் கொண்டார்.

அய்யா கிரிதரனை வரதராஜனின் பொறுப்பில் ஒப்படைப்பதற்கும் காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. வரதராஜனுக்கு பல பதிப்பாளர்களிடம் நேரடி பரிட்சயமிருந்தது. மேலும் கிரிதரன் அறிமுக எழுத்தாளன் என்பதால் அவனுக்கு அதிக சிரமம் கொடுக்க அய்யா விரும்பவில்லை.

அதன்பிறகு ஓரிரு நாட்களிலேயே அய்யாவின் மூச்சு அடங்கிவிட்டது. இறுதிக் கூட்டத்தில்கூட வரதராஜனைப் பார்த்ததாக கிரிதரனுக்கு நினைவில்லை. வெகுநாட்களுக்குப் பிறகு அவனுடைய 'வேடிக்கை மனிதர்கள்' அச்சாகிவிட்ட செய்தி அவனுக்கு வந்து சேர்ந்தது. எழுதியது - வரதராஜன். கிரிதரனிடமிருந்து வார்த்தைகள் விலகி ஓடின. மனதில் வெறுமை அப்பிக் கொண்டது. அன்றோடு அவ்வூரிலிருந்து கிளம்பியவன்தான். அதன்பிறகு அந்தப் பக்கம் தலையைக்கூட காட்டவில்லை.

தனக்கு எதிரில் அமர்ந்திருந்த வரதராஜனின் முகத்தை ஒருமுறை கண்களால் துழாவிப் பார்த்தான் கிரிதரன். அதில் போலித்தனம் நிரம்பிக்கிடந்தது. கண்களில் ஒரு வன்மம். கறுத்த அவனது உதட்டில் பொய் ஊறிக் கொண்டிருந்தது.

"எவ்வளவோ முயற்சி செஞ்சுப் பார்த்தேன் கிரி..என்னால அந்த நாவல அச்சுக்கு கொண்டு வரவே முடியல...அய்யா வேற உன்ன எப்படியும் கரை சேர்த்தே ஆகணும்னு சொல்லிட்டார். நீ பாட்டுக்கு பொட்டுன்னு சொல்லாம கொல்லாம போயிட்ட...சரி விடு. கிரி பழைய கத இப்போ எதுக்கு. அதான் என்ன பாத்துட்டல்ல. புதுசா எதுவும் எழுதியிருந்தா எடுத்துட்டு வா..உடனே பப்ளிஷ் பண்ண ஏற்பாடு செய்திடலாம்"

கிரிதரனுக்கு நெஞ்சு அடைத்துக் கொண்டு வந்தது. வியர்வை திரண்டு உடலுக்குள் வழிந்து, மனம் வெடவெடக்க மெல்ல அங்கிருந்து எழுந்தவன்,

'இதோ வந்துடுறேன் அண்ணா' என்று சொல்லிக்கொண்டே அந்த ஹோட்டலிலிருந்து வெளியேறினான்.

தனது அடுத்த நாவலுக்கு கணக்குப் போட்டவனாய், நரி சிரிப்புடன் நீண்ட நேரம் அதே இடத்தில் அமர்ந்திருந்த வரதராஜனுக்கு இறுதியில் ஏமாற்றமே மிஞ்சியது. கிரிதரன் மீண்டும் அங்கு வரவேயில்லை. அவன் அவ்வூரிலிருந்து என்றென்றைக்குமாக எப்போதே விடைபெற்றிருந்தான். ■

## காக்கையின் கோரிக்கை




**காக்கைச் சிறகினிலே இதழுக்கு படைப்புகள் அனுப்புவோர் கவனத்திற்கு:**

படைப்பாளிகள் பக்க வரையறையைத் தீவிரமாகக் கவனத்தில் கொள்க. உங்கள் படைப்பு ஐந்து பக்கங்களுக்கு மிகாமல். (ஏறக்குறைய 750 வார்த்தைகள்) கணினி அச்சில் இருத்தல் அவசியம்.

படைப்புகளை எழுத்துப்பிரதியாக அனுப்புவதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம். யுனிகோட் எனப்படும் ஒருங்குறி எழுத்துருவில் கணினி அச்சு செய்து அனுப்பவும். படைப்புகளை அனுப்புவோர் தங்களுக்கான பிரதியை வைத்துக் கொள்ளவும். வெளியிடுவதற்குத் தேர்வு பெறாத படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது.

உங்கள் படைப்பு வெளியிடுவதற்குத் தேர்வு பெற்றதா, இல்லையா என்பது குறித்து, படைப்பை அனுப்பிய ஒரு மாத காலத்திற்குப் பிறகு, தொலைபேசியில் (9841457503) தொடர்பு கொண்டு கேட்டறியலாம்.

கவிதை, சிறுகதை, கட்டுரை என உங்கள் படைப்பு எதுவாயிருப்பினும், நீங்களே ஓரிரு முறை படித்துப் பார்த்து, ஒற்று உள்பட மெய்ப்புத் திருத்தி அனுப்புமாறு கோருகிறோம்.

படைப்பை ஏற்பதும் நிராகரிப்பதும் ஆசிரியர் குழுவின் இறுதி முடிவுக்கு உட்பட்டது என்ற இதழியல் உலகின் மரபையும் ஜனநாயகத்தையும் மதித்துப் போற்றும் பண்பாடு நிறைந்தவர்கள் படைப்பாளிகள் என்று காக்கை முழுமையாக நம்பிக்கை கொள்கிறது.

இதழ் குறித்த தங்களது கருத்து அல்லது விமர்சனத்தை ரத்தினச் சுருக்கமாக அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். 60 முதல் 100 வார்த்தைகளுக்குள் இருத்தல் நலம். அதிகமானவர்களின் கருத்துகளை வெளியிடுவதற்கு இது உதவியாக அமையும்.

பிரபல சிற்றிதழ்கள் போல, விரிந்த கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளத்துடன் இயங்கும் நிலையில் காக்கை இல்லை. வெகுசில தன்னார்வலர்களின் கூட்டு முயற்சியில் இந்த இதழ் வெளிவருகிறது. முன்னும் பின்னும் அறிந்து ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பை அளிக்குமாறு படைப்பாளிகளையும் வாசகர்களையும் காக்கை நிமிர்ந்து கோருகிறது.

- ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மக்கள் சங்கமித்த பெருவிழா

பிரான்ஸ் சிலம்புச் சங்கம் ஏற்பாட்டில் 19.01.2014 அன்று நடாத்தப்பட்ட எட்டாவது புலம்பெயர் தமிழர் திருநாள் நிகழ்வு, பாரிஸ் பெரு நகர மையத்தினுள் அமைந்திருக்கும் மண்டபத்தில் அரங்கம் நிறைந்த மக்களுடன் நடைபெற்றது. புலம்பெயர் வாழ்வில் எமது அடுத்த தலைமுறையினருக்கு நாங்கள் யார் என்பதை அடையாளப்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. நிகழ்வரங்கை புலம்பெயர் இளந் தலைமுறையினரான திருமதி பிறெஸ்காவும் செல்வி கஜீதாவும் தமிழிலும் பிரஞ்சிலும் தொகுத்து வழங்கினர்.

இந்நிகழ்விற்குச் சிறப்பு அகதிகளாக, புகழ்பெற்ற இலங்கை வானொலி தமிழ் அறிவிப்பாளர் பிஎச். அப்துல் ஹமீத், சுவீடன் கீழத்தேய மத வரலாற்றுத்துறைப் பேராசிரியர் பீட்டர் சல்க் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மங்கள விளக்கேற்றல், அமைதி வணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. அரங்க வெளி முற்றத்தில் அழகான கோலப் பின்னணியில் அடுப்பு வைத்து விறகிட்டு தீ மூட்டி மட்பானையில் பொங்கல் நிகழ்வை தொடக்கி வைத்தார் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட பேராசிரியர் பீட்டர் சல்க். சென்ற ஆண்டு திருக்குறளில் உறுதிப்பிரமாணமெடுத்து தம் வாழ்வை இணைத்துக்கொண்ட தர்சன் ஜனனி என்னும் இளம் இணையர்கள் பொங்க, குழுமியிருந்த கலைஞர்கள் தமிழர்களின் பாரம்பரிய இசைக் கருவியான பறையடித்து முழங்க ஆடல் பாடலாக வெளியரங்கம் களைகட்டியது. பிரான்சுப் புலம்பெயர்வு வாழ்வின் பொது நிகழ்வொன்றில் எமது தொன்ம வாத்தியமான பறை முழங்கிய முதல் நிகழ்வாகி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரையும் ஈர்த்துக்கெண்டது. பிரான்சு கலைஞர்களுடன் இலண்டனிலிருந்து வருகை தந்திருந்த சந்தோஷ் குழுவினரும் தமிழர் ஆடைகளுடன் பறையிசை முழக்கம் செய்தனர். இவர்களுடன் முன்னைநாள் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக நுண்கலைப் பீடாதிபதி பாலசுகுமார் அவர்களும் இணைந்துகெண்டு பறை வாத்திய இசையின் அருமையையும் தொன்மையையும் விபரித்து பறையை இசைத்தது சிறப்பாக இருந்தது. இவர்களுடன் மக்களும் கலந்து ஆடிப் பாட, குதிரையாட்டக் கலைஞர்களும் இணைந்துகொள்ள பல்லின பல்தேசியப் பார்வையாளர்களுடன் வெளியரங்கம் குதூகலித்தது. 160 ஆண்டுப் புலம்பெயர் நீட்சியின் குவாதூப் வழி வந்த தலைமுறை பெண் கலைஞர்கள் குதிரையாட்டத்தில் ஈடுபட்டது மிகச் சிறப்பாக இருந்தது. அத்துடன் குவதூலூப் வழி வந்த ஐந்தாம் ஆறாம் தமிழ்த் தலைமுறையினைச் சேர்ந்த அந்தப் பெண்ணின் தெருக்கூத்து வடிவிலான ஆடல் அரங்கம் மறக்கப்பட முடியாத ஒன்றாக அமைந்திருந்தது. கால நீட்சியில் மூல அடையாளக் குறியீடாக இவர்களின் இந்நிகழ்வு அரங்கில் அதிர்வுகளை கிளறிவிட்டுள்ளது. பிரான்சின் லில் நகரில் வசிக்கும் தமிழ்ப் பண்பாட்டு ஆர்வலரும் செயற்பாட்டாளருமான விஜயரங்கன் (சாம் விஜய்) அவர்களின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு அரங்கேறியது.

இவ்வரங்கின் சிறப்பை மெய்ப்பிக்கும் வகையில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பிரஞ்சு நாடாளுமன்ற நகரசபை உறுப்பினர்களும் மற்றும் பல்வேறு நாடுகளின் தூதுவர்களும், முக்கியத்துவம் வாய்ந்தவர்களும் தமது வாழ்த்துச் செய்தியை இவ்வரங்கிலேயே நிகழ்த்தி மகிழ்ச்சியைப் புலப்படுத்தினர்.

இதேவேளையில், உள்ளரங்கில் தமிழர்களின் பாரம்பரியப் பண்பாட்டை எடுத்துக் காட்டும் வகையிலான இசைக் கருவிகள், நூல்கள், பாவனைப் பெருட்கள், உணவு வகைகள் என காட்சியரங்குகள் அமைக்கப் பட்டு இருந்தன. இதில் இங்குள்ள பல்கலைக் கழகங்களில் கல்வியைத் தொடரும் அடுத்த தலைமுறையினரது ஏற்பாட்டில் வரலாற்றுத் தொடரில் தமிழை வாழ்வாங்கு வாழ வைத்த பெருமைக்குரியவர்களான வீரமா முனிவர், கால்டுவெல், வைத்தியர் கிறீன், சி வை தாமோதரம்பிள்ளை, தனிநாயகம் அடிகளார் தொடர்பான விபரண அரங்கத்தை நிகழ்த்தினர்.

காட்சியரங்கம். புலம்பெயர் வாழ்வில் வாரிசுகளாகி எம்முடன் வளரும் சிறார்கள் எமது பண்பாட்டு ஓவியக் கலைக்கூடத்திலும், கோலமிடல் போட்டியிலும் உற்சாகமாகப் பங்கேற்றது மிகுந்த நம்பிக்கையுடன் மகிழ்வைத் தந்தது. எமது வளரும் புலம்பெயர் வாரிசுகளுக்கு எம் பாரம்பரிய உணவுகளின் பெயர்கள் தொடர்பான புரிதலைப் பரிசோதிக்கும் வகையில் பி. எச். அப்துல் ஹமீத் அவர்களால் திடீரென நிகழ்த்தப்பட்ட போட்டியில் பலரும் கலந்துகெள்ள ஆர்வம் காட்டினர். உணவுக் கண்காட்சியில் இடம்பெற்ற தமிழர் பாரம்பரிய உணவுகளை விருப்பத்துடன் 25 தமிழ்ப் பெண்கள் தயாரித்தளித்து சிறப்பித்திருந்தனர்.

மதிப்புக்குரிய தமிழ் வானொலி அறிவிப் பாளர் அப்துல் ஹமீது கைபிடித்து எமது சிறார்கள் அகரம் எழுதிய காட்சி தமிழர் திருநாள் நிகழ்வின் சிகரமாக அமைந்திருந்தது. அரங்கத்தினுள் பல் வயதையும் கொண்ட ஆண்களில் பலரும் வேட்டி சட்டையுடன் எமது கலாச்சாரத்தை விளக்கும் வகையில் வலம் வந்தனர். கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுவானவர்கள் எனப் பலரையும் சந்தித்து உரையாடக்கூடியதாக இருந்தது. பொது அரங்கில் எமது பெண்கள் தமக்கான பாரம்பரிய ஆடைகளுடன் காணப்படுவது சாதாரணமான தொன்று. ஆயினும் இங்கு சிறுபிராயத்திலிருந்து முதியோர் வரை முகமலர்ச்சியுடன் வலம் வந்ததைப் பதிவிடாதிருக்க முடியாது.

வெளி அரங்கிலிருந்து குதிரை ஆட்டக் கலைஞர்கள் முன் செல்ல பறை வாத்தியக் கலைஞர்கள் முழக்கமிட்டு அணிசேர்க்க பொங்கிய பானையை இளம் இணையர்கள் தூக்கி வர உள் அரங்க மேடையேற்றம் கண்டது. மதிப்பு வாய்ந்த இப்படியானதொரு காட்சி முதன்முதலாக நிகழக் கண்டு கண்கலங்கி பரவசமடைந்தனர் பார்வையாளர்கள். மேடை நிகழ்வாக, சிறுவர்களின் நடனம், பாடல்கள் என்பன தமிழ்த் தொன்மையை எடுத்தியம்பும் வகையில் இருந்தமை இந்நிகழ்விற்கு மேலும் சிறப்பைத் தந்தது. இந்நிகழ்வுகளில் இலங்கைக் கலாச்சாரத் தமிழ்ப் பள்ளி, கலைக்கூடம், பாரீஸ் தமிழர் கல்வி நிலையம், 'தமிழ் அகம்' தமிழ்க் கல்வியகம், மூலன் என்னும் ஊரில் தமிழ் கற்கும் சிறார்கள், இவர்களுடன் பல்வேறு பாரீஸ் பிராந்தியத் தமிழ் சிறார்களும் பங்கேற்றிருந்தனர்.

ஆண் பெண் கலந்த சிறார்களால் நிகழ்த்தப்பட்ட வசந்தன் கூத்து கொஞ்சம் நீண்டிருந்த போதிலும் பாரீசு மேடை நிகழ்வாக முதல் முறையாக அமைந்ததை குறிப்பிட்டாக வேண்டும். கூத்தாடும் நிகழ்வை இனிவருங் காலத்தில் எமது சந்ததியினர் தொடரும் வாய்ப்பை இந்நிகழ்வு கட்டியமிட்டது. அத்துடன் திருவள்ளுவர், ஔவையார், பாரதியார் பாரதிதாசன், தனிநாயகம் அடிகளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிகழ்வு குறித்த கருத்துச் சிதறல்கள் :**

- சுமார் முப்பது வருடங்களுக்கு மேலாக பல்வேறு நிகழ்வுகளைக் கண்டவன் நான் எமது குஞ்சு குமர்களிலிருந்து பெரிசுகள் வரையில் இவ்வளவு குதூகலத்துடன் இருந்ததை நான் இப்பத்தான் முதற் தடவையாகப் பார்த்தேன். பாரிஸ் கலைஞன் பரா.

- மார்க் டொர்முவா அரங்கத்தை நாம் பல நூறு தடவைக்கு மேல் கண்டவர்கள். ஆனால் இன்று நான் பார்த்த அரங்கம் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. இப்படியாக அலங்கரிக்கப் பட்டதாக நான் கற்பனை செய்திருக்க வில்லை. அரங்கமே கண்கொள்ளாக் காட்சியாக மெய்சிலிர்க்க வைத்தது. பிரபல்ய நடனக் கலைஞன் பிறேம் கோபால்.

- இம்முறை நடந்த தமிழர் திருநாள் நிகழ்வு மக்கள் நிகழ்வாகச் சங்கமித்து விட்டது. இதனை எனது கடிதத் தலைப்பில் முத்திரையுடன் பதிவு செய்வேன். என்றார் டிரான்சி நகர சபை உறுப்பினரும் தமிழ் ஆர்வலருமான அலன் ஆனந்தன்.

- பெருமளவிலான மக்களது பங்கேற்புடன் சிறப்பாக நடந்ததொரு நிகழ்வாகி பாரீசு தமிழர் வாழ்வில் தடம் பதித்துள்ளது இந்நிகழ்வு. என்னால் பெரும் ஆசானாக மதிக்கப்படும் பி. எச். அப்துல் ஹமீத் அவர்களது கரத்தால் எனக்கு வழங்கப்பட்ட கௌரவப் பரிசும் அங்கீகாரமும் வார்த்தைகளால் வர்ணிக்கப்பட முடியாதவை. என்றார் தமிழமுதம் வானொலி இயக்குநர் எஸ் கே ராஜென்.

- புலம்பெயர் தேசமொன்றில் வாழத்தலைப்பட்டுள்ள எம்மவர்களது வாரிசுகளின் கைதொட்டு அகரம் எழுதியதானது என் வாழ்நாளில் மறக்கமுடியாததொரு நிகழ்வாகும். என்றார் பி. எச். அப்துல் ஹமீத் அவர்கள்."

- நிகழ்வு தமது பண்பாட்டு மூலத்தை அறியும் விருப்பத்தை எதிர்காலச் சந்ததியினர் பெறும் வகையில் சிறப்பாக அரங்கம் அமைக்கப்பட்டிருந்ததைப் பாராட்டுகிறேன். என்றார் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட சுவீடன் மத வரலாற்றுத்துறைப் பேராசிரியர் பீட்டர் சல்க்."

என பல்வேறு தமிழ்ப் பெரியவர்கள் போன்று வேடமிட்ட சிறுவர்கள் மேடையில் தோன்றி அசத்தினார்கள்.

கடைசி நிகழ்வாக சுய விருப்புடன் மேடையேறிய இரு சிறார்களின் சிலம்பாட்டம் எமக்கான கருவி ஆட்ட வகையும் தொடரப்படும் நம்பிக்கையை அளித்தது.

இலண்டன் வாழ் இளம் கலைஞர்கள் சந்தோஷ் குழுவினரும், பிரான்சு 'அவதாரம்' இளம் கலைஞர்கள் குழுவினரும், 'திருவள்ளுவர்' வருகையை சிறப்பாக நிகழ்த்திய சுவிஸ் வாழ் தமிழ்க் கலைஞன் ரமணன் அவர்களும், கண்காட்சி அரங்கை சிறப்புற அமைத்த ஜேர்மன் வாழ் இளம் ஆவணச் சேகரிப்பாளன் அன்ரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

சிறப்பு விருந்தினர் உரையில், அப்துல் ஹமீது அவர்கள், ஒரு பிள்ளையின் தாய் மொழி அப்பிள்ளை தாயின் கருவறையில் தனது 13ஆம் வாரத்திலிருந்து கேட்கத் தொடங்கும் மொழியாகும். இது எம் சந்ததியினருக்கு அந்தந்த நாட்டு மொழியாக அமையும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் ஒரு குழந்தையின் பத்து வயதிற்குள் பத்து வகை மொழிகளைக் கற்கும் திறனுடையதென அறிஞர்களது ஆராய்ச்சி குறிப்பிடுகிறது. அந்த வகையில் நம் சந்ததியினர் தமிழைக் கற்று அதன் வழி சிறக்க வேண்டும். இலண்டனில் எம் பாடகனொருவன் குறிப்பிடுவது போல், (I am a Tamil but i don't know Tamil) என்ற அவலம் நிகழக் கூடாது. சூழல் மொழி வேறாயினும் வீட்டு மொழியாக தமிழ் இடம்பெற வேண்டும். இதற்காக முகுந்தன் பேன்ற பல சமூக ஆர்வலர்கள் செயற் படுகிறார்கள். இப்படியானதொரு நிகழ்வரங்கை பிரான்சு மண்ணில் நிகழ்த்திய சிலம்புச் சங்கம் பெரும் பாராட்டுதலுக்குரியது. சங்கம் கண்டு வளர்ந்த தமிழின் பாராம்பரிய வாழ்வில் நான்காவது சங்கமாக சிலம்பு திகழ்வதை பாராட்டுகிறேன். என கரவெலியுடன் கூறினார்.

நன்றி தெரிவிப்பின்போது தன்னார்வத்துடன் கைகோர்த்து நிகழ்வரங்கினை அழகுற அமைத்திருந்த 'கப்பி பலூன் டெக்கிரேஸன்' சசி, நிகழ்வை ஔிப்படங்களாக பதிவு செய்து கைகோர்த்த 'தடம்' குணா, தன்னார்வ தமிழ் அன்பு இளைஞர் கௌதம், நிகழ்வை காணொலியாக பதிவு செய்த பாரீஸ் ஈழத் தமிழர் திரைப்படச் சங்கத்தினர் (LIFT) சார்பாக றொபேர்ட், பிரான்சில் பறை வாத்திய முழக்க அரங்கேற்றலை நன்கு வடிவமைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறப்பு நிகழ்வுகள் :**

இந்நிகழ்வில் கலந்து கொண்ட சிறப்பு அதிதிகள் மற்றும் விருந்தினர்கள் சந்தன மாலை அணிவிக்கப்பட்டும் தமிழர்கள் கண்ட தொன்ம பருத்தி ஆடைக் குறியீடாக கதர் துண்டு அணிவித்தும் வரவேற்கப்பட்டனர். சிறப்பு அதிகளுக்கு இந்நிகழ்வின் உயர் மதிப்பீடாக சிலம்புச் சங்கத்தால் புலம்பெயர் தமிழர் திருநாள் 2014 கேடயமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

தன்னார்வத்துடன் தொடர்ச்சியான விடாமுயற்சியுடன் சிறப்பானதொரு நடிப்பாற்றலை வெளிப்படுத்திவரும் ஆற்றலாளன் A gun and a Ring நடிகன் பாரீசு கலைஞன் பாஸ்கரன் அவர்களுக்கு புலம்பெயர் தமிழ்க் கலைஞர் ஏ ரகுநாதன் அறக்கட்டளை சார்பாக மூத்தவரான மதிப்புக்குரிய கலைஞர் ரகுநாதன் அவர்களால் 200 ஈரோக்கள் ரொக்கப் பரிசும் சிலம்புச் சங்கத்தால் புலம்பெயர் தமிழர் திருநாள் 2014 கேடையமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

தன்னார்வத்துடன் தொடர்ச்சியான விடாமுயற்சியுடன் சிறப்பானதொரு தமிழ் அறிவிப்புப்பணியையும் வானொலித் தொகுப்பையும் வழங்கிவரும் ஆற்றலாளன் தமிழமுதம் வானொலி இயக்குநர் எஸ் கே ராஜென் அவர்களுக்கு வானொலித் தமிழ் அறிவிப்பு மேதை பி. எச். அப்துல் ஹமீத் அறக்கட்டளை சார்பாக மதிப்பிக்குரிய அன்பு அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீத் அவர்களின் கரங்களால் பரிசும் சிலம்புச் சங்கத்தால் புலம்பெயர் தமிழர் திருநாள் 2014 கேடயமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

சென்ற ஆண்டு புலம்பெயர்வு வாழ்வில் தமது இல்லறவாழ்வை திருக்குறளில் உறுதிப்பிரமாணமெடுத்து இணைத்துக்கொண்ட தர்சன் ஜனனி இளம் இணையர்கள் பொங்கலிடல் நிகழ்த்தி மகிழ்வூட்னர். இவர்களுக்கு சிலம்புச் சங்கத்தால் புலம்பெயர் தமிழர் திருநாள் 2014 கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

பிரான்சுத் தமிழ்ப் புலம்பெயர்வு வாழ்வில் எமது தொன்ம இசைக்கருவியான பறையை வாஞ்சையுடன் அறிமுகப்படுத்தி அரங்கேற்ற வழிசமைத்த இலண்டன் இசைக் கலைஞன் சந்தோஷ் அவர்களுக்கு சிலம்புச் சங்கத்தால் புலம்பெயர் தமிழர் திருநாள் 2014 கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

தமிழர் திருநாளுக்கு முதல் நாளான 18.01.2014 அன்று மாலை சென் டெனி [பாரீஸ்8] பல்கலைக் கழகத்தில் 'புலப் பெயர்விலும் வாழும் தமிழ்ப் பண்பாடு' என்னும் தலைப்பில் ஆய்வரங்கம் ஒன்றும் நடைபெற்றது. இதில் சுவீடன் கீழத்தேய மத வரலாற்றுத்துறைப் பேராசிரியர் பீட்டர் சல்க், புகழ்பெற்ற இலங்கை வானொலி தமிழ் அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத், கிழக்கிலங்கைப் பல்கலைக் கழக முன்னாள் நுண்கலைப் பீடாதிபதி பாலசுகுமார், பிரான்சு எவ்றி பல்கலைக் கழகப் புவியில் துறைப் பேராசிரியர் வாசுதேவன் வுடமாலை, மற்றும் திரு விஜயரங்கன் [சாம் விஜய். ஆகியோர் கலந்து கொண்டு ஆய்வறிக்கைகளைச் சமர்ப்பித்தனர். இந்நிகழ்வை சிலம்புச் சங்கத்தின் உப செயலாளர் பாரீஸ் பல்கலைக் கழக மாணவன் ஜோனாஸ் அன்ரன் ஒருக்கிணைத்திருந்தார்.

தன்னார்வத்துடன் மிகுந்த ஒத்துழைப்புடன் நிகழ்த்திய பாரீஸ் கலைஞர்கள் ஆகியோரும் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

அத்துடன் தொலை தூரத்தில் சென்னையில் இருந்தவாறு தமிழ் நட்புறவால் நிகழ்வுடன் இணைந்து சிறப்பிதழை வெளிக் கொணர்ந்த 'காக்கைச் சிறகினிலே' இதழ் குழுமத்தினருக்கும், பொருட்கள் வாங்கி அனுப்பிய ஆசிரியர் குழுமத் தோழன் சந்திரசேகருக்கும், பதாகைகள் மற்றும் பிற பரிசுப் பொருட்களை அழகுற வடிவமைத்துத் தந்த எமது நீண்ட காலத் தோழன் வரைவோவியக் கலைஞன் மாரீஸ் அவர்களுக்கும் நிகழ்வில் நன்றி தெரிவிக்கப் பட்டிருந்தது.

புலம்பெயர்வு வாழ்வில் தமிழால் ஒருத்துவமாகி, சாதி, மத, தேச, அரசியல் பேதம் கடந்த தமிழ்க் குடும் பங்களாக ஒன்றிணைந்த நிகழ்வில் கலந்து கொண்டது மிகுந்த மனத் திருப்தியைத் தந்தது. வாழ்கை என்பது அஞ்லோட்டம் போன்றது எம்முன் சந்ததியினர் எம்மிடம் வழங்கிச் சென்ற வரலாற்று அடையாளத் தடியை புதிய மெருகுடன் அடுத்த தலை முறையினரிடம் கையளிப்பதென்பது தார்மீகக் கடமை. இந்த அரிய செயலைப்புரியும் சிலம்புச் சங்கத்தை பாராட்டுவதில் பெரு மகிழ்வு கொள்கிறேன். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆள்காட்டி விரல்

நடந்திருப்பதென்னவோ பெரிய விபரீதம்தான். அதற்காக கொதித்தெழ வேண்டாம். கொஞ்சம் யோசனை செய்யுங்கள். ஆவேசம் வேண்டாம். சிலிர்த்துக் கிளம்ப வேண்டாம்.

தரைமீது கால்பதித்து நில்லுங்கள். வதந்திகளை நம்ப வேண்டாம். இதுதான் சாக்கு என வரிந்துகட்ட வேண்டாம்.

துளி சகிப்புத்தன்மை கடைபிடியுங்கள். எல்லாம் தன்னால் சரியாகிவிடும்.

எல்லாம் சரிதான்...மான மரியாதை உள்ளவர்களின் சங்கதி என்ன...?

***

பொழுது விடிந்தது... எப்போதும்போல்.

ஆகாயத்தை நிறைத்துக் கொண்டு மேகங்கள். மழை வரப்போகிறதோ என்னவோ? வரலாம்... வராமலும் போகலாம்.

அவர் மட்டும் அப்படியே நின்று கொண்டிருப்பார். ஆடமாட்டார்...அசைய மாட்டார். கடும் வெய்யில் அடித்தாலும் அதே நிலைதான். ஊரும் நாடும் சாதி சனமும் போற்றினாலும் பொங்கிப் பூரிக்கமாட்டார். அவர்களின் பொறுமைக்கு பிரச்சினைகளுக்கு தாழ்நிலைக்கு... வறுமைக்கு... அனைத்திற்கு மான சுயமரியாதைச் சின்னமாய் உடம்பு நிறைய உடையுடுத்தி சிறுநகை சிந்தியபடி நின்றிருப்பார் சர்வந்தர்யாமி...! (எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர்). ஒரு கவசமாய் உடனிருப்பார். இதய சிம்மாசனத்தில் கொலுவிருப்பார். குரல் கொடுத்துப் பாருங்கள்...வந்து நிற்பார். பழங்கால ஆயுதமான கதையை ஏந்தி பீமன் போல் காணப்படுவார். எல்லோரும் தலை உயர்த்தி அவரையே பார்த்துக் கொண்டிருப்பார்கள். திடீரென மாயமாகிவிடுவார். மாயமானதுபோல் நமக்குத் தெரியாது. ஏனெனில்...

எங்கோ ஏதோ ஒரு மூலையில் ஒரு வேதனை...ஒரு துயரம்...தீனம்...அவ்வளவுதான்.... கண் சிமிட்டும் நேரத்தில் அங்கு பறந்து விடுவார். பைத்தியக்கார ஜனங்கள். அவர் அங்கேயே இருந்துவிடுவார், புகழுரைகளைக் கேட்டபடி என எண்ணிக் கொண்டிருப்பார்கள். அது அப்படியல்ல... அவர் அங்கும் இருக்கமாட்டார்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



'யானாம்' (Yanam) ஒரு தனிப்பட்ட பிரதேசம். பிரெஞ்சுக் காரர் ஆட்சிக் காலத்தில் குல பேதங்கள் கிடையாது. அவர்கள் இவர்கள் எனும் பாகுபாடு கிடையாது. பள்ளிக்கூட வகுப் பறைகளில் அனைவரும் ஒன்றாய் அமர்ந்து பாடம் படிப்பார்கள். பிரிட்டிஷ் இந்தியாவில் அப்படியில்லை. கட்டுப்பாடுகள் இருக்கும். அப்படிப்பட்ட யானாம் நகரத்தில் ஊகிக்கவே இயலாதது இது. ஊரின் நட்டநடுவில் ராத்திரி பகலாய் ஜனநடமாட்டம் இருக்கும் இடத்தில்...

இளம் காலைப் பொழுதில் ஜனத்திரள் சமுத்திரமானது. ஆத்திரம் அதைவிடப் பிரம்மாண்டமாயிற்று.

அமைதிப்படுத்துபவர் யார் அவர்களை...? இயலாது. ரகளை...பெரும் ரகளை...கலவரம் வெடிக்கப் போகிறதா..?

வீம்பு...தலைக்கேறிய ஆவேசம்...புத்தி புகட்ட வேண்டும்... பாடம் புகட்டியே தீரவேண்டும். கைபட்ட மாத்திரத்தில் நெருப்பாய்ப் பொசுங்க வேண்டும்.

ஆள்காட்டி விரல் என்பது உயிருக்குச் சமமானது. திசைக்கும் இலக்கிற்குமான சங்கேதம் அது. குறைகளைச் சுட்டிக் காட்ட வேண்டுமா... ஜாக்கிரதை, பயமிருக்கட்டும் என எச்சரிக்க வேண்டுமா... செல்ல வேண்டிய பாதை இதுதான் என வழிகாட்ட வேண்டுமா... ஆள்காட்டி விரல்தானே அத்தனைக்கும்! சற்றே மேலுயர்ந்தாற்போல் பளிச்செனத் தெரியும் அந்த விரலை எவனோ வெட்டியெறிந்திருக்கிறான். உதிரம் கொட்டவில்லை. வலியால் துடிதுடிக்கவில்லை. உதவி உதவி எனக் கூக்குரலிடவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு வலியடக்கிக் கொண்டிருக்கிறார். அவரே அனைவருக்குமான காவல் சக்தியாய்...காத்து ரட்சிக்கும் கவசமாய் இருந்தும் இப்படி கையாலாகாத்தனமாய்...கோழையாய்...தப்பு...தப்பு...

மௌனம். இடி விழுந்தாலும் இம்மி குறையாத நிசப்தம்... எவர் கண்ணிலாவது பட்டால் பெரும் கலவரமாகி...போராட்டமாய்...கொந்தளிப்பாய்...வேண்டாம் வேண்டாம்.

ஆனால்...இது எப்படி வெளியுலகுக்குத் தெரிய வந்தது?

காக்கை ஒன்று அதன்மீது வந்தமர்ந்தது. ஈரமற்ற ரத்த ஸ்பரிசம். வாசனையற்ற காயம். திரும்பத் திரும்ப தலை திருப்பி ஓரக்கண்ணால் பார்த்தது. எப்போதும் இருக்கும் ஏதோ ஒன்று இல்லாதது போல்... பார்வைக்குப் புலனாகும் அந்த ஏதோ ஒன்று இப்போது

**தெலுங்கு மூலம் : தாட்ல தேவதானம் ராஜு**

**தமிழில் : சாந்தா தத்**

**ஆள்காட்டி விரல் என்பது உயிருக்குச் சமமானது. திசைக்கும் இலக்கிற்குமான சங்கேதம் அது. குறைகளைச் சுட்டிக் காட்ட வேண்டுமா... ஜாக்கிரதை, பயமிருக்கட்டும் என எச்சரிக்க வேண்டுமா... செல்ல வேண்டிய பாதை இதுதான் என வழிகாட்ட வேண்டுமா... ஆள்காட்டி விரல்தானே அத்தனைக்கும்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயமாகிவிட்டது போல் உணர்ந்து கா..கா...எனக் கரைந்தது. அவ்வளவுதான்... நொடிப்பொழுதில் ஐந்து பத்து என அதன் கூட்டாளிகள் குழுமிவிட்டன. தொண்டை வறண்டு போகும் அளவிலான தவிப்புமிகு கோரஸ் ஒலி. வேதனையான தொனி. செவிப்பறை கிழிபடுவது போல் பேரிரைச்சல். அவ்வழி செல்பவர்களுக்கு ஒரே எரிச்சல். கைவீசி விரட்ட முயன்றனர். கீழே கிடந்த கல்லெடுத்து எறிவது போல் மிரட்டினர். ஊஹூம்..மிரளவில்லை... அவற்றின் கூச்சலும் குறையவில்லை.

காக்கைகளின் எண்ணிக்கை கூடிக் கொண்டே போக... கோரஸ் சத்தமும் அதற்கேற்றாற்போல் பெருகியது.

மற்றவர்களைப் போல் தம் வழி நடக்காமல் ஓர் ஆள் மட்டும் ஒரு கணம் நின்று காக்கைக் கலாட்டாவைக் கவனித்தார். சுற்றிலும் பரிசீலனையாய் நோக்கினார். செத்துப்போன காக்கையோ இல்லை வேறு பறவை மிச்சமோ தென்படவில்லை. சந்தேகமே இல்லை... வேறு ஏதோ நடந்திருக்கிறது... காரணமற்று இவை இப்படிக் கூட்டணி அமைத்துக் கொண்டு காட்டுக் கூச்சலாய்க் கரைவதுண்டா?

அருகில் ஏணி போலிருந்த படிக்கட்டு களில் ஏறலானான். மேகத்திவலைகள் அடர்த்தியாய்ப் போர்த்தியிருந்தன. கீழ்நோக்கிப் பார்வையைச் செலுத்தினான். இதயத்தில் படபடப்பு... துரிதத்துடிப்பு... நிலைகுலைந்து போனான். அய்யோ... என அனிச்சையாய் முணுமுணுத்தன இதழ்கள்.

கோட்...சூட்...டை....பளபளக்கும் பூட்ஸ்... ரோஜா வண்ணத்தில் மினுமினுக்கும் செழுமை யான கன்னங்கள்...மடித்த கரத்தில் புத்தகம்... சலனமற்று... அசல் இருப்பு இல்லாமலே!

நடந்ததென்னவெனப் புரிந்துவிட்டது. அவனும் கத்தத் தொடங்கினான். ராமய்யா... லட்சுமய்யா... சங்கரய்யா...

பெரியய்யா...பெருங்குரலில் கூப்பாடு போட்டான். உரத்து ஒலித்தாலும் அப்பட்டமான நடுக்கம் குரலில். கணங்களில் கூடிவிட்ட ஜனங்கள், உயர்த்திய தலை உயர்த்தியபடியே நின்றுவிட்டனர்.

அய்யா...யார் நீ...எந்த உலகத்திலிருந்து இங்கு வந்து சேர்ந்தாய்...உன் ஊர் எது...எதைச் சாதிக்கவென இங்கு வந்தாய்...சக மனிதர் களுக்கு என்ன கொண்டு வந்தாய்...நீ கற்ற கல்வி என்ன... கதிரொளி போன்ற இப்பிரகாசம் எப்படி உன்னிடம்... இந்தப் பூமி உன்னைச் சுற்றியே சுழல்வதெப்படி... எதற்காக இப்படி நேர்த்தியாய் தலை சீவி சொகுசாய் தோன்றுகிறாய்... கூர்மையான விழிகளில் ஒளிரும் இத்தன்னம்பிக்கையை எங்கிருந்து பெற்றாய்... கீழ்த்தட்டு மக்களுக்கு நீ ஊட்டும் நம்பிக்கை என்ன? சிக்குப்பிடித்துச் சீரழிந்த புதர்களிலிருந்து...மேல் வர்க்கச் சமூக மோசடியினின்று சிலிர்த்துக் கிளம்பி சுயஒளியனாய் உன்னை எவ்வாறு நிலை நிறுத்திக் கொண்டாய்? தன்வயப்படுத்தி மொத்தமாய் ஈர்த்துவிடும் உன் அபார வெற்றியின் இரகசியம் என்ன... இப்படிப்பட்ட... சர்வ வல்லமை பொருந்திய மாமனிதனான உன்னால் உன்னைப் பாதுகாத்துக் கொள்ளவி யலாமல் போனதேன்? உன்னைக் காப்பாற்றிக் கொள்ள உன்னால் முடியாதா? உன்னுள்ளான ரத்த மாமிசத்தை எல்லோருக்கும் பகிர்ந்தளித்து அனைவருள்ளும் ஆக்கிரமித்து... அவர்களின் சீற்றமே, அவர்களின் ஆவேசமே உன்னுடையது என்கிறாயா? சரிதான்...இது அவர்களுக்கான பரிசோதனை போலும். சவால் என்றும் கொள்ளலாம்தானே...! சட்டதிட்டங் களுக்குரிய... வழிபாட்டிற்குரிய.... கருணை சார்ந்த சரித்திரம் உன்னுடையது...! தெரிந்தது தானே...!

அதெல்லாம் இருக்கட்டும்...இப்போது உன்மீது யாருக்கு மனத்தாங்கல்? இதுதான் இப்போதைய மிகப்பெரிய கேள்வி. அணுகுண்டுபோல் வெடித்தது அக்கேள்வி. அரைமணி நேரத்தில் மொத்த ஊரும் பொங்கியெழுந்தது.

எவர் வேலை இது...? உணர்வுகள் அதிர்ந்தன. ஆற்றாமையும் ஆவேசமும்

**காக்கை ஒன்று அதன்மீது வந்தமர்ந்தது. ஈரமற்ற ரத்த ஸ்பரிசம். வாசனையற்ற காயம். திரும்பத் திரும்ப தலை திருப்பி ஓரக்கண்ணால் பார்த்தது. எப்போதும் இருக்கும் ஏதோ ஒன்று இல்லாதது போல்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறியாய் உருமாற...மூளைகள் தீவிரமாய் ஆலோசனை வலை பின்னிக்கொண்டிருந்தன.

எவர் பேச்சும் எவரும் கேட்கப் போவதில்லை... யார் என்ன சொன்னாலும் அங்கீகரிக்கப் போவதில்லை.

ஆயுதங்கள் பின்னாலிருந்து துரத்திக் கொண்டிருந்தன. யார் அங்கே...? எவர் எங்கே...?

* * *

அசல் எதிர்ப்பு தெரிவிப்பது என்பது எப்படி இருக்க வேண்டும்? 'பந்த்' எனும் நடைமுறையை எப்படிப் பின்பற்ற வேண்டும்?

சில வருடங்கள் முன்பு வரை இந்த பந்த் என்பது ஒரு யுத்தத்திற்குத் தயாராவது போல்! பந்த் எனும் பொறி - சிந்தனையில் முளைவிட்டால் போதும்... போர்க்கால நடவடிக்கைகள்தாம். மளமளவென ஆயத்தங்கள் துவங்கும். முதலில் அனைவரின் ஒப்புதலைப் பெறவேண்டும். முன் வைக்கப்படும் சந்தேகங்களுக்கு தெளிவான புரிதல் ஏற்படுத்த வேண்டும்.முன்னுதாரணங்கள் காட்ட வேண்டும். விளையவிருக்கும் பலன்களை இனப்படுத்த வேண்டும். குறைந்தபட்சம் ஒரு நான்கைந்து நாள்கள் முன்கூட்டி முடிவு செய்ய வேண்டும். எதிர் விளைவுப் போராட்டங்களுக்குகேற்ப திட்டங்கள் கைவசம் தயாராக இருக்க வேண்டும். காவல்துறையுடனான அணுகுமுறை குறித்து விவாதிக்க வேண்டும். உணர்வுகள் பலமாய்த் தாக்கப்படுகையில் எதிர்ப்புத் தன்மையின் தாக்கம் மிகத் தீவிரமாய் இருக்கும். அணை போட்டு நிறுத்துவதென்பது எந்த சக்தியாலும் இயலாத காரியம்.

இதெல்லாம் இருக்கட்டும். இன்றைய காலகட்ட கதையே வேறு. நாட்டின் எங்கு எம்மூலையாயினும் எதிர்ப்புக்குரலின் தொனியும் அணுகுமுறையும் அடியோடு மாறிவிட்டது. நெறிமுறை வரையறையின்றி அவரவர் விருப்பத்திற்கேற்ப தீர்மானங்கள் மேற்கொள்வதே இன்றைய நடைமுறையாகி விட்டிருக்கிறது. அப்போதைக்கப்போது மின்னல் வேக அறிவிப்பு...அவ்வளவுதான். அடுத்த தினமே எங்கும் எங்கெங்கும் பந்த்! இன்னொரு கொடுமை...தெருமுனை தோறும் உண்ணாவிரதப் போராட்ட முனைவு. நான்கு நாட்கள் பட்டினி...ஐந்தாம் நாள் மருத்துவமனை... சலைன்... எவ்வளவு எளிதாகிவிட்டது!

யானாம் (Yanam) பந்த்! நாலா பக்கமும் போராட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டன. கோதாவரிக்கரை - கனகாலபேட் ஜங்ஷன்...டைடல் லாக்...நீலவல்லிப்பாலம்... இப்படி எல்லா இடங்களிலும் உள்ளூர், வெளியூர்க்காரர்கள். ஈ, எறும்புக்குக்கூட வழிவிடாமல் முன்னெப்போதும் இல்லாத வகையில் கட்டுத்திட்டமாய் கச்சிதமாய் ரெக்கார்டு பிரேக் ஆக வேண்டும். அந்த நாய் மகன்களுக்கு புத்திவர வேண்டும். இனி எப்போதும் எவனும் இதற்குத் துணியக்கூடாது. வாலாட்டினால் சாம்பல்தான் மிஞ்சும்... ஜாக்கிரதை...!

கடைகள்...கல்விக்கூடங்கள்...வங்கிகள்...

அலுவலகங்கள் எதுவுமே திறக்கப் படவில்லை. குறைந்தபட்சம் காய்கறி, பழ வண்டிகள்..., மிளகாய் பஜ்ஜி வண்டி எனத் தெருவோரச் சில்லறை வியாபாரங்கள்கூட அனுமதிக்கப்படவில்லை. சாலைகளில் வாகன நடமாட்டம் அறவே தென்படவில்லை. போராட்டக்காரர்



"அப்போதைக்கப்போது மின்னல் வேக அறிவிப்பு... அவ்வளவுதான். அடுத்த தினமே எங்கும் எங்கெங்கும் பந்த்! இன்னொரு கொடுமை... தெருமுனை தோறும் உண்ணாவிரதப் போராட்ட முனைவு. நான்கு நாட்கள் பட்டினி... ஐந்தாம் நாள் மருத்துவமனை... சலைன்... எவ்வளவு எளிதாகிவிட்டது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர வேறு எவர் வாகனங்கள் எட்டிப் பார்த்தாலும் சக்கரங்களில் காற்றுப் பிடுங்குவது... அல்லது அடித்து நொறுக்குவது..., சிறு சிறு உணவகங்களில் பாவம்... தயார் நிலையில் உள்ள காய்கறிகளை கீழே கொட்டி மிதித்து சின்னாபின்னமாக்கி...காலில் விழுந்து கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்சியும் மனமிரங்காது...

ஃபெர்ரி ரோட்டில் ஹீரோஹோண்டா உயர உயரமான தீ நாக்குகளிடை...யார் தீ வைத்திருப்பார்கள்..கோஷங்கள்..உயர்த்திப் பிடித்த வாசக அட்டைகள்...பதற்றம்... கொந்தளிப்பு... உக்கிரம் எக்கணம் என்ன நேருமோ...?

காவல்துறை துப்பாக்கிகளைக் கக்கத்தில் முடக்கிக் கொண்டு கைகட்டி நின்று... ஒயர் லெஸ்ஸில் 'ஓவர்' சொல்லியபடி... பாவம்... அவர்கள் என்ன செய்வார்கள்? முன்னொரு நாளில் கைது செய்து காவல் நிலையம் கூட்டிச் செல்லும்போது சிறுநீர் கழிப்பதாய் இறங்கி பூச்சிமருந்து குடித்துவிட்டான் ஒரு கைதி. படக்கூடாத இடத்தில் தடி விழுந்து தொழிலாளி ஒருவன் பலியானது இன்னொரு சம்பவம். நள்ளிரவில் சப்-ஜெயில் சுவரை யொட்டி ஏணி போட்டு ஏறி உள்ளே குதித்து கரடு தட்டிய முரட்டுக் கைதிகளைக் கொல்லும் முயற்சி நடந்ததும் வேறொரு கசப்பு அனுபவம். இவை அனைத்திலும் போலீசே குற்றவாளியாய் முன்னிறுத்தப்பட...உடனே தற்காலிக வேலை நீக்க உத்தரவு. மேற்சொன்னவையெல்லாம் கவனத்திலிருத்தி கழுகுப் பார்வைக் கண்காணிப்புடன்...பயம் பயமாய்...

வீடுகளில் கதவுகளை அடைத்துக் கொண்டு தொலைக்காட்சிப் பெட்டி முன் விழிகளை அகல விரித்து பழியாய்க் கிடந்தபடி...என்ன ஆகுமோ, ஏதாகுமோ எனும் பரிதவிப்பில் ஜனங்கள்...

அப்பாடா... அந்தி வேளை நெருங்கி விட்டது. ஆனால் அடுத்த நாளும் தொடரும் என்கிற அறிவிப்பு. இன்னும் தீவிரமாக்கத் திட்டம்...! அப்போதைக்கு பரபரப்பு தணிந்த சூழல் தந்த ஆசுவாசம் ஜனங்களிடை. வீதிகளில் விளக்குகள் எரிந்தன.

மீண்டும் விடிந்தது. கூடாரங்களில் கருப்பு பேட்ஜ்களுடன் போராட்டக்காரர்கள்.

நீத்தோருக்கான சடங்குச் சமயங்களில் வைக்கப்படும் பிண்ட உருண்டைகள் மீதான எதிர்ப்பார்ப்புத் தனத்துடன் காக்கை வந்து தோள் மேல் உட்கார்ந்தது.

யாரோ அதட்ட...பறந்து விட்டது அமர்ந்த சுவடு தெரியாமல்.

ஆள் காட்டி விரலில் நீல வண்ணக் கைக்குட்டை காற்றில் இலேசாய்ப் பட படத்தபடி...

அதை விலக்கிப் பார்த்தால்... அடடா... இன்னும் என்ன... ஆள் காட்டிவிரல் முளைத்திருந்தது. அச்சு அசலாய் முன் பிருந்தது போன்றே...! கலகம் விளைவிக்கும் கத்திக் கண்கள் இருப்பது தெரியும். பொறுமை விளிம்பு தாண்டினால்...அதாவது காலம் கடத்தினால்...வெடித்துச் சிதறும் சிமெண்ட் மூட்டைகள் இருப்பதும் தெரியும். ஆனால் எதிர் தெருவின் கோடியிலுள்ள எண்ணெய் நிறுவனத்தில் பணிபுரியும் ஒரு நல்லிதயத்தின் கலையார்வமிகு கைநேர்த்தி எவருக்குமே தெரியவரும் வாய்ப்பில்லை.■

# இரங்கல்



காக்கை இதழின் வளர்ச்சியில் தனித்த ஆர்வம் கொண்டவரும் ஸ்ரீதுர்க்கா பைண்டிங் நிறுவனரும் உரிமையாளருமான திரு.எஸ்.சரவணன் அவர்களின் தந்தையார் திரு.கே.ஜி.சம்பத் முதலியார் அவர்கள் 16.2.2014 ஞாயிற்றுக் கிழமை அன்று இயற்கை எய்தினார். அன்னாரின் உடல் 17.2.2014 அன்று ஆர்க்காடு திமிரி அருகில் உள்ள அவரது சொந்த கிராமமான கீழக்குடியில் எரியூட்டப்பட்டது. அச்சிட்டாளர்கள், பதிப்பாளர்கள், பத்திரிகையாளர்கள், நண்பர்கள் என திரளானோர் இறுதி நிகழ்வில் பங்கேற்றனர். அன்னாரை இழந்துவாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் 'காக்கை' தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

- ஆசிரியர் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓநாய்களுக்கு நடுவே நிர்வாணமாக



கல்லூரி திறந்துவிட்டது. ஆகஸ்ட் மாதமும் வந்துவிட்டது. ஆகஸ்ட் 15 விடுதலை நாள். ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு தேசிய இனத்துக்கு எது விடுதலை நாள்? இந்தி ஆதிக்கத்தை நிலை நாட்டும் இந்தியா எங்களுக்கானதில்லை என்று வலுவாக உணர்ந்தோம். விடுதலை நாளைத் துயர நாளாகக் கொண்டாடத் தீர்மானித்தோம். வெளியிலிருந்து போராட வேண்டியது உங்கள் கடமை என்று சொன்ன தலைவர்களின் பேச்சுக்கு நாங்கள் உண்மையாக இருந்தோம்.

*1965* கோடை விடுமுறைக்குப்பின் கல்லூரி திறந்துவிட்டது. எனினும் எங்கள் தோழர்கள் நா.காமராசனும், காளிமுத்தும், பா.செயப்பிரகாசமும் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்க் கைது செய்யப்பட்டுப் பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டார்கள். தமிழகத்தின் முன்னணி மாணவர் தலைவர்களான விருதுநகர் பெ.சீனிவாசன், இராசாமுகமது போன்றவர்களும் பாளைச் சிறைக் கம்பிகளின் நிழலில் இருந்தார்கள். தலைவர்கள் சிறையிலிருந்த போதும் போராட்டம் முடங்கிவிட வில்லை. விடுமுறையில் ஊருக்குச் சென்ற மாணவர்கள் நெஞ்சில் போராட்டக் கனல் அணையாதிருந்தது. மக்கள் தங்கள் பிள்ளைகளின் போராட்டத்தைத் தங்கள் போராட்டமாக வரித்துக் கொண்டார்கள்.

நான் பிறந்த கீழக்கரையிலும் போராட்டம் நடந்தது. விடுமுறையில் ஊரிலிருந்தபோது, ஊர் வந்திருந்த கல்லூரி மாணவர்களை ஒருங்கிணைத்து போராட்டத்தை நடத்த முயன்றேன். அம்மாணவர் களில் பலர் பெரிய இடத்துப் பிள்ளைகள். காவல்துறையின் ஒப்புதலைப் பெற்றுத்தான் இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தை நடத்த வேண்டும் என்றனர். காவல்துறையின் ஒப்புதலைப் பெற ஒரு வேண்டு கோள் கடிதத்துடன் காவல் நிலையம் சென்றோம். காவல் நிலைய ஆய்வாளர் மறுநாள் பார்க்கலாம் என்று சொல்ல, சட்டம் ஒழுங்குக்குக் கட்டுப்பட்ட அந்தப் பிள்ளைகள் காவல் துறையினர் சொன்னபடி நடப்போம் என்று கூறினர்.

நாங்கள் காவல் நிலையத்திலிருந்து வீடு திரும்பிய ஒன்றிரண்டு மணி அளவில், எல்லா ஊர்வல நிகழ்ச்சிகளும் தடை செய்யப்பட்டுள்ளதாகத் தண்டோரா போடப்பட்டது. கல்லூரிப் பிள்ளைகள் அடங்கிவிட்டனர். நான் இரண்டொரு நாட்களில் மதுரைக்குத் திரும்பிவிட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண மக்கள் கல்லூரிப் பிள்ளைகளின் தலைமைக்குக் காத்திருக்க வில்லை. அவர்களே ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கி விட்டார்கள். ஊர்வலத்தில் பெரும்பாலோர் இளைஞர்களாக இருந்தனர். கீழக்கரையிலிருந்து இராமநாதபுரம் செல்லும் சாலையில் ஊர்வலம் தொடங்கியது. காவல்துறை தடியடி மூலம் ஊர்வலத்தைக் கலைக்க முயன்றனர். ஊர்வலத்தினர் இராமநாதபுரம் சாலையில் ஓடினர். காவலர்கள் பின் தொடர்ந்தார்கள். ஊரை அடுத்து இராமநாதபுரம் சாலையின் இடப்புறமாக ஏர்வாடி சாலை பிரிகிறது. ஓடியவர்களில் சிலர் இராமநாதபுரம் சாலையிலும், சிலர் ஏர்வாடி சாலையிலும் பிரிந்து ஓடினர். ஓடுகிறவர்களைக் கண்டால் துரத்துகிறதுக்கு ஒரு வெறி பிறக்கும். ஏர்வாடிச் சாலையில் ஓடியவர்களில் ஒருவர் தம்மை எத்தனை காவலர்கள் துரத்துகிறார்கள் என்று திரும்பிப் பார்த்தார். காவலர்கள் நான்கைந்து பேர்தான். ஓடியவர்கள் எண்ணிக்கை மிகுதி. திரும்பிப் பார்த்தவர், தம்முடன் ஓடியவர்களிடம், "டேய் அஞ்சு போலீஸ்காரன் தான் துரத்துறான்டா" என்று சத்தம் போட ஓடியவர்கள் நின்று திரும்பினர். ஓடியவர்களும் துரத்தியவர்களும் அந்தச் சாலை இடைவெளியில் நேருக்கு நேர் நோக்கினர். பிறகு காவல்துறை வீரர்கள் திரும்பி ஓட, துரத்தப்பட்டவர்கள் துரத்த ஆரம்பித்து விட்டார்கள். இந்தக் காட்சியை, துரத்தப் பட்டவர்களில் ஒருவனாகிய என் உறவினன் என்னிடம் சொல்லிச் சிரித்தான்.

கல்லூரி திறந்துவிட்டது. ஆகஸ்ட் மாதமும் வந்துவிட்டது. ஆகஸ்ட் 15 விடுதலை நாள். ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு தேசிய இனத்துக்கு எது விடுதலை நாள்? இந்தி ஆதிக்கத்தை நிலை நாட்டும் இந்தியா எங்களுக்கானதில்லை என்று வலுவாக உணர்ந்தோம். விடுதலை நாளைத் துயர நாளாகக் கொண்டாடத் தீர்மானித்தோம். 'வெளியிலிருந்து போராட வேண்டியது உங்கள் கடமை' என்று சொன்ன தலைவர்களின் பேச்சுக்கு நாங்கள் உண்மையாக இருந்தோம். எங்கள் கல்லூரியில் எழுமலை ஜெயராமன், கன்னியப்பன் போன்ற மாணவர்கள்தாம் முன்னணியில் இருந்தார்கள். தலைவர் இல்லை என்பதால் போராட்டம் கைவிடப்படக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தோம்.

இந்தப் போராட்ட நாட்களில் என் அம்மா என்னைக் குறித்து மிகுதியாகக் கவலைப்பட்டார். மாணவர்கள், பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்படுவதும், தடியடியால் காயப்படுவதும் ஆகிய இரத்தம் கசியும் நாட்கள் அவை. என் நண்பர்களை என் இல்லத்தார் எல்லாரும் அறிவர். காளிமுத்து, காமராசன், அசன்முகமது, சொக்கன், ஜெயராமன், நூர்முகது போன்றவர்கள் எல்லாம் என் வீடு வந்து விருந்துண்டு சென்றிருக்கிறார்கள். என் நண்பர்கள் சிறைபட்டார்கள் என்பதால் எனக்கு என்ன நேருமோ என்ற கவலையில் அம்மா சில சமயம் அழுதிருக்கிறார்கள். அப்பொழுது என் அம்மாவுக்கு ஆறுதல் சொல்லி தேற்றியவர் என் மூத்த அக்காள் குலாப் ஜகான்தான். அப்பெயருக்கு 'உலகின் ரோஜா' என்பது பொருள். மிக இனிமையாகப் பாடும் அவரைப் பற்றி முன்னரேயே குறிப்பிட்டிருக்கிறேன். அவர் எனக்கு, உணவுப் பழக்க வழக்கங்களில் முன்மாதிரி. அவர் திருக்கை, சுறா போன்ற மீன் வகைகளை உண்ணமாட்டார். அதுபோலவே கோழிக் கறியும் மாட்டுக்கறியும் கூடாது. எனக்குந்தான்.

ஒரு சமயம் நான் 'முழுநேர அரசியலில் ஈடுபடப் போகிறேன்' என்று அவரிடம் சொன்னேன். "அது உன் விருப்பம், ஆனா நீ பிறர் கையை எதிர்பார்த்து அரசியல்ல ஈடுபடக் கூடாது. உன் சம்பாத்தியத்தைக் கொண்டுதான் வாழனும்" என்றார். நான் என்ன எழுதுகிறேன் என்பது அவருக்குத் தெரியாது. ஆனால் "அவன் எழுதிப் பெருசா வருவான்" என்று என் அம்மாவிடமும், அண்ணன் சின்ன அக்காள், தங்கையர்களிடமும் அடிக்கடிக் கூறுவார்.

என்னைப் பற்றிக் கவலைப்பட்ட அம்மாவிடம் அவர் ஒரு முறை சொன்னார். "நீ கோழை மாதிரிப் பயப்படுறே. அவன் உனக்குப் பொறக்க வேண்டியவன் இல்லை. எனக்குப் புள்ளையாப் பொறக்க வேண்டியவன்".

நிறைமாத சூலியாய் இருந்த என் அக்காள் 1965 ஆகஸ்டு பத்தாம்நாள் பிள்ளை வயிற்றுடன் இறந்துவிட்டார். நான் மதுரையிலிருந்து ஊருக்குத் திரும்பினேன். அக்காள் இறந்த அன்றே அடக்கம் செய்யப்பட்டார். நான் ஆகஸ்ட் 14அன்று கல்லூரிக்குத் திரும்பிவிட்டேன்.

எழுமலை ஜெயராமன் ஒரு காலைச் சிறிது தாங்கித் தாங்கித்தான் நடப்பார். ஆகஸ்ட் 14 இரவு வரை தொடர்ந்த எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்களில் கலந்து கொள்ளாமல் விடுதியிலேயே இருந்தார். இரவு உணவை முடித்துக் கொண்டு பதினைந்து மாணவர்களுடன் கல்லூரியில் கருப்புக்கொடி கட்டுவது, கருப்புக்கொடித் தோரணம் கட்டித் தொங்க விடுவது போன்ற வேலைகளில் இருந்தோம். கல்லூரி வாசலில் காவல்துறை 'லாரி' ஒன்று சில காவலர்களுடன் நின்று கொண்டிருந்தது. நாங்கள் அதைப்பற்றிக் கவலைப்படாமல் தோரணம் கட்டிக் கொண்டிருந்தோம். தோரணம் கட்டும் வேலை கல்லூரி வாசலின் இரும்பு 'கேட்' வரை வந்துவிட்டது.

அப்பொழுது இரவு பதினொருமணி இருக்கலாம். 'கேட்'டை நெருங்கிய மாணவர்கள் மீது திடீரென்று காவல் துறையினர் பாய்ந்தனர். நான் 'கேட்டை' ஒட்டிய புல்தரையில் நின்று கொண்டிருந்தேன். தடியடியை எதிர்பாராத மாணவர்கள் விடுதி நோக்கி ஓடினர். நானும் ஓடி இருக்கலாம். எனக்கு ஓடத் தோன்றவில்லை. காவல் துறையினரிடம் "ஏன் அடிக்கிறீர்கள்" என்று கேட்டபடிப் போனேன். அங்கு நின்ற உதவிக் கண்காணிப்பாளர் என்னைப் பிரம்பால் அடிக்கக் கையை ஓங்கினார். நான் பிரம்பை எட்டிப் பிடித்துவிட்டேன். பிடிக்கும்போது என்னைத் தற்காக்க வேண்டும் என்றுதான் தோன்றியதே தவிரத் தாக்க வேண்டும் என்று நினைக்கவில்லை. நான் தாக்குவதற்கு எனக்குச் சில நொடிகள்கூடத் தேவையில்லை. ஆனால் அந்த அதிகாரியிடம், "நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள்" என்று சொல்லி வாய்மூடும்போது ஒரு காவலன் என் பிடரியில் ஓங்கி அடித்தான். காவலர்கள் என்னைச் சுற்றி வட்டமாக நின்று கொண்டார்கள். மின்னல் வேகத்தில் அவர்கள் கைகள் இயங்கின. என் கன்னத்தில் தீப்பொறி பறந்தது. என்னை ஒரு நிலைப்படுத்தி நிற்க முடியவில்லை. சில நொடிகளில் மூர்ச்சையுற்று விழுந்துவிட்டேன். காவலர்கள் என்னைத் தூக்கி லாரிக்குள் எறிந்தார்கள். எவ்வளவு நேரம் நான் உணர்வற்றுக் கிடந்தேன் என்பது தெரியாது. உணர்வு திரும்பியபோது அந்த உதவிக் கண்காணிப்பாளர் முன்பும், ஒரு ஆய்வாளர் முன்பும் நான் நிறுத்தப்பட்டிருந்தேன். கல்லூரி வாசலிலேயே.

அந்தக் காவல்துறை அதிகாரி என் பெயர் படிக்கும் வகுப்பு முதலியவற்றைக் கேட்டான். நான் சொன்னேன். "நீ எந்த ஊர்?"

"கிழக்கரை"

"ஓங்கப்பன் 'ஸ்மகில்' பண்ணிப் பணம் அனுப்புவான். நீ படிக்காமல் போராடுவியா?"

"எங்க அப்பா இறந்து போய்விட்டார்."

"அப்போ யாரும் கேட்பரில்லாத திமிரு"

நான் ஒன்றும் பேசவில்லை. அடிபட்டதில் நான் பாதி உணர்வில்தான் நின்றேன். பக்கத்தில் நின்ற காவலனிடம் "இவனை வண்டிலே தூக்கிப்போடு" என்றான். ஒரு போலீஸ்காரன் பிடரியில் கை வைத்து வண்டிக்குள் தள்ளினான்.

பிறகு ஒரு காவல்துறை 'ஜீப்' வந்தது. அதன் பின்பகுதியில் சில காவலர்களுக்கு மத்தியில் நான் இருத்தி வைக்கப்பட்டேன். அப்பொழுது என் தங்கை கணவர் தங்கி இருந்த அறையில் நான் இல்லை. வேறொரு விடுதியில் தங்கி இருந்தேன். விடுதிக்குக் காவலர்கள் வந்தனர். என் அறையை சோதனையிட்டனர். அறையில் நண்பர் ஜெயராமன் ஒரு குறிப்பை விட்டுச் சென்றிருந்தார். என்னைக் காண வந்ததாகவும், பிறகு மாலை ஏழு மணியளவில் சந்திப்பதாகவும் அக்குறிப்பிருந்தது. பிறகு எனது 1965ஆம் ஆண்டு டைரி இருந்தது.

அந்த டைரி என் நண்பர் எஸ்.என்.எம். சம்சுதீனால் எனக்கு அன்பளிப்பாகத் தரப்பட்டது. பொதுவாக எனக்கு நாட்குறிப்பு எழுதும் வழக்கமில்லை இன்று வரையிலும். எனினும் அந்த நாட்குறிப்பேட்டில் என் அக்காள் இறந்ததைக் குறிப்பிட்டிருந்தேன். ஜெயராமன் எங்கிருக்கிறார் என்பதைத் துருவித் துருவிக் கேட்டார்கள். எனக்குத் தெரியாது என்று சாதித்து விட்டேன். அவர் மாணவர் விடுதியில் இருக்கிறார் என்பது எனக்குத் தெரியும்.

பிறகு ஏதோ ஒரு காவல் நிலையத்தில் என்னை வைத்திருந்தனர். அது லாக்கப் அல்ல; அங்கிருந்த ஒரு பெஞ்சில் படுத்துவிட்டேன். என்னைத் தேடிக் கல்லூரி ஆசிரியர்களோ மாணவர்களோ வருவார்கள் என்ற நம்பிக்கை இருந்தது. யாரும் வரவில்லை. மதுரையில் எந்தப் பகுதி என்பதும் எனக்குத் தெரியாது. காவல்துறை ஆய்வாளர் போய்விட்டார்.

காலை உணவு உண்ண மறுத்துவிட்டேன். மதிய உணவும் சாப்பிடவில்லை. இப்படி இருந்தாலும் எனக்கு அடிபட்ட பின்னர் அச்சம் இருந்தது. வெகுகாலத்துக்கு முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓநாய்களுக்கு நடுவில் நிர்வாணமாக' என்ற கிழக்கு ஜெர்மனி படம் ஒன்றைப் பார்த்தேன். அதில் ஒரு கம்யூனிஸ்டை நாஜிகள் கொடுமையாகச் சித்திரவதை செய்வார்கள். அந்தக் காட்சியைப் பார்த்தபோது மதுரை காவல் துறையினர் தாக்கியதுதான் நினைவுக்கு வந்தது.

அன்று இரவு எட்டுமணியளவில் அந்த ஆய்வாளர் வந்தார். "நீ ஏன் சாப்பிடவில்லை?" என்று கேட்டார். "எனக்கு விருப்பமில்லை" என்று சொன்னேன். 'சரி சாப்பிடு' என்று கொஞ்சம் பரிவுடன் சொன்னார். கொண்டு வரப்பட்ட ஒரு மசாலா தோசையைச் சாப்பிட்டேன்.

"இன்னைக்கு காலேஜ்லே கொடியேற்றம் ரொம்பச் சிறப்பா இருந்துச்சி; எல்லா ஸ்டுடன்ட்ஸும் வந்திருந்தார்கள்" என்றார்.

காவல்துறையின் பொய்களைக் கேட்டு எனக்குப் பழக்கமில்லை. அவர் சொன்னதை நம்பினேன்.

நான் மீள முடியாத தனிமையில் தள்ளப்பட்டுள்ளதாக உணர்ந்தேன். மின் விளக்குகள் எரிந்தாலும் அந்தக் காவல் நிலையம் இருண்ட குகையாகத்தான் இருந்தது.

ஆய்வாளர் குரலை இறுக்கிக் கொண்டு "ஒழுங்கு மரியாதியாப் படிக்கிறதப்பாரு. போராட்டம் அதுஇதுன்னு பண்ணுனா எலும்பு முறிஞ்சிடும்" என்றார்.

அப்பொழுது முதலமைச்சராக இருந்த பக்தவச்சலம் கூட "போராடும் மாணவர்களின் எலும்பு முறியும்" என்றுதான் அறிவுரை கூறினார்.

அது எலும்பு முறிகிற காலம்.

என்னைப் போகச் சொன்ன அதிகாரிக்கு விடுதியில் கொண்டுபோய் விடவேண்டும் என்று தோன்றவில்லை. அந்த முன்னிரவில் காவல் நிலைய வாசலில் நின்று சாலையைப் பார்த்தேன். நல்லவேளையாகச் சட்டைப் பையில் கொஞ்சம் சில்லறை இருந்தது. அந்த வழியாக வந்தவரிடம் 'தெப்பக்குளத்துக்கு பஸ் எங்கே நிற்கும்' என்று கேட்டேன். நின்ற இடத்தின் மதுரை எனக்கு அந்நியமாய் இருந்தது.

தெப்பக்குளம் பேருந்து வந்தது. ■

# கண்ணி வெடிகளாய்....

பாதையெங்கும் கண்ணி வெடிகுண்டு
பயந்து ஒதுங்கி நடக்கிறேன்
கன்னி மகள் இன்று...

மானம் காக்க உடையணிந்தேன்.
மகிழ்ச்சிக்கு பதில் பயமே என்
மன உடையாகிப் போனதே.

கடைத் தெருக்களில்
பேருந்து பயணத்தில்
சின்னா பின்னமாகி
இடிபடுகிறேன்.

இழைக்கப்பட்ட இன்னல்களை
இதழால் விளக்க முடியவில்லை
இம்சையே இயல்பாகிவிட்டதே.

மானிட சமூகத்தில் நோய்கள் பல - அதில்
மருத்துவமனைகளில் மருத்துவம் சில
பாலியல் நோயும் இன்று பட்டியலானதே.

பதருக்குள் காக்கப்பட்ட அரிசி கூட
பளிச்சென்று மின்ன நினைக்கும் உலகம்
பாவப்பட்ட பெண்களின் நிலை
பரிதாபமாக நிற்கிறதே.

பச்சிளம் குழந்தை முதல்
பர்தா அணிந்த மூதாட்டி வரை
பாலியல் தொல்லை என்பது
பட்டறிவானதே.

கனவு காண அறை கூவல் கேட்டேன்
கனவில் கூட எனக்கு நேர்ந்த
வக்கிரமமே நினைவானதே

வாழ வழி விடுங்கள்
வாழ வழி சொல்லுங்கள்
இல்லையேல்
கன்னிகள் நாங்கள் கண்ணி வெடியாவோம்
மண்ணில் மாதர் நிலை உயரவே.

- ரா. அல்பின் லியோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றங்கள்

முன்தோன்றி
மூத்தக்குடி என்பதனால்
ஆதித்திராவிடர்கள் என்றழைத்தார்
அயோத்திதாசர்

பிறர் வீசிய
வார்த்தைகளாலே அரவணைத்து
தீண்டத்தகாதவர்கள் என்றழைத்தார்
அம்பேத்கர்

சுயசாதிப் பெயர்சொல்லி
தலைநிமிர்ந்து வாழவே
பறையர்களென முழங்கி மகிழ்ந்தார்
ரெட்டைமலை சீனிவாசனார்

கோயிலுக்குள் நுழையவிடாத எங்களை
கடவுளின் குழந்தைகளென்று
போதித்தார்
மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியார்

எங்களுக்கான ஒதுக்கீடுகளை
விகிதாச்சாரப்படித் தந்திட
அரசாங்கத்தால் அட்டவணையிடப்பட்டோம்
பட்டியலினத்தவரென

எல்லாப் பெயர்களுமே எங்களின்
விடுதலையை அடிமையாக்கிவிட
இப்போது எங்களை நாங்களே
அழைத்துக்கொண்டோம் தலித்துக்களென

இனியாவது இந்த எளவெடுத்த
மனிதக் கூட்டம்
எங்களையும் மனிதர்களாக
ஏற்றுவிடும் எதிர்பார்ப்பில்

**- அபிமானி**

## பீதியை ஊர்வலமாய் அனுப்பும் அறம்

வினாக்குறி தனது வடிவம் திரிந்து
கயிறாகத் தொங்கிக் கொண்டிருப்பதுடன்
புலர்கிறது நாள்

அலைகளைச் சுருட்டி எடுத்து
குடிசைகளைப் பிய்த்து எறிந்து
நிலத்தின் வேர்கள் காய்ந்து சருகாக
நிழலை நிரப்பிக் குடித்து
பனிக்காற்றின் ஈரம் துடைத்து
மிச்சமிருக்கும் பச்சையத்தை வழித்து
வயிறு நிரப்பும்

அச்சுறுத்தல்களை முன்னிறுத்தும் விஞ்ஞானம்
பீதியை ஊர்வலமாக அனுப்பும் அறம்
கருக்கலைப்பைச் செய்யும் துகள்கள்

கொப்பரைகளின் மிக அண்மையில்
உண்பன தின்பன பருகுவன
குழந்தைகள் மனிதர்கள்
கரை கடல் ஊர்வன பறப்பன
தாவரங்கள்

சூத்திரத்தை மீளச்செய்து
எழுதப்படுகிறது அழித்தல் விதி

கோரப்பசியுடன்
வெப்பம் உமிழும் கண்களுடன்
அங்காந்து ஏப்பமிடக் காத்திருக்கும்
குலைநடுங்கும் அச்சம் பரப்பும்
மரணக் கோபுரங்கள்

அணுவுடன் வாழ்தல் அரிது என்பர்
அணுவுடன் வாழ்தல் நன்று
இவ்வாறு சொல்கிறது நமது
ஆட்சிமொழி

திரைச்சீலைகளின் பின்புலத்தில்
ஏகபோகமாக நடைபெறுகிறது
அணு அரசியல்!

**- பூஅ. இரவீந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மடல் திறப்பு

மனிதர்கள் வாழும் நாடுதானா? தலையங்கம் மனதை பிசைந்தது. டெல்லி மாணவியின் பிரச்சினையின் சூடு ஆறுவதற்குள் மேலும் ஒரு மேற்கு வங்க மாநிலப் பெண்ணுக்கு நேர்ந்துள்ளது பாலியல் வன்புணர்வு. இரண்டுமே பெண் முதல்வர்களைக் கொண்ட மாநிலம் என்பதுதான் இங்கு வியப்பு! நாடு முழுதும் தலைவிரித்தாடும் சாதித் தீயின் கோர நாக்குதான் இவர்களை சப்பித் தள்ளியுள்ளது. இதுபோன்ற செய்திகள் மேலும் தொடராமல் பெண்களுக்கு ஆதரவான கடும் பாதுகாப்பு சட்டமுறைகள் தேவை. அம்பல மேட்டில் ஆம் ஆத்மி அருமையான கட்டுரை. கழுதைத் தேய்ந்து கட்டெறும்பு ஆன கதைதான் ஆம் ஆத்மியின் கதையும். துடைப்பம் எதுவும் துடைக்கவில்லை; மாறாக அதிலேயே இவர்களை ஓட ஓட விரட்டும் காலம் விரைவில் வரும்.

**- சூர்ய நிலா, சேலம்-9**

பிப்ரவரி 2014 'காக்கைச் சிறகினிலே' இதழ் வாசித்தேன். “நாளைய உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் வேதியல் போர்” என்கிற மிகவும் செறிவான கட்டுரையைத் தந்திருக்கிறார் தஞ்சாவூர் வி.அ.இளவழகன். எனினும், கட்டுரையில் உள்ள ஒரு தவறான தகவலை சுட்ட வேண்டிய அவசியம் உள்ளது. 1945 ஆகஸ்டு 9இல் நாகசாகியில் வீசப்பட்ட 'குண்டு மனிதன்' என்கிற அணுகுண்டில் 'பொலோனியம்' தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டதாக இளவழகன் கூறுகிறார். உண்மையில் 'பொலோனியம்' இயற்கைக் கதிரியக்கத் தனிமமே தவிர அணுகுண்டு செய்யத் தேவையான 'அணுக்கரு பிளவைத் தனிமம்' (Firsile Material) அல்ல. 'குண்டு மனிதன்' அணுகுண்டில் பயன்படுத்தப்பட்டது. அணுக்கரு பிளவைத் தனிமமான புளுட்டோரியம் 239 என்பதே உண்மை.

ஹீரோஷீமாவில் 'குட்டிப்பையன்' அணுகுண்டை வீசி பேரழிவை ஏற்படுத்திய பிறகு, நாகசாகியில் அணுகுண்டு வீச வேண்டிய அவசியம் அரசியல்ரீதியாக இல்லை என்றே சொல்லாம். ஆனால், 'செறிவூட்டப்பட்ட யுரேனியம் 235' தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட 'குட்டிப்பையன்' அணுகுண்டை மக்கள் வசிக்கும் ஹீரோஷீமாவில் வீசி சோதனை செய்ததைப் போல, புளுட்டோனியம் 239 தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட 'குண்டு மனிதன்' அணுகுண்டை மக்கள் நெருக்கடியான நாகசாகி நகரில் வீசி சோதனை செய்தார்கள் என்பதுதான் வரலாற்று உண்மை. இதற்கு அறிவியலாளர்களே முக்கிய காரணம். ஆட்சியாளர்களைவிடவும், பெரும்பாலான அறிவியலாளர்களே ஆபத்தானவர்கள் என்பதை உணர வேண்டும். சுற்றுலா போல இரண்டு மணிநேரம் சுற்றிப்பார்த்து விட்டு, கூடங்குளம் அணுஉலை மிகவும் பாதுகாப்பானது என அப்துல்கலாம் சொன்னதை இங்கே பொருத்திப் பார்க்கவும்.

**- சு.இராமசுப்பிரமணியன், இயற்பியல் பேராசிரியர் (பணிநிறைவு), தோவாளை**

நாம் புத்தரை புதைத்துவிட்டு, வெறும் போதி மரங்களை மட்டுமே வளர்க்கிறோம். ஹிட்லரினும் கீழானவர்களே, மிருக ஜனங்களே, விவேகானந்தரையும், நேதாஜியையும், தாகூரையும் தந்து தலைநிமிர்ந்த எங்கள் வங்கத்து மண், இன்று அவமானத்தால் தலைகவிழ்த்து கிடக்கிறதே.நிர்பயாவுக்காக குவிந்த ஊடக வெளிச்சம், இன்று மௌனத்தின் பெரும் சாட்சியாய். ஊடக வெளிச்சம் கூட மேல்நோக்கித்தான் பாயும் போலும். தேசியம் பேசும் ஆம் ஆத்மிக்கள்கூட டெல்லியோடு சுருங்கிப் போய்விட்டார்கள். தலையங்கம் நெருப்பின் பதிவு!

**- தங்க.முருகதாசன், மயிலாடுதுறை**

வழக்கம் போல் வளமான தலையங்கம் மற்றும் பல சிறப்பான அம்சங்களுடன் அமைந்துள்ள பிப்ரவரி இதழில் அனைத்தையும் குறித்து எழுத இட நெருக்கடி காரணமாய் இயலாதாயினும், “அம்பல மேட்டில் ஆம் ஆத்மி” எனும் கட்டுரை குறித்து சில வரிகள் எழுதாமல் தவிர்க்கவியலாது. நம் குடியரசுத்தலைவர் உரையின் அதிமுக்கியமான ஒரு வரியின் அடிப்படையில் மிக நேர்த்தியாய் முன்வைத்துள்ள இந்த கட்டுரையின் ஒவ்வொரு வரியுமே வாசிக்கும் ஒவ்வொருவரையும் வெகுவாய் சிந்திக்க வைப்பதாய் அமைந்துள்ளது. மிக நேர்மையான, நேர்த்தியான, கூர்மையான பார்வையுடன் அமைந்துள்ள இக்கட்டுரையை ஒரு செறிவார்ந்த திறனாய்வு என்றே குறிப்பிடலாம். கட்டுரைத் தளத்தின் தேர்ந்த சிற்பியான திரு.ஏகன் அவர்களின் இன்னுமொரு அற்புதம் - “அம்பல மேட்டில் ஆம் ஆத்மி”

**- சாந்தா தத், ஹைதராபாத்**

வேதியியல் போர் பற்றிய கட்டுரை மக்களை அதிர்ச்சியிலும் அச்சத்திலும் ஆழ்த்தியுள்ளது. தமிழர் பண்பாட்டை புலம்பெயர் மண்ணில் நிகழ்த்திக் காட்டியுள்ளது பெருமையளிக்கிறது. கழைக் கூத்தாடிகள் எப்பொழுதும் கூட்டாகவே வாழ்வார்கள். ஒற்றுமையின் பலத்தை உணர்த்துகிறவர்கள் அவர்கள். கதை சொல்லிகளின் தெய்வம் கவிதை அருமையாக இருந்தது.

**- கோ.பாலமுருகன், பூ.சந்திரசேகர், ச.அரவிந்த் விக்னேஷ், தி.கவியரசன்**
**தே.பிரித்தோ மேல்நிலைப்பள்ளி மாணவர்கள், தேவக்கோட்டை**



Owned and published by V.Muthaiah from 17/14, Diwan Rama Road, Purasaivakkam, Chennai - 600 084 and Printed by H.Dhanasekar at Sekar Offset Printers, New No. 50 ( Old No. 188/1), Big Street, Chepauk, Chennai - 600 005. Editor : V.Muthaiah

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.gnanalaya.org

# ஞானாலயா
## ஆய்வு நூலகம்

தமிழ்ப் பதிப்புலகின் ஆவணக் காப்பகம்



நிறுவனர்கள்
**பா.கிருஷ்ணமூர்த்தி**
**டோரதி கிருஷ்ணமூர்த்தி**



**ஆய்வாளர்கள்**
**பதிப்பாளர்கள்**
**ஆய்வு மாணவர்கள்**
**நூலாசிரியர்கள்**
**படைப்பாளிகள்**
**கலைஞர்கள்**
**கலை விமர்சகர்கள்**

**என பல்வேறு அறிவுத் தரப்பினரும்**
**பயன்கொள்ளும் அறிவுச்சோலை**

ஈழத் தமிழ் நூல்களுக்கென தனிப் பிரிவு

**ஈழத் தமிழர்கள் தங்கள் நூல்களை அனுப்பி வைக்கலாம்**

# அறிவுச் சோலை வளம்பெற
# ஆர்வலர்களின் உதவியை நாடி நிற்கிறது

ஞானாலயா, 6, பழனியப்பா நகர், திருக்கோகர்ணம் அஞ்சல் நிலையம்,
புதுக்கோட்டை - 622 002. தொலைபேசி : 04322-221059

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kaakkai Cirakinile (Monthly)
Registrar of Newspapers for India No. TNTAM/2012/43921
Postal Registration No. TN/CCN/588/2013-2015
Date of Publication : 25.2.2014

GK LEADERS
Institute for IAS, IPS, IFS & TNPSC Exams
Announces

# IAS 2014

## PRELIMINARY

POLITY (INCLUDING CURRENT AFFAIRS) ₹ 2000
ECONOMY (INCLUDING CURRENT AFFAIRS) ₹ 2000
HISTORY (INCLUDING CURRENT AFFAIRS) ₹ 2000
GEOGRAPHY (INCLUDING CURRENT AFFAIRS) ₹ 2000
SCIENCE & TECH AND ENVIRONMENT
INCLUDING CURRENT AFFAIRS ₹ 2000

## MAINS

| | |
|---|---|
| PAPER-I | Essay: ₹ 3000 |
| PAPER-II | General Studies- I: Indian Heritage and Culture, History and Geography of the World and Society. ₹ 3000 |
| PAPER-III | General Studies- II: Governance, Constitution, Polity, Social Justice and International relations. ₹ 3000 |
| PAPER-IV | General Studies-III: Technology, Economic Development, Bio diversity, Environment, Security and Disaster Management. ₹ 3000 |
| PAPER-V | General Studies- IV: Ethics, Integrity, and Aptitude. ₹ 3000 |

3032,'Z'BLOCK, 3RD STREET, 13TH MAIN ROAD, ANNA NAGAR WEST, CHENNAI-40
(ADJACENT TO NATESAN INSTITUTE OF CO-OPERATIVA MANAGEMENT)
CONTACT:044-26224044,9600033300 web:www.gkleadersiasips.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org